# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்புடகம்

வார இதழ் – இலவசம்

சனி, செப்டம்பர் 08, 2018. இதழ் - 29



அரங்கம் பத்திரிகை மட்டுநகரில் கிடைக்கும் இடம்

EAST LINK AGENCY POST OFFICE

196, திருமலை வீதி, மட்டக்களப்பு.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள் இது இலவசம்


**கடையடைப்பு மாத்திரந்தான் வழியா? ஏனைய வழிகள் பரிசீலிக்கப்பட்டனவா?**

பக்கம் - 03



**கட்டிளமைப்பருவ உணவுப் பழக்கம்**

வீட்டில் சமைக்கப்படும் மூவேளை உணவுக்குப் பதிலாக “விரைவுச் சாப்பாடு“ (fast food)

பக்கம் - 22




**நூற்றாண்டு காணும் தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலயம்.**

மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே திருமலை வீதியில் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுதான் தாண்டவன்வெளி,

பக்கம் - 08

**தமிழ் அரசியலின் தப்புத்தாளங்கள்**



தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கான தேவைகளைப் பற்றி அரசாங்கத்துடன் பேசுவதில்லை.

பக்கம் - 03



# மட்டக்களப்பில் கடையடைப்பு : தெருக்கள் வெறிச்சோடின


மட்டக்களப்பு மாவட்டத்தின் புல்லுமலைப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடிநீர் போத்தல் தொழிற்சாலை திட்டத்தை கைவிடவேண்டும் எனக் கோரி, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடையடைப்பு ஒன்று வெள்ளிக்கிழமை (7.9.2018) அனுஸ்டிக்கப்பட்டது.

”மட்டக்களப்பு மாவட்ட தமிழ் உணர்வாளர்கள்” என்ற அமைப்பு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த பூரண ஹர்த்தால் அமைதியான முறையில் அனுஸ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டதை காணமுடிந்தது. ஹர்த்தாலுக்கு ஆதரவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் தனியார் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு ஹர்த்தாலுக்கு ஆதரவு

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## ‘அடுத்தது “சிறை நிரப்பும்” போராட்டமே’



புல்லுமலையில், “போத்தலில் தண்ணீரை அடைக்கும் தொழிற்சாலை” பணிகளை நிறுத்த அடுத்த கட்டமாக சிறை நிரப்பும் போராட்டத்தை திட்டமிடுவதாக, மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த தமிழ் உணர்வாளர் அமைப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்துள்ளார்.

“நாம் திராவிடர்” என்னும் அரசியல் கட்சியை சேர்ந்த செங்கலடிப் பகுதியின் பிரபல வர்த்தகரான இவர்,

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## ஆலயம் ஆழிக்குள் அமிழும் அபாயம்!





## ‘அனர்த்தத்தை தணிப்பார்களா அரசியல்வாதிகள்?’

அம்பாறை மாவட்டத்தில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயம் ஆழிக்குள் (கடல்) அமிழும் பேராபத்தை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் பிரதேசத்தில் திடீரென ஆர்ப்பரித்த பேரலைகள் பாரிய கடலரிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆலயத்தின்

தொடர்ச்சி... (பக்கம் -23 )


MEGAM AGENCY

Import, Export Clearing Forwarding & Customs

Tel/Fax 2445383 Hotline (+94 77 773 2226)

megamagency@yahoo.com

#61,A.G HINNI APPUHAMY MW, COLOMBO -13

- உங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விடயங்களை / சுங்கப் பணிகளை திறம்படச் செய்து முடிக்க நாடுங்கள்..
- உங்கள் தனிப்பட்ட பொதிகள் மற்றும் கொள்கலன்களை சுங்கத்தில் இருந்து பெற்று உங்கள் வீட்டு வாசலில் ஒப்படைப்போம்.
- கொழும்பில் இருந்து வீடுகள் மற்றும் கம்பனி பொருட்களை இலங்கையின் அனைத்து இடங்களுக்கும் மாற்றிகொடுக்க நம்பிக்கையான இடம்.



தொடர்ச்சி...


## மட்டக்களப்பில் கடையடைப்பு : தெருக்கள் வெறிச்சோடின



தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களும் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

தனியார் போக்குவரத்துச்சேவை முற்றாக முடங்கியதுடன் இலங்கை போக்குவரத்து சேவை பஸ்கள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபட்டன. இருந்த போதும் அதில் பயணிப்போரின் அளவு மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது. தூர இடங்களுக்கான ஒரு சில போக்குவரத்துகள் நடைபெற்றன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாத காரணத்தினால் கல்வி நடவடிக்கைகள் முற்றாக முடங்கியிருந்தன.

அரச அலுவலகங்கள் இயங்கிய போதிலும் அங்கு மக்கள் செல்லாத காரணத்தினால் அலுவலகங்கள் வெறுமையாகக் காணப்பட்டன.



நேற்றுக் காலை மாவட்டத்தின் சில பிரதேசங்களின் வீதிகளில் டயர்கள் எரிக்கப்பட்டு, போக்குவரத்துகளை தடைசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புல்லுமலையில் அமைக்கப்பட்டுவரும் குடிநீர் போத்தல் தொழிற்சாலையினால் அப்பகுதி மக்கள் எதிர்காலத்தில் பாரிய நீர்த்தட்டுப்பாட்டை எதிர்நோக்க நேரிடும் என்று கூறி, அதனை தடுத்து நிறுத்துமாறு கடந்த காலத்தில் பல போராட்டங்கள் நடாத்தப்பட்ட நிலையில் தற்போது ஹர்த்தால் அனுஸ்டிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் கவனம் செலுத்தி குறித்த குடிநீர் தொழிற்சாலையினை நிறுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்த ஹர்த்தால் அனுஸ்டிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.




## வாகனங்கள் மீது தாக்குதல்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று நடந்த ஹர்த்தாலின் போது குறைந்தபட்சம் இரு பொதுமக்கள் போக்குவரத்து வாகனங்களாவது தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

மட்டக்களப்பில் இருந்து யாழ் நோக்கிச் சென்ற அரசாங்க போக்குவரத்து பேருந்து மீது கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை வேறு சில இடங்களிலும் சில வாகனங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

பல இடங்களில் மோட்டார் சைக்கிள்களில் வேலைக்கு சென்ற அரசாங்க ஊழியர்கள், கூட்டத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதன் காரணமாக தமது பொதுமக்கள் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். சிலர் மிரட்டப்பட்டும் உள்ளனர்.

தொடர்ச்சி...

## ‘அடுத்தது “சிறை நிரப்பும்” போராட்டமே’

மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்ட வகையில், தமிழர்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுவதை தடுப்பதே தமது போராட்டங்களின் முழு நோக்கம் என்கிறார்.

இதேவேளை, இந்த “தண்ணீர் போத்தல் தொழிற்சாலை”க்கு எதிரான போராட்டங்களை ஆரம்பம் முதல் முன்னெடுத்துவந்த நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனும் நேற்றைய ஹர்த்தால் ஏற்பாடுகளுக்கு தனது பூரண ஆதரவை வழங்கியிருந்தார். ஜனாதிபதியுடன் பேசியது உட்பட பல வகைகளிலும் இந்த பிரச்சினையில் தான் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கூறும் வியாழேந்திரன், மக்களுக்கு பாதகமான புல்லுமலை போத்தல் தொழிற்சாலையை மூட தன்னால் ஆன அனைத்து நடவடிக்கைகளையும் தான் எடுப்பேன் என்று கூறுகிறார். அடுத்த கட்டமாக இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்தும் தான் ஆராய்ந்துவருவதாகவும் அவர் கூறுகிறார்.

நேற்றைய போராட்டமானது ஒரு மக்கள் போராட்டம் என்றும் அதில் அரசியல் கட்சிகளுக்கு எந்தவிதமான தொடர்புளும் இல்லை என்றும் மோகன் கூறினார். அதேவேளை அனைத்து தமிழ் கட்சிகளும் தமக்கு ஆதரவு தந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றைய போராட்டம் பெரும் வெற்றியை தந்துள்ளதாக கூறிய வியாழேந்திரன், இந்த விடயத்தில் இறுதி வரை போராடுவோம் என்றும் கூறியுள்ளார்.

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்



இலங்கை மற்றும் மாலைத் தீவுகளுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக அலாய்னா பி டெப்லிட்ஸ் (Alaina B Teplitz) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த மே மாதம் 25ம் திகதி இந்த நியமனத்தை வழங்கியிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை அமெரிக்க செனட் சபையில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வெளிவிவகார சேவையில் நீண்ட காலம் பணியாற்றிய மூத்த அதிகாரியாக அறியப்படும் அலாய்னா பி டெப்லிட்ஸ், அமெரிக்க அரசுத்துறையில் கடந்த 1991ம் ஆண்டு பணியில் இணைந்துள்ளார்.

## நாளை பாதயாத்திரைக் குழுவினர் வெருகலம்பதியில்!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலய மஹோற்சவத்தையொட்டி கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகிய இப்பாதயாத்திரை 08 தினங்கள் தொடர்ச்சியாக பயணித்து நாளை(09) ஞாயிற்றுக்கிழமை வெருகலம்பதியைச் சென்றடையவுள்ளது.

காரைதீவிலிருந்து வேல்சாமி மகேஸ்வரன் தலைமையிலான பாதயாத்திரைக்குழுவினர் இப்பாதயாத்திரையில் வழமைபோல் இம்முறையும் ஈடுபட்டுள்ளனர்.காரைதீவு ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் கதிர்காம பாதயாத்திரீகர்கள் சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று(7) வெள்ளிக்கிழமை பனிச்சங்கேணி முருகனாலயத்தில் தங்கிய பாதயாத்திரைக்குழுவினர் இன்று(8) சனிக்கிழமை கதிரவெளி ஸ்ரீ திருச்செந்தூர் முருகனாலயத்தில் தங்கி நாளை(9) காலை வெருகலம்பதியைச் சென்றடைவர்.

வரலாற்றுப்பிரசித்திபெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் திங்களன்று 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(காரைதீவு நிருபர் சகா)

## மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 290 பயிலுனர் பட்டதாரிகள் நியமனம்!



தேசியகொள்கைகள் பொருளாதார விவகார அமைச்சு மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 290 பட்டதாரிகளை பயிலுனர் பட்டதாரிகளாக நியமித்துள்ளது.

அவர்களுக்கான நியமனக்கடிதங்கள் கடந்த 21ஆம் திகதி வழங்கப்பட்டன. ஒருவருட காலம் மாதமொன்றுக்கு 20ஆயிரம் ரூபா கொடுப்பனவு இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. ஒரு வருடத்தின் பின்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற பதவி வழங்கப்படும்.

அவர்களில் 150பேர் வலயகல்விப்பணிமனைகளுக்கு

தொடர்ச்சி... (பக்கம் -23 )


## சதா சகாய அன்னை திருத்தல பெருவிழாவில் 'சகாயத்தாய்' நூல் வெளியீடு



மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் வரலாற்றுச்சிறப்புமிக்க திருத்தலமான ஆயித்தியமலை, சதா சகாய அன்னையின் 64வது வருடாந்த திருவிழாவானது ஆகஸ்ட் 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டம்பர் 2ம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற பெருவிழா கூட்டுத்திருப்பலியுடன் நிறைவுபெற்றது. 01ம் திகதி சனிக்கிழமை திருத்தலத்தை நோக்கிய பாத யாத்திரையானது புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்திலிருந்தும், செங்கலடி புனித நிக்கொலஸ் தேவாலயத்திலிருந்தும் ஆரம்பமாகி திருத்தலத்தினை சென்றடைந்தது. இதில் பல இடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான இறைமக்கள் பக்தியுடன் கலந்துகொண்டனர்.

பெருவிழா திருப்பலியில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.எம். உதயகுமார், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் கௌரவ தி.சரவணபவன், ஜனாதிபதியின் நல்லிணக்கத்திற்கான இணைப்பு செயலாளர் டாக்டர் கோல்டன் பெர்னாண்டோ மற்றும் இராணுவ பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர். பெருவிழா நிறைவில் மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் சிறப்பு நிகழ்வாக திரு.ஜே. எச்.இரத்தினராஜா அவர்களது தொகுப்பில் உருவான அன்னையின் திருப்பட வரலாறு, ஆயித்தியமலை திருத்தல வரலாறு, அன்னையின் நவதின வேண்டுதல்கள் அடங்கிய “சகாயத்தாய்” என்னும் வரலாற்று நூலும் வெளியிடப்பட்டது.

# தமிழ் அரசியலின் தப்புத்தாளங்கள்



தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கான தேவைகளைப் பற்றி அரசாங்கத்துடன் பேசுவதில்லை. இதற்கு அவர்கள் சொல்லும் காரணம், "நாங்கள் கோருவது உரிமை அரசியலே தவிர, சலுகை அரசியல் இல்லை" என்பதுவாகும்.

இதைப்பற்றிய விவாதங்களும் விளக்கங்களும் தாராளமாக நிகழ்ந்த பிறகும் இந்த வேதாளம் இன்னும் முருங்கையை விட்டு இறங்கவேயில்லை.

ஆனால், இதற்குப் பின்னே இருக்கிற விசயந்தான் சுவாரசியமானது. நமது கவனத்திற்குரியது.

உரிமையைத் தவிர, சலுகைகள் எதையும் பெறவே மாட்டோம் என்று சொல்கிற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர், மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்களின் கால்களைப் பிடித்துக் கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கெஞ்சிக் கேட்டு சில வேலைகளைத் தங்கள் பகுதிகளில் செய்து விட்டு தங்களின் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு திரிகிறார்கள்.

இதற்காக இவர்கள் மலையக அமைச்சர்களைக் குளிர்விக்கப்படுகிறபாடு கொஞ்ச நஞ்சமல்ல. மலையக அமைச்சர்கள் வடக்குக் கிழக்குக்கு வந்து விட்டால் ஆராத்தி எடுப்பது முதற்கொண்டு கொழும்புக்குப் போகும்போது எடுத்துச் செல்லும் உபாகரப் பொருட்கள் வரையில்... ஸ்.. அப்பப்பா..

இது ஒரு பெரிய காவடி. (காமடி)

இந்தத் தகவலைச் சொல்லிச் சிரித்ததே மலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைவர் ஒருவர்தான்.

அந்த அரசியல் தலைவர் சொன்னார், "இப்பிடி எங்ககிட்ட கேட்டு (கரைச்சல் தந்து) தங்களோட தேவைகளைப் பெறுவதை விட, இவங்களே (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே) அரசாங்கத்திடம் நேரடியாக மக்களுக்கான நன்மைகளைப் பெறலாமே?!" என.

"இதை நீங்களே அவர்களிடம் சொல்லலாமே!" என்றேன்.

"நாங்க பல தடவை சொல்லிட்டம். ஆனா அவங்க கேக்கிற மாதிரித் தெரியேல்ல" என்றார் அவர்.

நான் அவருக்குச் சொன்னேன், "இலங்கையில் மலையக மக்களின் வரலாறு ஏறக்குறைய 200 ஆண்டுகள்தான். ஆனால் அவர்கள் இன்று அரசியலில் பலமானதொரு தரப்பாக மாறியிருக்கிறார்கள். சில பல குறைபாடுகள், விமர்சனங்கள், மறுபார்வைகள் இருந்தாலும் இலங்கையின் யதார்த்த நிலை, பாராளுமன்ற அரசியல் முறைமை போன்றவற்றைக் கவனத்திற் கொண்டு பார்த்தால் மலையகத் தரப்பின் வளர்ச்சியும் முன்னேற்றமும் பெரியது. ஆனால், வடக்குக் கிழக்கு நமது பாரம்பரியப் பிரதேசம், தமிழர்களே இலங்கையின் மூத்த குடிகள், ஆதிக்குடிகள், ஆட்சிச் சிறப்புகள் ஆயிரத்தைக் கொண்டோர் என்றெல்லாம் பெருமை பேசிக் கொண்டிருக்கிற வடக்குக் கிழக்கு மக்களும் அவர்களுடைய தலைமைகளும் இன்று உங்களிடம் (மலையக சமூகத்தினரிடத்திலே) இரந்து வாழும் நிலையில்தான் உள்ளனர். இதற்குள் உலக மகா அரசியல் விளக்கங்கள் வேறு" என்று.

எழுந்து என்னுடைய கைகளை அவர் பற்றிப் பிடித்து கட்டி அணைத்தார்.

**கருணாகரன்**

அவருக்கு மேலும் சொன்னேன், "உங்களை (அமைச்சர்களை) இப்பொழுது (அமைச்சர்களாக பதவியில் இருக்கும் வரையில்) அவர்கள் அங்கே அழைத்து மதிக்கிறார்கள். இங்கே கொழும்புக்கு வரும்போதும்கூட உங்களைக் கனம் பண்ணுகிறார்கள். ஆனால், இதே மதிப்பை மலையக மக்களுக்கோ வடக்குக் கிழக்கில் உள்ள இந்திய வம்சாவழியினருக்கோ இவர்கள் கொடுப்பதில்லை. இதுதான் அவர்களுடைய தந்திரோபாயம். தாங்கள் சுத்தவாளிகள் என்று காட்டிக் கொள்வது. அதேவேளை தந்திரமாகக் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வது. மறுபக்கத்தில் வேறுபாடுகளையும் நுட்பமாகப் பேணிக் கொள்வது..." என்று.

அவர் பேச்சற்றுச் சில கணங்கள் அப்படியே உறைந்து போயிருந்தார்.

# போராட்ட அரங்கில் "அரங்கம்"!





பொத்துவில் தமிழ் மக்களின் காணி மீட்புப்போராட்டச் செய்தி கடந்த வார அரங்கத்தில் தலைப்புச் செய்தியாக வந்ததை மிகவும் ஆவலோடு அந்தப் போராட்டக்களத்தில் கடந்த 25 தினங்களாக அரங்கிலிருப்போர் பார்வையிடுவதைக் காணலாம்.

படங்கள் வி.ரி.சகாதேவராஜா.

# கடையடைப்பு மாத்திரந்தான் வழியா? ஏனைய வழிகள் பரிசீலிக்கப்பட்டனவா?



மட்டக்களப்பில் ஒரு கடையடைப்பு நடந்து முடிந்திருக்கிறது. பொதுமக்கள், ஆங்காங்கு தமது தேவைகளுக்காக சில இடங்களில் நடமாடியமை, தனியார் நிறுவனங்கள், கடைகள் மூடப்பட்டிருந்தமை, பள்ளிக்கூடங்களில் மாணவர் வரத்துக் குறைந்திருந்தமை ஆகியவற்றை கொண்டு பார்க்கின்ற போது இது ஓரளவு வெற்றிதான், அதை நடத்தியவர்களுக்கு.

கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தவர்களை பொறுத்தவரை, புல்லுமலை தண்ணீர் போத்தல் தயாரிக்கும் நிறுவனத்துக்கு எதிராக அவர்களால் நடத்தப்பட்ட இந்த கடையடைப்புக்கான காரணம் பொதுவில் மட்டக்களப்பில் உள்ள தமிழர்களால் வரவேற்கப்பட்டுள்ளது. காரணம் குறித்து பெரியளவில் விமர்சனங்கள் எதுவும் கிடையாது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என எவரும் இதனை எதிர்ப்பதாக பெரியளவில் கூறவில்லை.

ஆனால், ஹர்த்தால், கடையடைப்பு என்பது பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை குழப்பும் ஒரு விடயம் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருப்பதற்கும் வாய்ப்பு கிடையாது.

ஒரு காரியம் சட்டப்படி செய்யப் பட்டிருந்தாலும், பொதுமக்கள் நலனுக்கு அது பாதகமாக இருக்கிறது என்ற எதிர்ப்பு கிளம்பினால், அது குறித்து அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மீளாய்வு செய்ய முடியும். அதுவும் ஒரு மாவட்டத்தை சேர்ந்த பெரும்பான்மை மக்கள் அதில் அதிருப்தி அடையும் போது அரசாங்கம் அதனை செய்வதற்கு அதிக கடப்பாட்டை உடையதாக இருக்கிறது. அத்துடன் இந்த விடயத்தின், இனவாதத்துக்கோ ஏனைய வாதங்களுக்கோ இடம்கொடுக்க வேண்டிய தேவையும் இல்லை.

ஆனால், இங்கு பிரச்சினை என்னவென்றால், இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தவர்கள் மற்றும் இதற்கு ஆதரவு வழங்கிய ஏனைய அரசியல்வாதிகள் ஆகியோரைப் பொறுத்தவரை, ஒரு கடையடைப்பு என்ற நடவடிக்கையை எடுத்து, பொதுமக்களை சிரமங்களுக்கு உள்ளாக்குமளவுக்கு போக முன்னதாக, இந்த விடயத்தில் எடுப்பதற்கு அவர்களுக்கு எத்தனையோ நடவடிக்கைகள் இருந்திருக்கின்றன. அவற்றை அவர்கள் செய்துவிட்டு, இந்த போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தார்களா, அல்லது ஆதரவு தெரிவித்தார்களா என்பதுதான் இங்கு கேள்வி.

இந்த அரசியல்வாதிகள் பலர் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அரசாங்கத்துடன் நல்ல உடன்பாட்டில் உள்ளவர்கள். தமக்கும் அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கும் இடையில் இருக்கும் உறவை, இப்படியான காரியங்களை ஆரம்பக்கட்டத்திலேயே முடிவுக்கு கொண்டு வந்து தீர்வுகாண அவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும். அதுதான் அரசியல். அதுதான் அரசியல் இராஜதந்திரம்.

பொதுவாகவே பாராளுமன்றத்தில் ஒரு விடயத்தை உரத்துப் பேசிவிட்டால் தமது கடமை முடிந்துவிட்டது என்ற ஒரு போக்கு அண்மைக்காலமாக அரசியல் தலைவர்கள் மத்தியில் அதிகரித்துவிட்டது. அங்கு பேசாமலேயே பல விடயங்களுக்கு அவர்களால் தீர்வு காணமுடியும்.

அவையும் முடியாவிட்டால், சட்ட வழியில் ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்திருக்க வேண்டும். நாடாமன்ற மட்டத்தில், தமக்கு உள்ள சிறப்பான தொடர்பு, மதிப்பு, செல்வாக்கை இவற்றுக்கு பயன்படுத்தியிருக்க வேண்டும். இவை எதுவும் நடந்ததற்கான சமிக்ஞை எதுவும் இல்லாமலேயே ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து மக்களுக்கு சிரமத்தை தருவது அவ்வளவு வரவேற்கத்தக்க விடயமல்ல.

இப்படியான விடயங்களுக்கு மக்கள் தமது ஆதரவைத் தந்ததன் மூலம் அவர்கள் தமது பொறுப்பை, பொறுப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஆனால், அரசியல்வாதிகள் எந்த அளவுக்கு தமது "ஹோம்வேர்க்கை" முடித்துவிட்டு இந்த முடிவுக்கு வந்தார்கள் என்று எண்ணும்போது, இங்கு சங்கடமாகவே இருக்கின்றது.

அடுத்தகட்ட போராட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவாவது, இவை அனைத்தும் முயன்றுபார்க்கப்பட்டதா என்பதையாவது அரசியல்வாதிகள் மக்கள் முன்பாக வெளிப்படைத்தன்மையுடன் விளக்க வேண்டும்.

**பூபாலரட்ணம் சீவகன்**

இல்லாவிட்டால், இந்த பிரச்சினைக்கு எவ்வளவோ போராட்டத்தை நடத்தியும் தீர்வு காணப்படமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடவும் முடியும். இப்படி தீர்வே இல்லாமல் போராட்டம் முடிவுக்கு வந்த மிகச் சமீப அனுபவம் நமக்கு பெரிதாகவே இருக்கிறது. அது மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்யும். போராட்டங்களும் திசைமாறலாம்.



# பட்டறிவு

## சுனிலா அபேசேகர (1952-2013) : நம் காலத்து நாயகி

90களின் நடுப்பகுதியில் ஒரு நாள் நடந்த சம்பவம் இது. திம்பிரிகஸ்யாயவிலுள்ள எமது “சரிநிகர்” அலுவலகமும் சுனிலாவின் இன்போர்ம் நிறுவனமும் எதிரெதிரில் அலுவலகங்கள் இருந்தன. எமது சகோதர நிறுவனமும் கூட.

சக தமிழ் பணியாளர்களின் பாதுகாப்பில் அனைத்து சிங்கள நண்பர்களும் மிகுந்த அக்கறை எடுப்பார்கள். அப்படி பல சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. அது இருக்கட்டும். எனக்கு ஒரு நாள் நேர்ந்தத்தை பதிய வேண்டும்.

ஒரு நாள் காலியில் உள்ள தோழர் ஒருவரை சந்திப்பதற்காக சென்ற இடத்தில் திரும்பி வர இரவு பஸ்சும் இன்றி நான் சிக்கிவிட்டேன். அது ஒரு கிராமம் அங்கிருந்து தொலைபேசியில் அறிவிக்கக் கூட வசதி இல்லை. இருட்டிய பின்னர் அவர்கள் என்னையும் வெளியில் அனுப்புவதாக இல்லை. வழமையாக நான் எங்கு சென்றாலும் இரவில் தங்கும் நிலை ஏற்பட்டால் நான் பத்திரமாக இருப்பதை வீட்டுக்குத் தெரிவித்து விடுவேன். அன்று அதற்கு வழியில்லை என்றாகிவிட்டது.



விடிந்ததும் கிளம்பத் தயாராக இருந்தேன்.

அன்று விடியவே அந்த கிராமத்திலிருந்து ஒரு மாட்டு வண்டிலை பிடித்து சந்திவரை வந்து இன்னொரு ட்ரக்டரில் என்னை ஏற்றிவிட்டார் தோழர். அங்கிருந்து டவுனுக்கு வந்து, காத்திருந்து பஸ் பிடித்து கொழும்பு வந்து, கொழும்பில் இருந்து நேராக அலுவகத்திற்கு வந்து சேர்ந்தேன். சற்று பின்னேரமாகியிருந்து.

அங்கு அலுவலகம் அல்லோல கல்லோலமாக இருந்தது. என்னைத் தூரத்தில் கண்டவுடன் அங்கு அலுவலக பணியாளர் அதோ “சரா” வருகிறார் என்று சிங்களத்தில் கத்திய சத்தம் கேட்டதும் அலுவலகத்தின் உள்ளிருந்து சக நண்பர்கள் பதட்டத்துடன் வெளியே வந்தார்கள். அருகில் உள்ள இன்போர்ம் அலுவலகத்திலிருந்தும் நண்பர்கள் வந்து என்ன நடந்தது என்று பதற்றமாக கேட்டார்கள்.

அவர்களைப் பார்த்து நானும் பதற்றமடைந்தேன். எங்கு போயிருந்தாய் உன்னை காணவில்லை என்று ஊடக செய்திகள் வரை போய் விட்டது. நான் நடந்ததைக் கூறினேன். சுனிலா அங்கிருந்து வந்து என் மண்டையில் ஒரு அடி அடித்தார்.

“வீட்டுக்கு நீ நேற்று வரவில்லை என்று அம்மா காலையில் தொடர்பு கொண்டு கூறினார். நாங்கள் பதற்றப்பட்டு மங்களவுக்கு தெரிவித்தோம் (மங்கள சமரவீர: ஒரு சமயத்தில் நம்முடன் நட்புடன் இருந்த இன்றைய அமைச்சர், அன்றைய ஊடக அமைச்சர்). உன்னைக் கடத்திக் கொண்டு போயிருக்கலாம் என்ற பயத்தில் சற்று கடுமையாகவே நாங்கள் உரையாடினோம். பொலிஸ் நிலையங்களில் அப்படி ஒருவர் உள்ளே இல்லை என்றும் பொலிஸ் மா அதிபரும் கூறிவிட்டார். அப்படி கண்டு பிடித்தால் அறிவிப்பதாக கூறியிருக்கிறார். இங்கே நாங்கள் ஏனைய ஊடகங்களுடனும் தொடர்புகொள்ள தயாராகிக் கொண்டிருக்கிறோம். நீ ஹாயாக வந்து இருக்கிறாய்...”

மற்ற நண்பர்கள் சூழ இருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலர் இடைக்கிடை என்னை திட்டித் தீர்த்துக்கொண்டிருந்தார்கள். குற்றவாளியாக அதிர்ச்சியடைந்து இருந்தேன்.

ஏதாவது ஒரு வழியில் எமக்கு நீ தகவல் தந்திருக்க வேண்டும் என்பதே அனைவரது ஆத்திரத்திலும் இருந்த சாராம்சம். நான் காலி டவுனில் அதை செய்திருக்கலாம். எனது தவறை நினைத்து வெட்கித்தும், என்னிலே ஆத்திரமும் கொண்ட தருணம் அது. இவ்வளவு அசட்டையாக நான் பாதுகாப்பு விடயத்தில் பொதுவாக இருந்ததில்லை. அன்று எனக்கு பெரிய பாடம் கிடைத்தது. என்னில் அக்கறை கொண்டவர்களை நான் இப்படி பதற்றத்துக்கும், பயத்துக்கும் உள்ளாக்கியிருக்கிறேன். குறிப்பாக என்னை எந்த இடத்திலும் தன் தத்துப் பிள்ளையாக அறிமுகப்படுத்தும் சுனிலாவை நான் காயப்படுத்திவிட்டேன் என்று மிகுந்த வேதனைப்பட்ட நாள் அது.

சுனிலா உலகறிந்த ஒரு மனித உரிமை செயற்பாட்டாளர். அவரின் கருத்துக்களை அசட்டை செய்ய மாட்டார்கள். எனவே சுனிலா மீண்டும் உரிய இடங்களுக்கு நான் பத்திரமாக இருப்பதை அறிவித்தார்.

சுனிலா இறப்பதற்கு சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் 2012 ஒக்டோபர் மாதம் ஒஸ்லோ வந்திருந்தார். ஒஸ்லோவில் மனித உரிமை குறித்த ஒரு கலந்துரையாடலை எனது நிறுவத்தில் ஒழுங்கு செய்தேன். அப்போது பல இடங்களில் இலங்கையின் மனித உரிமை மீறல் குறித்து உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார், ஏற்கெனவே திட்டமிட்டபடி என்னையும் அங்கெல்லாம் அழைத்துச் சென்றார். சுனிலா தங்கியிருந்த ஹோட்டலுக்கு சென்று அழைத்துக் கொண்டு வெளியே வரும்போது வெளியில் மழைத்தூறலும், குளிருமாக இருந்தது. நான் எப்போதும் போல எனது ஜெக்கட்டை மூடாமல் அனாயசமாக குடையை அவருக்குப் பிடித்தேன். என் தலையில் அதே குட்டு விழுந்தது.

“முதலில் ஜெக்கட் சிப்பை இழுத்து மூடு. குளிராக இருக்கிறது. விளையாடுகிறாயா... வியாதியை இழுத்துக்கொள்....”

அன்று தான் நான் அந்த இறுதிக் குட்டை வாங்கினேன். அது தான் நான் அவரை சந்திக்கும் இறுதி நாள் என்று எனக்கு தெரிந்திருக்கவில்லை.

சுனிலா புற்றுநோயால் போராடிக் கொண்டிருந்தார். ஆனால் அவரை இறுதியாக சந்தித்த வேளை தான் மிகவும் தேறிவிட்டதாகவும், ஆபத்தான கட்டத்திலிருந்து மீண்டுவிட்டதாகவும் கூறினார். அப்போது அவர் நெதர்லாந்தில் சிறிது காலம் வாழ்ந்து வந்தார். நோயுற்று இருந்த நிலையிலும் இலங்கை திரும்பமுடியாத படி அவருக்கு உயிரச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டிருந்தது. தமிழ் மக்கள் மீதான இலங்கை

என்.சரவணன்

அரசின் அக்கிரமங்களை உலகெங்கும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்ததால் மகிந்த அரசாங்கத்தின் அச்சுறுத்தலுக்கு ஆளாகி நாடு திரும்ப முடியாத நிலையில் இருந்தார். அவரை கிட்ட இருந்து கவனிக்க என்று சுமி, செபாலி இன்னும் சில சக தோழிகள் இலங்கையில் இருந்து மாறி மாறி நெதர்லாந்து வந்து தங்கியிருந்து அவரைக் கவனித்துச் சென்றார்கள்.

“நான் ஒரு அகதியைப் போல நாட்டுக்கு நாடு திரிந்து அலைந்து என்னைத் துரத்திய எமனிடமிருந்து தப்ப முயற்சித்தேன். ஆனால் எமன் எனது உடலுக்குள்ளேயே ஒளிந்திருந்தான்” என்று அவர் இன்னொரு நண்பியிடம் தெரிவித்திருந்தார்.

சுனிலாவின் வீடு புற்றுநோயாலும் வேறு உடல் உபாதைகளாலும் பாதிக்கப்பட்ட பல நட்புகளுக்கு உறைவிடமாக ஒரு காலத்தில் இருந்ததை நான் அறிவேன். பேராசிரியர் மௌனகுருவுக்கு இதய சத்திரிசிகிச்சை செய்து சுனிலாவின் வீட்டில் இருந்தபோது அவர் அங்கு தான் இருக்கிறார் என்பதை அவரின் வீட்டுக்கு அருகிலேயே இருந்த எங்கள் அலுவலகத்தில் எவருக்கும் தெரியாதிருந்தது. பார்க்க வருபவர்களால் அவருக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடும் என்று கவனமாக இருந்தார்.

இலங்கையில் அவரோடு சேர்ந்து பணியாற்றிய காலம் மிகவும் பசுமையானது. நகைச்சுவை உணர்வை எப்போதும் பேணுபவர். அவருடன் நிறைய பயணம் செய்திருக்கிறேன். பல்வேறு விடயங்களை விவாதித்து, உரையாடியிருக்கிறேன். பெண்ணியம், மனித உரிமைகள் சார்ந்த கூட்டங்கள் பலவற்றில் அவரின் மொழிபெயர்ப்பாளராக நான் இயங்கியிருக்கிறேன். எங்கும் என்னை தனது தத்துப் பிள்ளை என அறிமுகப்படுத்துவது அவரது வழக்கம்.

உயிரச்சுறுத்தல் காரணமாக இலங்கையை விட்டு பலரும் தப்பிப் போவதற்கு தனிப்பட்ட ரீதியில் நூற்றுக்கணக்கானோருக்கு அவர் உதவி செய்திருக்கிறார். அது மட்டுமன்றி பின்னர் அவர்கள் தஞ்சமடைந்த நாடுகளில் அகதி அந்தஸ்து பெறுவதற்கு சுனிலா காரணமாக இருந்திருக்கிறார்.

மனித நேயம் மிக்கவராக மட்டுமல்ல சிறந்த மனித உரிமையாளராகவும் உலகளவில் அறியப்பட்டிருந்தார் சுனிலா. 1999ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை சிறந்த மனித உரிமையாளருக்கான விருது அவருக்கு அன்றைய செயலாளர் நாயகம் கொபி அனானால் வழங்கப்பட்டது.

அவர் போன்ற ஒரு பெண் ஆளுமையை நான் இதுவரை இலங்கையில் கண்டதில்லை. 70களின் இறுதியில் புரட்சிகர மேடைகளில் அவரின் குரல் மிகவும் பிரசித்தம். ஜே.வி.பியின் செயற்பாடுகளில் தீவிரமாக செயற்பட்ட அந்த காலப்பகுதியில் “விமுக்தி கீ” (விடுதலை கீதம்) என்கிற பிரச்சாரக் குழுவில் முக்கிய பாடகி. மனித உரிமையாளர், பெண்ணுரிமையாளர், தமிழர்களின் உரிமைக்காகவும் இறுதிவரை குரல்கொடுத்தவர். ஒட்டுமொத்தத்தில் சகல ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் சகல தளங்களிலும் போராடியவர் அவர். சில திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார். பின்னணிப் பாடகியாகவும் குரல் கொடுத்திருக்கிறார்.

அவர் நம்மை விட்டுப் பிரிந்து செப்டம்பர் 9ஆம் திகதியோடு சரியாக ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. அவர் “நம் காலத்து நாயகி”. நம் காலத்து வீராங்கனை.



# சத்துராதிகளால் வேட்டையாடப்பட்ட சத்துருக்கொண்டான்

## பாதாளப் பார்வை

- அவதானியார் -

1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் சுற்றி வளைக்கப்பட்ட சத்துருக்கொண்டான், கொக்குவில், பன்னிச்சையடி, பிள்ளையாரடி ஆகிய கிராமங்களில் வசித்த அப்பாவியான பொதுமக்கள் சங்காரம் செய்யப்பட்டு இருபத்தெட்டாவது வருடம் நிறைவு பெற்று விட்டது.

இக்கிராமங்களில் இச்சுற்றி வளைப்புக்கு முன்பே பலர் காணாமல் போயிருந்தனர்.

அதனால் பயத்திலிருந்த மக்கள் இச்சுற்றிவளைப்பு ஆரம்பமானதும் கலங்கி நின்றனர். “எஞ்சியிருக்கும் ஆண்களையும் சுட்டுக் கொல்லப் போகிறார்கள்“ என்ற பய உணர்ச்சி இக்கிராமங்களை ஆட்கொண்டது.

சீருடையுடன் கையில் துப்பாக்கி ஏந்தியவர்களுடன், சிவில் உடையான கறுப்பு ரீசேட் அணிந்து நன்றாக தமிழ் பேசியவர்கள் உடன்வந்திருந்தார்கள்.




“உங்களுக்கு எதுவும் நடக்காது கொமாண்டர் உங்களுடன் பேச விரும்புகின்றார்.“ இதுதான் அவர்கள் கூறிய வார்த்தை.

அவரவர் மனையிலிருந்து வெளியே அழைக்கப்பட்ட மக்களை இரவு ஏழு மணி-வரை அப்படியே நிற்பாட்டி வைத்திருந்தனர்.

கொக்குவில், பிள்ளையாரடி, பன்னிச்சையடி, தன்னாமுனை ஆகிய பகுதி மக்கள் சத்துருக்கொண்டான் நோக்கி கொண்டு செல்லப்பட்டனர்.

ஏற்கனவே காணாமல் போன தங்கள் கணவன்மாரைப் பற்றி அறி-யலாம் தங்கள் பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு கோரலாம் என்ற நம்பிக்கையில் கொமாண்டரைக் காண்பதற்காக பலர் முண்டியடித்து ஓடிச் சென்றனர்.

எதிர்பார்ப்பு ஏமாற்றமாகியது.

இரவு பத்துமணியளவில் எதிர்பார்ப்புக்கள் அத்தனையும் தவிடு பொடியாகியது. கைது செய்த அனைவரையும் தங்கள் கையிலிருந்த துப்பாக்கியினால் சுட்டுத் தள்ளினார்கள். சத்துருக் கொண்டானில் தொடர்ந்து வேட்டொலிகள் கேட்ட வண்ணம் இருந்தன.

சுடப்பட்டு விழுந்தவர்களை ஒவ்வொருவராக இழுத்துக்கொண்டு போய் வாளினால் வெட்டினார்கள்.

உடலங்களை துண்டு துண்டாக துண்டாடி கிடங்குகளில் போட்டனர். எப்படியோ தப்பிய ஒருவர் மறைவில் இருந்து இக் கோரக் காட்சியை தன் கண்களால் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் விறகு வெட்டி ஒருவரின் மகன்.

இவரின் வாக்குமூலத்தை பின்னர் மட்டக்களப்பு சமாதானக்குழு பதிவு செய்தது. தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்க்கப்பட்ட வாக்கு மூல ஒலிநாடா வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டது.

சுட்டுக்கொல்லப்பட்டு, வெட்டிப்புதைக்கப்பட்டவர்களில் இளம் தாய்மார்களும் குழந்தைகளும் வயோதிபர்களும் அடங்கியிருந்தனர்.

சாட்சியால் கிடைத்த சான்றுகள் திருமதி நற்குணசிங்கம் சித்ராதேவி என்ற இருபதுவயது இளந்தாய் தனது குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு தப்பியோட எத்தனித்தார்.
அதனைக் கண்ட கொலைஞர்கள் அவரை நோக்கி சரமாரியாக சுட்டனர். சித்ராதேவியும் அவர் இடுப்பிலிருந்த குழந்தையும் மாண்டனர். இடுப்பிலிருந்து தாயோடு சுட்டுக் கொல்லப்பட்ட அந்த நாலுமாதக் குழந்தையின் பெயர் வேணுராஜ்.

தாயார் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து அவரது இரு பிள்ளைகளும் தாயார் மேல் விழுந்து அழுது புரண்டனர்.

அவர்களை நோக்கியும் துப்பாக்கிகள் முழங்கின. இரண்டு பிள்ளைகளும் பிணமானார்கள். அவர்கள் இருவரையும் வெட்டி, துண்டுகளாக்கி கிடங்கில் போட்டனர். அப்பிள்ளைகளில் மூத்த மகனின் பெயர் சிவதாசன். அடுத்த பெண் பிள்ளையின் பெயர் சிவதர்சினி.

அடுத்து, மூத்தவன் வைரமுத்து வயது 58, மனைவி பூமணி வயது46, பிள்ளைகள் 8 வயதில் சர்மிளா என்னும் மகள், 6 வயது நிரம்பிய மகன் ஜோதி வடிவேல் இக்குடும்பமும் துப்பாக்கியினாலும், வாளி-னாலும் கூண்டோடு வேரறுக்கப்பட்டது.

கோபால் சவுந்தரராஜா வயது 26 மனைவி தங்கேஸ்வரி வயது 24 மகள் காயந்தினி வயது 2 பிரியா 8 மாதக் குழந்தை அந்தப் பிஞ்சுக் குழந்தையுடன் சேர்த்து அக்குடும்பத்தினரும் மரணக்குழிக்குள் வேட்டையாடி வீசப்பட்டனர்.

நடக்கமுடியாமல் தள்ளாடிக் கொண்டு நின்ற மூத்ததம்பி பெரியதம்பிக்கு



வயது 74. அவர் மனைவிக்கு 73 வயது பொக்குவாய் பிளக்க அவர்களும் செத்து வீழ்ந்தனர்.

இவைகள் வெறும் உதாரணங்கள் மட்டும்தான். கொல்லப்பட்டவர்களின் பெயர் பட்டியலை தரமுற்பட்டால் 184 பேரின் பெயர்களை தரவேண்டி இருக்கும்.

மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள் 4 மாதக் குழந்தையில் இருந்து 74 வயது முதியவர்களும் படையினரின் பயங்கரவாத ஒழிப்புக்கு விதிவிலக்கல்ல என்பதற்கே. செப்டம்பர் மாதம் பத்தாம் திகதி நடைபெற்ற கொலை வேட்டையில் பலியானவர்கள் பற்றிய புள்ளி விபரம் இதோ:-

| | | |
|---|---|---|
| சத்துருக்கொண்டான் | - | 38பேர் |
| கொக்குவில் | - | 47பேர் |
| பன்னிச்சையடி | - | 37பேர் |
| பிள்ளையாரடி | - | 62பேர் |
| மொத்தம் | - | 184பேர் |

இந்த மனித வேட்டையில் முன்னின்றவர்களின் இரண்டு பெயர்கள் பிர-பலமாக அக்கால கட்டத்தில் அடிபட்டன.

ஒருவர் கப்டன் முனாஸ். இன்னொருவர் புளொட்மோகன். பின் புளொட் மோகன் இலங்கை இராணுவத்தில் ஒரு அதிகாரியாக இருந்தவர் என்பதையும் வாசகர்களுக்கு இந்நேரத்தில் நினைவுபடுத்துகிறேன்.

பற்றிஷியா லோறன்சின் ஆய்வறிக்கை
---------------------------------------------------------------

மனித வர்க்கவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அமேரிக்க பெண் ஒருவர் மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தார். அவரது பெயர் பற்றீஷியா லோரன்ஸ்.

ஜனாதிபதியாக சந்திரிக்கா பதவிக்கு வந்த பின்னர் கிழக்கில் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்க முன்னால் நீதியரசர் கே.பாலகிருட்டினர் தலை-மையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அவ்வாணைக்குழு தலைவருக்கு பற்றீஷியா லோரன்ஸ் எழுதிய கடிதத்தில் முனாஸ், மோகன் ஆகியோர் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பற்றீஷியாவோடு இன்னும் பலரும் நடந்த சம்பவங்களை கண்ணீருடன் விபரித்திருந்தனர். இராணுவத்தினர் அந்த ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்புக் கொடுக்க முன்வரவில்லை.
இருந்தும் கடும் சிரமங்களுக்கு மத்தியில் தன் விசாரணையை ஆணைக்குழு பூர்த்தி செய்தது.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் விசாரணைகளை நடாத்தியது. அந்த அறிக்கையில் கொல்லப்பட்டோர் பற்றியும் அதற்கு காரணமாணவர்கள் என்று மக்களால் சுட்டிக்காட்டப்பட்ட படையினர் போன்ற தகவல்கள் அடங்கியிருந்தன.

ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதி சந்திரிகா அவர்களிடம் 1997ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் கையளிக்கப்பட்டது.

இதன் பின்னர் அந்த அறிக்கைக்கு என்ன நேர்ந்தது என்பது யாருக்கும் தெரியாது.

அந்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்க நேர்ந்தால் படையி-னரிடையே புகைச்சல் ஏற்படும் என்று கருதியே அப்படியே அமுக்கி விட்டனர் என்கின்றனர் விமர்சகர்கள்.

மேலும், இன்று அரசிடம் விசாரணைக்குழு கேட்கும் தமிழ் கட்சிகள் கிழக்கில் மேற்படி கிராமங்களில் காணாமற் போனோர் தொட-ர்பான அறிக்கைக்கு என்ன நடந்தது, என்ற கேள்வியை எழுப்பத்தவறியே வருகின்றன. மட்டக்களப்பு மாவட்ட பா.உறுப்பினர்கள் கூட இவ்விடயத்தில் கவனம் செலுத்தாமல் இருந்து வந்ததும், வருவதும் வேதனைக்குரியதாகும்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்)

## பகுதி 17

தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முன்வைத்த யோசனைகள் வருமாறு:

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள இலங்கை முஸ்லிம்களின் வதிவிடங்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு சுதந்திரமான முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை அல்லது தனியான அரசியல் அமைப்பு உருவாக்கப்பட உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

01. பிரத்தியேகமான முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டம் ஒன்று தற்போதைய அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்படல் வேண்டும். இது பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப்பற்று, கரவாகு/நிந்தவூர்ப்பற்று ஆகிய இறைவரி உத்தியோகஸ்தர் பிரிவுகளையும் வேகம்பற்று தெற்கு உதவியரசாங்க அதிபர் பிரிவையும் உள்ளடக்கியதாகவும் இருக்கவேண்டும்.

02. மேற்படி புதிய நிருவாகமட்டத்திலுள்ள ஒவ்வொரு சமூகத்தினதும் குடிசன விகிதாசாரப்படி பாரம்பரிய வசிப்பிடங்கள், விவசாயக் காணிகள், இயற்கை வளங்கள் உள்ளடக்கப்பட்ட இனரீதியான பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படல் வேண்டும்.

03. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 24 வீதம் முஸ்லிம் குடிசன விகிதாசாரப்படி காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி / வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் பாரம்பரிய வசிப்பிடங்கள் தொழில் துறைக்கான நிலபுலங்கள், இயற்கைவளங்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்ட முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் / உதவியரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

04. திருகோணமலை மாவட்டத்திலுள்ள 29 வீத முஸ்லிம் குடிசன விகிதாசாரப்படி கிண்ணியா, மூதூர், தோப்பூர், தம்பலகாமம், குச்சவெளி ஆகிய பகுதிகளில் பாரம்பரிய வசிப்பிடங்கள், தொழில் துறைக்கான நிலபுலன்கள், இயற்கை வளங்கள்




ஆகியவை உள்ளடக்கப்பட்ட முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படல் வேண்டும்.

05. மன்னார் மாவட்டத்திலுள்ள 27 வீத முஸ்லிம் குடிசன விகிதாசாரப்படி எருக்கலம்பிட்டி, முசலி ஆகிய பகுதிகளில் பாரம்பரிய வசிப்பிடங்கள், தொழில் துறைக்கான நிலபுலன்கள், இயற்கை வளங்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்ட முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படல் வேண்டும்.

06. சம்மாந்துறை, காத்தான்குடி, கிண்ணியா ஆகிய பகுதிகளில் அவ்வப் பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகள் முஸ்லிம் பெரும்பான்மை குறையாதவாறு நகரசபைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

07. கல்முனையில் அப்பிரதேசங்களிலுள்ள பிரதேச சபையின் முஸ்லிம் பெரும்பான்மை குறையாதவாறு மாநகரசபை ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும்.

08. மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளூராட்சி அமைப்புக்கள் ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு பிரத்தியேக முஸ்லிம் நிர்வாக மாவட்டங்கள் பிரஸ்தாப மாவட்டங்கள் தோறும் அமைக்கப்படுதல் வேண்டும்.

09. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உருவாக்கப்பட்ட எல்லா முஸ்லிம் நிருவாக மாவட்டங்களும் பிரத்தியேக முஸ்லிம் தேர்தல் மாவட்டங்களாக கருதப்படுதல் வேண்டும்.

10. வடக்கு கிழக்கு மாநிலத்திலுள்ள எல்லா முஸ்லிம் நிருவாக / தேர்தல் மாவட்டங்களை உள்ளடக்கிய ஏறக்குறைய 5148 ச.கி.மீட்டர் (1988 சதுரமைல்) சனத்தொகை 525,000 உள்ள பிரதேசம், முஸ்லிம்கள் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு தனிச்சுதந்திரமான அமைப்பாக அமைய வேண்டும். 1000 ச.கி.மீட்டர் இடப்பரப்பும் 40,000 சனத்தொகையும் என்ற அடிப்படையில் முஸ்லிம் பெரும்பான்மை சபையில் 60 வீதம் முஸ்லிம்கள் 11 அங்கத்தவரையும் 30வீத தமிழர்கள் 5 அங்கத்தவர்களையும் 10வீத சிங்களவர்கள் 2 அங்கத்தவர்களையும் பிரதிநிதிப்படுத்துவர். (ஆதாரம்: ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் 13வது தேசிய மாநாட்டு மலர்.)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் முன்வைத்த யோசனையில் உள்ள உத்தேச முஸ்லிம் அரசியல் அலகின் நிலப்பரப்பானது அம்பாறை மாவட்டத்தின் வடக்கு எல்லைக்கிரமமான பெரிய நீலாவணையிலிருந்து தெற்கே பொத்துவில் வரை மக்கள் செறிந்துவாழும் 72 கிலோமீட்டர் நீளமான கரையோரப்பிரதேசத்தை அதாவது கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இதில் அக்கரைப்பற்றிலிருந்து தெற்கே பொத்துவில் வரையிலான கரையோரப் பிரதேசத்தில் தமிழ்மக்கள் முஸ்லிம் கலப்பின்றி வாழும் சுமார் 45 கிலோமீட்டர் நீளமான நிலப்பரப்பும் அடங்கும். இத்தனித்தமிழ்நிலப்பரப்பு தற்போதைய ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் தமிழர்கள் வதியும் வடபாதியையும் கொண்டுள்ளது. மேலும் உத்தேச முஸ்லிம் அரசியல் அலகின் கீழ் மேற்கூறப்பெற்ற தனித்தமிழ் நிலப்பரப்புடன் சம்மாந்துறை மற்றும் கல்முனை தேர்தல் தொகுதிகளில் வாழ் தமிழர்களும் பொத்துவில் தேர்தல் தொகுதியில் உள்ள காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்களும் அடங்குவர். அத்துடன் நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் "அட்டப்பள்ளம்" எனும் பழந்தமிழ்க் கிராமமும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் "திராய்க்கேணி" எனும் தமிழ்க் கிராமமும் மீனாட்சி அம்மன் ஆலயமும் லகுகல பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் பிரசித்திபெற்ற உகந்தை முருகன் கோவிலும் அடங்கும்.

இத்தகைய நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த யோசனை ஏற்கனவே சமூக பொருளாதார அரசியல் பின்னடைவுகளுக்கு உள்ளாகிப்போயிருக்கும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் இருப்பைத் தக்கவைத்து அவர்களின் நலன்களைப் பேணவும், அவர்களது தனித்துவம், நில-வுரிமை, பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்யவும் மாட்டாது.

கடந்த காலங்களில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தேர்தல் தொகுதிகளின் கீழும், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட உள்ளூராட்சி அலகுகளின் கீழும் வாழ்ந்த காரணத்தால் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்கள் வாழ்விடங்களை, வயற்காணிகளை, வணக்கத்தலங்களை,தமிழ்ப் பாடசாலைகளைப் பறிகொடுத்த வரலாற்று அனுபவங்கள் நிறைய இருந்தன. உத்தேச முஸ்லிம் அரசியல் அலகின் ஆளுகையின் கீழ் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் கொண்டுவரப்படுவார்களேயானால் இந்த ஆபத்து மீண்டும் தீவிரமாகும்.

மேலும் 1775 சதுரமைல் பரப்பளவைக்கொண்ட அம்பாறை மாவட்டத்தில் சுமார் 900 சதுரமைல்கள் அதாவது அரைவாசிக்கு மேற்பட்ட நிலப்பரப்பு அம்பாறை சிங்கள தேர்தல் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பொத்துவில் தேர்தல் தொகுதியில் உள்ள தமண( வேகம்பற்று தெற்கு) லகுகல ஆகிய சிங்களப் பெரும்பான்மை பிரதேச செயலாளர் பிரிவுகள் சுமார் 370 சதுரமைல்களைக் கொண்டுள்ளன. ஆகவே மொத்தமாகவுள்ள 1775 சதுரமைல் பரப்பில் 1270 சதுரமைல்கள் சிங்களப் பேரினவாத அரசுகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் கடந்தகாலங்களில் சிங்கள மயப்படுத்தப்பெற்று மீதியாக உள்ள சுமார் 505 சதுரமைல் பரப்பில்தான் இன்று தமிழர்களும் முஸ்லிம்களும் கலந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த யோசனையில் அம்பாறைத் தேர்தல் தொகுதி முற்றாகவே சிங்களப் பேரினவாதத்திடம் தாரை வார்க்கப்பட்டிருந்தது. அம்பாறை மாவட்டத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட நிலப்பரப்பை சிங்களப் பேரினவாதத்தின் கையில் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு, மீதி நிலப்பரப்பிலேயே தமிழர்களும் முஸ்லிம்களும் முடங்கிவிடுவது தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு நன்மையளிக்கப் போவதில்லை. தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிவகுக்கவும் மாட்டாது.

அன்றியும் அம்பாறைத் தேர்தல் தொகுதியை கிழக்கு மாகாணத்திலிருந்து எந்த நிபந்தனையின்றியும் சிங்களப் பேரினவாதத்திடம் தாரைவார்த்துவிட்டு தமிழர்களின் கடந்த அரை நூற்றாண்டிற்கும் மேற்பட்ட கால சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் அவர்கள் அடைந்த இழப்புக்களை ஈடுசெய்யப்போவதில்லை.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாமலும் அம்பாறை மாவட்டத் தமிழர்களுடன் கலந்தாலோசனை செய்யாமலும் அம்பாறை தேர்தல் தொகுதியை விலக்கி, முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முன்வைத்திருந்த தென்கிழக்கு மாகாணசபைக் கோரிக்கைக்கு அம்பாறை மாவட்டத் தமிழர்களுடன் கலந்தாலோசனை செய்யாமல் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாக ஊடகங்களில் அறிக்கையிட்டமை அப்போதைய அமரர் மு.சிவசிதம்பரம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு இழைத்த மற்றுமொரு "அரசியல் துரோகம்" ஆகும்.

உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை (தென்கிழக்கு) மாகாண நிலப்பரப்பின் குடித்தொகை 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் பின்வருமாறு அமைந்தருந்தது.

| முஸ்லிம் | தமிழர் | சிங்களவர் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 161,193 | 75,590 | 39,968 | 870 | 277,621 |
| 58.10% | 27.25% | 14.30% | 0.35% | 100% |

மேலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் இம் முஸ்லிம் பெரும்பான்மை தனியான மாகாணசபை யோசனை முன்வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஏற்கனவே அம்பாறை மாவட்டத் தமிழர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த முக்கியமான கோரிக்கைகளான கல்முனைத்தமிழ்ப் பிரிவு (சரலாகு வடக்கு), சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு (கோமாரி) ஆகிய தமிழ்ப் பெரும்பான்மை நிருவாக அலகுகள் / உள்ளூராட்சி அலகுகள் முஸ்லிம் அரசியல்வாதிகளின் எதிர்ப்புகள் காரணமாக நிறைவேற்றப்படாமல் கிடப்பிலே இருந்தன. இவை பற்றியோ உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை மாகாணத்தில் அடங்கும் காரைதீவு, ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில் பிரதேசங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்களைப் பற்றியோ எந்தவிதமான அக்கறையும் கொள்ளாது மொத்தத்தில் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் எதிர்கால இருப்பையே கவனத்திற்கொள்ளாது முற்றாகப் புறக்கணிக்கும் விதத்திலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் யோசனைகள் அமைந்திருந்தன.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# வீரம் விளைஞ்ச மண்ணுடா இது!

"ஸ்ரைல்டா கெத்துடா மாஸ்டா" என்று நம்மை நாமே சொல்லிக்கொள்வதில் ஒரு பெருமை இருக்கலாம், தமிழகத்தின் ஆன்மிக அரசியல்வாதியார் போல!
அதையே இன்னொருவன் வந்து "அண்ணே நீங்க ஸ்ரைல்ணே கெத்துண்ணே மாஸ்ணே" என்று தமிழ்நாட்டுப் பாணியில் சொன்னால், எப்படி இருக்கும்? புல்லரித்துப் போகும் இல்லையா? அதையே நாம் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடும் ஒரு வெள்ளைக்காரன் சொல்லிவிட்டுப் போனால்? அதுவும் நமக்கு இரண்டு மூன்று தலைமுறைக்கு முந்தைய அம்மப்பா, அப்பப்பாவைப் பார்த்து சொல்லிவிட்டுப் போயிருந்தால்? "பரம்பரை பரம்பரையாக வீராதி வீரர்கள்டா நாங்க" என்று சொல்லிக்கொண்டு சுவரில் சாய்ந்து தலைகீழாகத் தான் நின்றிருப்போம், அப்படித்தானே?



அப்போது ஏறாவூர்ப்பற்றின் வடக்கெல்லையான நட்டூர் ஆற்றிலிருந்து அக்கரைப்பற்றின் தெற்கெல்லையான சங்கமன்கண்டி வரை வரையறுக்கப்பட்டிருந்தது மட்டக்களப்பு நாடு. அந்த நாட்டில் வாழ்ந்தவர்களைப் பற்றித்தான் இப்படிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார் வான்கூன்ஸ்... வான்கூன்ஸ்? எங்கோ கேட்ட பெயர் மாதிரி இருக்க வேண்டுமே! இந்த மனிதன் தான் மட்டக்களப்பின் தலைநகரை காரைதீவுக்கு மாற்ற முயன்றவர். ஞாபகம் வந்து விட்டதா? மூன்று மாதங்களுக்கு முன்பு இவரது அந்த அறிக்கை பற்றி அரங்கத்தில் பார்த்திருக்கிறோம். அதன் ஓரிடத்தில் தான் "வீரம் விளைஞ்ச மண்ணை" புகழ்கிறார் வான்கூன்ஸ்.

மட்டக்களப்பை மூன்று "பண்டாரங்கள்" ஆண்டு வந்தார்கள் என்ற குறிப்போடு இந்நிலத்தை தன் அறிக்கையில் அறிமுகப்படுத்தும் வான்கூன்ஸ், இவர்கள் தமக்கு மேற்கே இருந்த வேடர்களையும் ஆண்டு வந்ததையும், கி.பி 1500 வரை சுயாட்சி அரசுகளாகவே அவர்கள் விளங்கியதையும், கண்டி அரசின் முழுமையான ஆதிக்கம் அவர்கள் மீது இருந்ததில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். எனினும் கண்டி அரசருக்கு ஆண்டுக்காண்டு அவர்கள் தேன், மெழுகு, வேறு திறைகள் என்பவற்றை வழங்கி வருகிறார்கள் என்பதை வான்கூன்ஸ் குறிப்பிடத் தவறவில்லை.

போர்த்துக்கேயர் கூட புலியந்தீவில் மாத்திரமே தங்கள் அதிகாரத்தை மட்டுப்படுத்தியிருந்தார்கள் என்பதையும், மட்டக்களப்பு வாவியூடாக வந்த ஓரிரு வெளிநாட்டுக் கப்பல்களில் மாத்திரமே சுங்கம் வசூலித்தார்கள் என்பதையும் அதைத்தாண்டி உள்நாட்டுக்குள் நுழைய அவர்கள் துணியவில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூடவே 1638இல் அக்கோட்டையை போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரான தாம் கைப்பற்றியபோது நடந்த உருக்கமான சம்பவங்களையும் விவரித்துள்ளார்.

வான்கூன்ஸ் குறிப்பிடும் இன்னொரு விடயம் முக்கியமானது. மட்டக்களப்பின் வேடர்கள் மலபார் மற்றும் யாழ்ப்பாணப்பட்டினத்து அரசர்களால் வெல்லப்பட்டதைச் சொல்லும் வான்கூன்ஸ், அந்த அரசர்களும் இந்தப் பண்டாரங்களும் ஒரே வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பதையும், அவர்கள் 1500களுக்கு முன்பிருந்தே சுயாட்சி அரசாக இருந்து வருகிறார்கள் என்பதையும் சொல்லியிருக்கிறார்.

சரி, வான்கூன்ஸ் எங்கே எப்படி இம்மண் வீரம் விளைந்த மண் என்பதை விவரித்திருக்கிறார்? வீரத்தை மட்டுமல்ல; இம்மண்ணை அணுவணுவாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார் மனிசன். இலங்கை முழுவதும் சுற்றிப்பார்த்திருக்கக்கூடிய வான்கூன்சுக்கு மட்டக்களப்பே மிகவும் பிடித்தமான ஒன்றாக இருந்திருக்கிறது என்பதில் நாம் சந்தேகம் கொள்ளவே தேவையில்லை. ஏன்? கீழே அவரது வரிகளை அப்படியே படித்துப் பாருங்களேன்!

மைங்கணான் மகிழறிவன்

"இலங்கையில் வேறெங்கும் இங்கிருப்பது போன்ற மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாட முடியாது! இங்குள்ளவர்கள் போல ஏழைகள் என்றாலும், செல்வந்தர்கள் என்றாலும் சோற்றை விரும்பிச் சாப்பிடுபவர்கள் வேறெங்கும் இல்லை!" (இலங்கையின் மேற்குக்கரையில் உள்ள ஏதோ ஒரு கோரளையிலும் இந்த வழக்கம் இருப்பதைக் குறிப்பிடுகிறார்.)

"கறுவா இங்கு மிகப்பெரும் அளவில் விளைகிறது. நாங்கள் இலங்கைக்கு வருவதற்கு பல்லாண்டுகள் முன்பிருந்தே கறுவா இங்கிருந்து பெரும்பாலும் ஆண்டுக்காண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இலங்கையில் வேறெங்கும் இங்கு கிடைப்பது போல ஏலம், கறுவா, மிளகு, ஏனைய வாசனைத்திரவியங்கள் பெருமளவில் விளைவதில்லை! இலங்கையில் எல்லா இடத்திலும் கிடைத்தாலும், இங்கு கிடைப்பது போல மரங்கும் வேறெங்கும் பெருமளவில் கிடைப்பதில்லை!"

அடுத்துத் தான் மெய்சிலிர்க்க வைக்கும் அந்த வரியைச் சொல்கிறார் வான்கூன்ஸ்! "பாணமை தவிர்ந்த வேறொரு திசையால் உயர்நில (கண்டி) மக்கள் இவர்களை அணுகமுடியாதபடி, மேற்குப்புறம் வேடர்களால் பாதுகாக்கப்படுகிறார்கள். எல்லா உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளை எதிர்த்து விரட்டுமளவுக்கு திடகாத்திரமான, வீரம் செறிந்த ஆடவர் இங்கிருப்பது போல் இலங்கைத்தீவில் வேறெங்குமே இல்லை!"

அத்தோடு நிறுத்தவில்லை வான்கூன்ஸ். அவர் தொடர்ந்து சொல்கிறார். "இங்கும் இலங்கையின் வேறு பகுதிகளிலும் உள்ள வளங்கள் இங்கு சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன. நம் ஐரோப்பிய எதிரிகளிடமிருந்து குறைந்தது இருபது ஆண்டுகள் தாக்குப்பிடித்தோமென்றால் நாம் இங்கிருந்து பெருமளவு லாபத்தைப் பெறலாம்." வணிகத்தையே நோக்கமாக இருந்த ஒல்லாந்தரின் அதிகாரியொருவர் இப்படி பேராசையோடு விவரிப்பதில் தவறேதும் இல்லை. ஆனால், தங்கள் ஏனைய ஐரோப்பிய எதிரிகளிடமிருந்து இலங்கையையும் குறிப்பாக கீழைக்கரையையும் காப்பாற்ற வேண்டும் என்று விரும்பியிருக்கிறார், பாருங்கள். சுயநலத்துக்கு மேல் அங்கு நமக்கு துலக்கமாகத் தெரிவது நம் மண்ணின் வளமும், மக்களின் செழுமையும் தான்.

வரலாறு சுட்டிக்காட்டும் இறந்தகாலம் அழகாகத் தான் தெரிகிறது. நிகழ்காலம் நம்மை நினைத்து வெட்கிக் கூனிக்குறுகச் செய்கிறது. பெருங்கேள்விகளோடு தூரத்தே தெரியும் எதிர்காலம், ஏக்கப்பெருமூச்சை மட்டுமே எஞ்சச்செய்கிறது.

# யார் இந்த இராவணன்?

பவின்



வரலாறுகளை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். தமிழ் இனம் அழிவடைவது போல தமிழரின் ஐதீகங்களும் தொன்மங்களும் அழிக்கப்படும் அபாயத்தில் உள்ள இக்கால கட்டத்தில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலமாக உண்மைகளை ஆவணப்படுத்தும் ஒரு சில முயற்சிகளும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் எம் மூத்த குடியும் தமிழ் மன்னனுமான இராவணனைப் பற்றிய உண்மைகளை ஆதார பூர்வமாக நிருக்கும் முயற்சியில் திரு. என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் மேற்கொண்ட பிரயத்தனம் வெற்றி பெற்றுள்ளது.

திருகோணமலை இராவண சேணையின் அனுசரனையுடன் வெளியீடு செய்யப்பட்ட "யார் இந்த இராவணன்?" நூல்.

கடந்த 03.09.2018 அன்று இராவண சேணையுடன் "கா" கலை இலக்கிய வட்டமும் இணைந்து மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் அறிமுகத்தினை ஏற்பாடு செய்திருந்தது

மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்விற்கு "கா"வின் தலைவர் திரு ச. மணிசேகரன் அவர்கள் தலைமை தாங்க பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியரும் "கா"வின் ஆலோசகருமான பேராசிரியர்.சி. மௌனகுரு அவர்கள் வருகை தந்திருந்தார். மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப் புரவலர். வீ .ரஞ்சிதமூர்த்தி அவர்களும் ஆய்வாளரும் எழுத்தாளருமான கவிக்கோ வெல்லவூர் கோபால் அவர்களும் கௌரவ அதிதிகளாகவும், கல்முனை



ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியக் கலாநிதி. இரா. முரளீஷ்வரன் அவர்கள் சிறப்பு அதிதியாகவும் வருகை தந்து நிகழ்வை சிறப்பித்தனர். ஆரம்ப நிகழ்வான மங்கள விளக்கேற்றுவதற்கு நூலாசிரியர் திரு. என்.கே.எஸ்.திருச்செல்வம் , இராவண சேனை அமைப்பு சார்பாக வைத்தியர். சிஜேயதரா , "கா"வின் ஆலோசகர் பேராசிரியர். யோகராசா , பொலிஸ் சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு.இரவீந்திரன் , மலையக பண்பாட்டுக் கழக ஜீவன் இராஜேந்திரன் , கண்ணகி இலக்கியக் கூடத் தலைவர் திரு.செங்கதிரோன் , மற்றும் அண்ணாவியார் ஆரையூர் அருள் ஆகியோர் அழைக்கப்பட்டனர்.
வரவேற்புரையை "கா"வின் செயலாளர் திரு. சொ. பிரசாத் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து தலைமையுரையினை திரு ச. மணிசேகரன் நிகழ்த்தி நிகழ்வை ஆரம்பிக்க மிகவும் சிறப்பாக நூல் அறிமுக விழா நடை பெற்றது.

நூல் அறிமுகத்தினை மகுடம் இலக்கிய வட்டத் தலைவர் வி.மைக்கேல் கொலின் அவர்கள் செய்து வைத்தார். அத்துடன் வெளியீட்டுரையை இராவண சேனை அமைப்பின் தலைமைச் செயற்பாட்டாளர் திரு .கு.செந்தூரன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நூல் அறிமுக விழா ஆரம்பமாகியது. முதற் பிரதியினை பேராசிரியர். சி.மௌனகுரு வழங்க திரு . ரஞ்சித மூர்த்தி அவர்கள் பெற தொடர்ந்து ஏனைய சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. நூல் நயவுரையை ஆய்வாளரும் விமர்சகருமான கலாநிதி.எஸ்.சிவரெத்தினம் செய்து வைத்ததை அடுத்து அதிதிகள் உரை நிகழ்த்தினர்.

ஆழமான கருத்துக்களை சுருக்கமாகச் சொல்லி விழாவை விரைவாக ஏற்பாட்டுகுளுவினர் நடத்திச் சென்றனர். இறுதியாக நூலாசிரியரின் ஏற்புரையும் திருமதி.விஜயேஸ்வரி மணிசேகரனின் நன்றியுரையுடன் நிகழ்வு முடிவுக்கு வந்தது.

# நூற்றாண்டு காணும் தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலயம்.




தூய காணிக்கை அன்னை ஆலயம் - 1902 -

மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே திருமலை வீதியில் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுதான் தாண்டவன்வெளி, காணிக்கை அன்னை ஆலயம். இவ்வாலயம் ஆரம்பத்தில் புனித வியாகுல மாதா ஆலயம் என அழைக்கப்பட்டு வந்தாலும் தற்போது காணிக்கை அன்னை ஆலயமாக மாற்றம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் காணிக்கை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரே ஆலயம் மட்டுமல்ல மட்டக்களப்பில் அமைந்த முதலாவது கத்தோலிக்க ஆலயமும் இதுவேதான். இவ்வாலயமானது தனிப்பங்காக ஏற்படுத்தப்பட்ட நூற்றாண்டுப் பெருவிழாவை தாண்டவன்வெளி பங்குத் திருச்சபையானது செப்டம்பர் மாதம் 09ம் திகதி மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந்.கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் இடம்பெறும் சிறப்புத்திருப்பலியுடன் சிறப்பிக்கவுள்ளது.

கத்தோலிக்கம் மட்டக்களப்பிலே முதன் முதலாகப் போர்த்துக்கேயராலேயே அறிமுகம் செய்யப்பட்டது. கி.பி 1546ல் போர்த்துக்கேயர் மட்டக்களப்பைக் கைப்பற்றி, அங்கே ஒரு கோட்டையையும் கட்டினர். கோட்டைக்குள் இருந்த போர்வீரர்கள் அனைவரும் கத்தோலிக்க திருச்சபையைச் சார்ந்தவர்கள். அவர்களது ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கென எப்பொழுதும் இரண்டொரு கத்தோலிக்க குருமார்களும் அவர்களுடன் பயணம் செய்தனர். இவர்கள் போர் வீரர்கள் கைப்பற்றும் நாடுகளில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்து, அங்குள்ள மக்களைக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ப்பதையும் தங்களது கடமைகளில் ஒன்றாகக் கொண்டிருந்தனர்.

இவையே, கத்தோலிக்க திருமறை மட்டக்களப்பில் தடம்பதித்த ஆரம்ப சுவடுகளாக வரலாற்றில் நாம் காணும் விடயங்களாய் நமக்குக் கிடைத்துள்ளன. 1638ம் ஆண்டு வரை போர்த்துக்கேயர் மட்டக்களப்பிலே நிலைகொண்டிருந்தனர். இந்த 92 ஆண்டுகளிலும் மட்டக்களப்பில் நிலை கொண்டிருந்த கத்தோலிக்க துறவிகளும் ஏராளமான மக்களை மனம் திருப்பி கிறிஸ்தவர்களாக்கினர் என்பது சொல்லாமலே புரியும். இத்தகைய பாதுகாப்பான ஒரு சூழலில் கத்தோலிக்க மதம் மட்டக்களப்பிலே வேருன்றியது. இவ்வாலயம் தாண்டவன் என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் கட்டப்பட்டிருந்ததாகவும், ஆரம்பத்தில் இது ஓலைக்கொட்டிலாக அமைந்திருந்ததென்றும் வரலாற்றுச் சுவடிகள் எடுத்துரைக்கின்றன. மட்டக்களப்பில் கிடைக்கும் கத்தோலிக்க பழைய சாசனங்களின்படி வண. A.M.றூவியாக் அவர்கள் 1868 மாசி மாதத்தில் எழுதியுள்ள குறிப்பும் இதனை உறுதிப்படுத்துகின்றது. தாண்டவன் என்பவர் பிற்காலத்தில் கத்தோலிக்கராய் மாறியது மட்டுமன்றி அந்த விசுவாசத்தின் சாட்சியாக மரித்தார் என்றும் ஒரு பாரம்பரியம் இன்றுவரை தாண்டவன்வெளியில் உள்ளது.

இவ்வாண்டு (2018) தாண்டவன்வெளி திருச்சபை தனிப் பங்காக பிரகடனப்படுத்தப்பட்ட நூறாவது ஆண்டில் கால் பதித்துள்ளது என்பதை பெருமையுடன் நினைவுகூர்வதுடன், இலங்கையின் முதல் புனிதரான புனித ஜோசப்வாஸ் அடிகளார் கால்பதித்த புனித பூமியாகவும் திகழ்கின்றது என்பதில் பெருமையும் அடைகின்றது.



தூய காணிக்கை அன்னை ஆலயம் - 1900 -

1649ல் மட்டக்களப்பை ஒல்லாந்தர் கைப்பற்றிபோதும் தாண்டவன்வெளி கண்டியரசனின் பிரதேசமாக இருந்தபடியால் இங்கே கிறிஸ்தவம் எவ்வித பிரச்சினையுமின்றி வளரமுடிந்ததை நாம் அறிகிறோம். அங்கு கட்டப்பட்டு வழிபாடு நடாத்திய ஆலயம் 1697ல் தீக்கிரையாக்கப்பட்டது. இவ்விடயம் நம்பகத்தன்மை வாய்ந்ததே. ஏனெனில் மறுகரையில் வாழ்ந்த ஒல்லாந்தர்கள் தங்கள் உளவாளிகள் மூலமாக இச்சிற்றாலயத்திற்கு தீ மூட்டியிருக்கலாம். அவ்வேளைதான் இந்த ஆலயத்தில் இருந்த புனித காணிக்கை அன்னையின் திருச்சொரூபம் தீயில் எரிந்து சாம்பலாகாமல் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டது.

இது பற்றி கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி "சந்திராவி என்னும் இந்துமதப் பெண்ணுக்கு அவள் துயிலும்வேளை மரியன்னை கனவில் தோன்றி தன்னை வெளிப்படுத்தி, திருச்சொரூபம் மறைந்து கிடந்த இடத்தினைக் காட்டியதுடன், இதனை எடுத்து "மன்னிப்பிள்ளை" என்னும் கத்தோலிக்கரிடம் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறி கொடுத்துவிடும்படி சொல்லவும் அவள் அவ்வாறே செய்தாளெனவும் அறிகிறோம்.

இக்காலப்பகுதியில், யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி போன்ற இடங்களில் தமது பயணத்தை மேற்கொண்டிருந்த புனித ஜோசப்வாஸ் அடிகளார் 1694/1695ல் கிழக்குக் கரையோரப்பகுதியில் மேற்கொண்ட முதலாவது விஜயத்தில் இங்கும் வருகைதந்து கத்தோலிக்கர்களைச் சந்தித்துள்ளார் என பாரம்பரியமாகக் கூறப்படுகின்றது. பின்னர் 1705ல் இரண்டாவது தடவையாகவும், இறுதியாக 1710 ஆரம்பத்தில் கிழக்குக் கரையிலுள்ள கிராமங்களான அலம்பில், கொட்டியாரம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களிலுள்ள விசுவாசிகளைச் சந்திக்கவந்த வேளையில், தாண்டவன்வெளி மக்களைச் சந்தித்து காணிக்கை அன்னை ஆலய வளாகத்தில் ஓலையால் வேயப்பட்ட சிறு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்போது வேத விரோதிகளால் காட்டிக்கொடுக்கப்பட்டு அங்கிருந்த வம்மி மரமொன்றில் கட்டியடிக்கப்பட்டார் என்பதும் பாரம்பரியமாகக் கூறப்பட்டுவரும் விடயமாகும். அவ்விடத்தில் தற்சமயம் இதனை நினைவுகூரும் வண்ணம் புனித ஜோசப்வாஸ் ஆண்டில் (2017) நினைவுத்தூபியும், நினைவு மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் 1760ல் புதிய ஓர் ஆலயம் கண்டியரசனுடைய அனுசரணையுடன் கட்டப்பட்டது. அவ்வேளையில் இந்த அன்னையின் திருச்சொரூபமும் மீண்டும் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு பகிரங்கமாக மக்களின் முன்பாக வைக்கப்பட்டது. இதற்கு இடைப்பட்ட 62 ஆண்டுகளும் இச்சொரூபத்திற்கு என்ன நடந்தது என்று உறுதியாக எந்தத்தகவலும் இல்லை. இன்று நமது ஆலயத்திலிருக்கும் அன்னையின் திருச்சொரூபம் மேற்படி செய்தியின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட மன்னிப்பிள்ளையென்பவரிடமிருந்து அதே நூற்றாண்டு பழமை வாய்ந்த அன்னையின் திருச்சொரூபத்தின் விவரணங்களை ஒத்திருப்பதால் இரண்டும் ஒன்றேயென நம்புவதற்கு இடமுண்டு.

இவ்வாறு பல வரலாற்றுத்தடங்களைக் கொண்ட இப்பணித்தளம் கோட்டைமுனை முதல் தன்னாமுனை வரையுள்ள நிலப்பரப்பைக்கொண்டதாக இருந்து வந்துள்ளது. இப்பகுதிவாழ் இறைமக்களுக்கு இது ஒன்றே வழிபடும் ஆலயமாகவும் இருந்துள்ளது.

1835ம் ஆண்டில் பாஸ்கல் மரியாள் என்னும் பெயர் கொண்ட பாஸ்கல் முதலியாரின் மனைவி தாண்டவன்வெளி ஆலயத்திற்கென 24 ஏக்கர் நிலத்தினை நன்கொடையாக அளித்தார். அதன் பின்னர் பழைய ஆலயத்திற்குப் பதிலாகப் புதிய ஓர் ஆலயம் கல்லினால் கட்டப்பட்டு ஓடுகள் கொண்டு கூரையிடப்பட்டது. இவ்வாலயம் மட்டக்களப்பு வாவியைப் பார்த்ததுபோன்றே கட்டப்பட்டது. ஏனெனில் பயணங்கள் யாவும் அப்போது வாவியினூடாகவே நடைபெற்றன. வீதிகள் அமைக்கப்படவில்லை.



பிற்காலத்தில் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பு திருகோணமலை வீதி உருவாக்கப்பட்டவேளை இவ்வாலயமும் புனரமைக்கப்பட்டு அதன் முகப்பு புதிய திருமலை வீதியை நோக்கியதாக கட்டப்பட்டது. ஆனால், 1907ம் ஆண்டில் மட்டக்களப்பில் வீசிய புயற்காற்றினால் இவ்வாலயமும் பலத்த சேதத்துக்குள்ளாகியது. பின்னர் ஆலயம் மறுபடியும் புனரமைக்கப்பட்டு வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டது.

தாண்டவன்வெளிப் பங்கானது 1918ம் ஆண்டு மே மாதம் 19ம் நாள் ஆயர் பேரருட்தந்தை கஷ்டன் றொபிஷே ஆண்டகை அவர்களால் தனிப்பங்காக உருவாக்கப்பட்டது. அதுவரை தாண்டவன்வெளி புனித மரியாள், புனித அந்தோனியார் ஆலய பங்கின் ஒரு அலகாகவே இருந்துள்ளது.

**ஜே.எச்.இரத்தினராஜா**

தாண்டவன்வெளிப்பங்கில் இறைமக்கள் தொகை மென்மேலும் அதிகரித்துக்கொண்டே வந்ததால் 1955, 1956ம் ஆண்டுகளில் அருட்தந்தை G.E.L.வம்பேக் அடிகளாரினால் புனரமைக்கப்பட்டு ஆலயம் சிலுவை போன்று இருமருங்கிலும் புதிய இடவசதி கொண்டதாகவும், எல்லாப்பக்கமும் விறாந்தையுடனும் அமைக்கப்பட்டது. அத்துடன் பங்கு மனைக்கு முன்னால் லூர்து அன்னை கெபியும், மறுபக்கம் பாத்திமா அன்னை கெபியும், மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டன.

அதன் பின்னர் 2001ம் ஆண்டு பங்கினைப்பொறுப்பேற்ற அருட்தந்தை. பொன்னையா ஜோசப் அடிகளார் (தற்போதய மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்) காலத்துக்கேற்ற வண்ணம் மாற்றியமைக்கப்படல் வேண்டுமென்று எடுத்துரைத்து பங்கில் குழு ஒன்றை ஏற்படுத்தி பங்கு மக்கள் அனைவரையும் உள்ளடக்கக்கூடிய பாரியதோர் ஆலயத்தினை 2002ம் ஆண்டு ஆரம்பித்து 26.01.2006 இல் கட்டி முடித்தார். அன்றைய தினம் இப்புதிய ஆலயம் திருமலை-மட்டுநகர் ஆயர் அதி. வந்தனைக்குரிய .கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு வழிபாட்டுக்கு திறந்துவிடப்பட்ட அதேவேளை இடைக்காலத்தில் புனித வியாகுல மாதா என்று அழைக்கப்பட்ட இவ்வாலயத்தினை மறுபடியும் காணிக்கை ஆலயம் என பெயரிட்டு பிரகடனப்படுத்தினார்.

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# ஆறு இதழ்களில் ஆசிரியராக பணியாற்றிய பத்திரிகை உலக ஜாம்பவான் அமரர் எஸ். டி. சிவநாயகம்



எஸ்.டி.சிவநாயகம்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகின் ஜாம்பவான் என வர்ணிக்கப்பட்டவரும், பல புதிய தலைமுறை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தியவரும், பல தமிழ் ஊடகவியலாளர்களின் ஞானத்தந்தையாக (God Father) கருதப்பட்டவருமான (அமரர்) எஸ். டி. சிவநாயகம் "கல்கி" கிருஷ்ணமூர்த்தியினால் விதந்து பாராட்டப்பட்டவராவார்.

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பைச் சேர்ந்த இவரது ஊடகப்பணியும் சமயம் சார்ந்த சமூகப்பணிகளும் தலைநகரில்தான் விரிவடைந்தன. இவரது துணைவியார் கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரிந்தவர்.

சிவநாயகம் அவர்களை அவரது ஜிந்துப்பிட்டி இல்லத்திலும் தினபதி - சிந்தாமணி பணிமனையிலும் சந்தித்துப் பேசியிருக்கின்றேன்.

1948 இல் தினகரன் பத்திரிகையில் பணியாற்றத் தொடங்கிய ஈழத்தின் மூத்த பத்திரிகையாளரான சிவநாயகம், கொழும்பில் தந்தை செல்வநாயகம் ஆரம்பித்த சுதந்திரன், மற்றும் வீரகேசரி ஆகியவற்றிலும் ஆசிரியராக பணியாற்றியவர். 1966 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி முதல் வெளியாகத் தொடங்கிய தினபதி தினசரியிலும் பிரதம ஆசிரியரானார்.



தினபதி

இன விகிதாசார நியமனங்கள் இல்லையேல் அமைச்சர்கள் மீது நடவடிக்கை

தமிழ்ப்பத்திரிகைத்துறையில் பழுத்த அனுபவம் மிக்க இவர், வெளியுலகிற்கு தன்னை பிரபல்யப்படுத்தாமல் அமைதிபேணியவர்.

எனினும், அந்த ஆழ்ந்த அமைதிக்குள் எரிமலைக்குரிய குணாம்சம் ஒளிர்ந்தது. முற்காலத்தில் வெளியாகும் தமிழ்த்திரைப்படங்களின் இயக்குநர்களின் பெயர்களும் தற்காலம்போன்று வெள்ளித்திரைகளில் தோன்றும். ஆனால், அவர்கள் இக்காலத்து இயக்குநர்கள் போன்று ரசிகர்கள் மத்தியில் திரையில் வலம் வந்து அறிமுகமாகமாட்டார்கள். முன்பிருந்தவர்கள் பின்னாலிருந்து இயக்கிய உந்துசக்திகளாகத்தான் வாழ்ந்து மறைந்துபோனார்கள்.

இன்றைய தமிழ்த்திரையுலகின் இயக்குநர்கள் திரைகளில் தோன்றுவதுபோன்று தற்கால பத்திரிகை ஆசிரியர்களும் பொதுமேடைகளில் தோன்றும் கலாசாரம் வந்துவிட்டது.



சிந்தாமணி

CHINTHAMANI

இலங்கைப் பெண்கள் லெபனானில் அவதி!

30,000 பேர் பற்றிய தகவல் தெரியவில்லை

ஆனால், தினபதி அதன் ஞாயிறு பதிப்பு சிந்தாமணி ஆகியனவற்றின் பிரதம ஆசிரியர் சிவநாயகம் அவர்களை - இவை வெளியான காலகட்டத்தில் பொதுமேடைகளில் காண்பது அபூர்வம்.

கிழக்கிலங்கையில் பெரியார் ஈ.வே.ரா.வின் பகுத்தறிவுக்கொள்கைகளை பரப்பிய முன்னோடியாகவும் இவர் அறியப்படுகிறார். தமிழகத்தின் முதல்வர் அறிஞர் அண்ணாவுடன் பழகியதன் அனுபவங்களை தொடர்கட்டுரையாக எழுதியவர். எனினும் இறுதிக்காலத்தில் சத்திய சாயி பக்தராகவும் வாழ்ந்து, 22 ஏப்ரில் 2000ஆம் திகதி மறைந்தார்.

புட்டபர்த்தியில் 1975 ஆம் ஆண்டு நடந்த உலக சாயி நிறுவனங்களின் மகா நாட்டிலும் கலந்துகொண்டிருக்கும் இவர், கொழும்பில் சத்திய சாயி பாபா மத்திய நிலையத்தில் தொடர்ந்து 25 ஆண்டுகள் தலைவராகவும் இருந்து, சாயிபாபா அறக்கட்டளையையும் உருவாக்கியவர்.

தினபதி தினசரியில் தினமும் புதிய சிறுகதைகள் என்ற களத்தில் பல புதிய இளம்தலைமுறை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி, எதிர்காலத்தில் அவர்களை ஆக்க இலக்கியவாதிகளாக்கிய பெருமையும் அவரைச்சாரும். அக்காலப்பகுதியில் இளம் மாணவர்கள் எழுத்தாளர்களாக தினபதியில் வளர்க்கப்பட்டார்கள்.

தினபதி, சிந்தாமணி, ராதா, சுந்தரி, தந்தி முதலான தமிழ் இதழ்களையும் தவஸ உட்பட சில சிங்கள இதழ்களையும் SUN என்ற ஆங்கிலத்தினசரியையும் அதன் ஞாயிறு பதிப்பையும் வெளியிட்ட சுயாதீன பத்திரிகை சமாஜம் என்ற பெரிய நிறுவனம் 1970 இல் நடந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீமா - என். எம், - பீட்டர் ஆகியோரின் கூட்டணி வெற்றியடைந்து பதவிக்கு வந்த காலத்தில், அந்த அரசின் சில நடவடிக்கைகளை விமர்சித்த காரணத்தால் வெறுப்புக்கும் ஆளாகி 1974 ஏப்ரில் மாதம் 20 ஆம் திகதி சீல்வைத்து பூட்டப்பட்டது. எனினும் தடை நீங்கி 1977 இற்குப்பின்னர் திறக்கப்பட்டது.

சிந்தாமணியில் இலக்கியபீடம் என்ற பத்தியை சிவநாயகம் தொடர்ந்து எழுதியதுடன், பாரதி நூற்றாண்டு காலத்தில் " நான் கண்ட பாரதி" என்ற நீண்ட தொடரையும் வாராந்தம் எழுதியிருக்கிறார்.

சுயாதீன பத்திரிகை சமாஜம் எதிர்பாராதவிதமாக அதன் நிருவாகத்தினால் 1990 இல் நிரந்தரமாக மூடப்பட்டதும் சோகமான முடிவு. கொழும்பு பாமன் கடையிலிருந்து வெளியான மாணிக்கம் என்னும் கலை இலக்கிய மாத இதழுக்கும் சிவநாயகம் சிறிது காலம் ஆசிரியராக இருந்துள்ளார்.

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடங்களில் பணியாற்றியவர்களுக்கு சிவநாயகம் வழிகாட்டியாகவும் நல்லாசானாகவும் விளங்கியவர். அரசியல் சார்ந்த செய்திகளில் - முக்கியமாக அவற்றின் தலைப்புகளில் விவரணங்களும் காணப்படும்.

உதாரணத்திற்கு ஒரே ஒரு தகவலை மாத்திரம் சொல்கின்றேன்.

தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், 1977 இல் நடந்த பொதுத்தேர்தலையடுத்து எதிர்பாராத விதமாக எதிர்க்கட்சித்தலைவரானார். அவ்வேளையில் தினபதியில் ஒரு செய்தியின் தலைப்பு இவ்வாறு இடம்பெற்றது.

"தமிழ் ஈழம் கேட்ட "அமிர்" இலங்கை அரசின் காரும் வீடும் ஏற்பாரா..? "

அத்துடன் நில்லாமல் இந்தத்தலைப்புக்கு இருமருங்கும் ஒரு காரின் படத்தையும் ஒரு வீட்டின் படத்தையும் சிவநாயகமோ அல்லது அவரது தூண்டுதலினால் வேறு யாரோ அதில் பதிவுசெய்தனர்.

ஏற்கனவே 1965 இல் நடந்த பொதுத்தேர்தலில் அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டை தொகுதியில் ஆ. தியாகராஜா என்ற முன்னாள் கல்லூரி அதிபர் ஒருவரிடம் தோற்றிருந்தவர். அதன் பின்னர் அவரும் அவர் மனைவி மங்கையற்கரசியும் தமிழ் உணர்ச்சியை தூண்டும் விதமாக மேடைகளில் முழங்கி இளம் தலைமுறையினரை எழுச்சிகொள்ளவைத்தனர்.

அதன் விளைவே வட்டுக்கோட்டை மாநாட்டில் தனித்தமிழ் ஈழத்தீர்மானம். ஆயினும் அமிர், எதிர்பாராத விதமாக எதிர்க்கட்சித்தலைவராகி, அன்றைய ஜே.ஆர். அரசு வழங்கிய சௌகரியங்களை ஏற்கநேர்ந்தது.

முன்னர் தனித்தமிழ் ஈழம் கேட்டவர், இன்று எவ்வாறு காரும் வீடும் ஏற்கிறார்...? என்ற தொனிப்பொருளில் கேலிச்சித்திரமாக அல்ல செய்தியாகவே தினபதியில் வெளியானது.

எஸ்.டி. சிவநாயம் சிந்தாமணியில் தொடர்ந்து எழுதிய " நான் கண்ட பாரதி" இதுவரையில் நூல் வடிவம் பெறவில்லை. அவ்வாறு அதனை அவர் வெளியிட விரும்பி குறிப்பிட்ட பத்திரிகை நறுக்குகளை பாதுகாத்து வைத்திருந்த தகவலும் அண்மையில் தெரியவந்துள்ளது. யாராவது அதனை வெளியிட ஆவனசெய்யவேண்டும் என்று இந்த அங்கத்தின் ஊடாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

## விடுமுறையில் உல்லாசபுரியான உல்லை!

இலங்கையின் பிரதான உல்லாச புரியாகத்திகழும் கிழக்கின் அறுகம்பை கடற்பிரதேசம் களைகட்டிவருகின்றது. வெளிநாட்டவர், உள்நாட்டவர் அனைவரும் மகிழ்சியோடு விடுமுறைகளை அங்கு கழித்துவருகின்றனர்.

உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. நீரைக்கிழித்துக்கொண்டு சாகசம் செய்யும் இயந்திரப்படகோட்டியின் காட்சியையும் உல்லாசப்பயணிகள் கண்டுகளித்தனர். அறுகம்பைக்கடலல் களைகட்டுவதைக் காணலாம்.

(படங்கள்: காரைதீவு நிருபர் சகா)

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 17

## கப்ரா வண்டும் அஸ்பெஸ்டாஸ் கூரைத்தகடும்



இந்த அங்கத்தை சற்று தயக்கத்துடன்தான் எழுதுகின்றேன். அதற்கு முன்னர் ஒரு குட்டிக்கதையை சொல்கின்றேன். ஒரு நாட்டில் தேங்காய் எண்ணை உடல் நலத்திற்கு கேடுதரும். அதில் கொழுப்பு அதிகம். கொலஸ்ட்ரோல் நாடிகளில் படிந்து மாரடைப்பு வரும் என்று யாரோ ஒரு அதிபுத்திசாலி ஒரு பத்திரிகையில் எழுதிவிட்டார்.

அதனைப்படித்த மக்கள் தேங்காய் எண்ணையை தவிர்க்கத்தொடங்கினார்கள். அதனால் தேங்காய் உற்பத்தியாளர்களான தென்னந்தோட்ட உரிமையாளர்களின் வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டது. அவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை நடத்திவிட்டு ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

சில மருத்துவர்களைக்கொண்டு, "தேங்காய் எண்ணையால் எதுவித பாதிப்பும் இல்லை. அது மக்களுக்கு உகந்தது. அதில் இன்ன இன்ன உயிர்ச்சத்துக்கள் இருக்கின்றன" என்று ஊடகங்களில் கட்டுரைகளையும் நேர்காணல்களையும் வரச்செய்தார்கள்.

மக்கள் எப்பொழுதும் ஊடகங்கள் சொல்வதை நம்புபவர்கள்தானே!?

மீண்டும் மக்கள் மத்தியில் தேங்காய் எண்ணைக்கு வரவேற்பு வந்தது!

களனி கங்கை தீரத்தில் அமைந்திருக்கும் பல தொழிற்சாலைகள் பற்றி முன்னைய அங்கங்களில் விபரித்திருந்தோம்.

சமகாலத்தில் கிழக்கு மக்களை ஒரு விலங்கு அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது! நாளாந்தம் யானை தாக்கி மக்கள் காயப்பட்ட அல்லது கொல்லப்பட்ட




செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. யானைகளின் நடமாட்டம் காடுகளில் மட்டுமல்ல கிராமங்கள், நகரங்களுக்குள்ளும் வந்துவிட்டது. அவை மக்களை அச்சுறுத்துகின்றன. தோட்டங்களை வயல்களை குடியிருப்புகளை சேதப் படுத்துகின்றன. ரயிலில் அடிபட்டும் யானைகள் இறக்கின்றன. யானைகளின் பெருக்கம் எங்கள் தேசத்தில் அதிகரித்துவிட்டதா? அவற்றுக்கும் கருத்தடை செய்யவேண்டி வருமோ தெரியவில்லை.!

இந்தப் பின்னணிகளுடன் பதவியிலிருக்கும் நல்லாட்சி அரசில் இணைந்திருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் சின்னமும் யானைதான்.

கொழும்பு ஆமர்வீதியில் அமைந்துள்ள மஸ்கன்ஸ் அஸ்பெஸ்டஸ் உற்பத்திகளின் Trade Mark உம் யானைதான்! இதனாலும் இந்த அங்கத்தை யானைமுகன் பிள்ளையாரை பிரார்த்தித்து, அவர் துணைகொண்டு சற்று அவதானமாக எழுதவேண்டியிருக்கிறது.

கட்டிடப்பொருட்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள். எமது முன்னோர்கள் களிமண்ணில் குடிசையும் தென்னோலையில் கூரையும் அமைத்து நல்ல ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்தவர்கள்.

நவநாகரீகத்தின் விளைவினால் மக்களின் வாழ்க்கை முறையிலும் மாற்றம் ஏற்பட்டு, சூழல் சுற்றாடல்களிலும் மாசு படிந்து உடல்நலம் கெட்டுவிட்டது இக்கால மாந்தர்களுக்கு!

இலங்கையில் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்களுக்கு தடைவிதிக்கப்படுவதற்கு ஆலோசிக்கப்பட்ட வேளையில், இறக்குமதியாகும் அஸ்பெஸ்டஸ் தகடுகளுக்கும் தடைவரும் என்று பேசிக்கொண்டார்கள்.

அதற்கு ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைக்குள் எப்படியோ அத்துமீறி நுழைந்த ஒரு வண்டும் காரணம் எனச்சொல்லப்பட்டது. அந்த வண்டுக்கு ஒரு பெயரையும் கண்டுபிடித்துவிட்டார்கள்.

அதன் பெயர் கப்ரா!. இதுகுறித்து இலங்கை அரசாங்க அமைச்சர்கள் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமும் தந்தனர்.

இதுதொடர்பாக வெளியான செய்திகளின் சுருக்கத்தை இங்கு தருகின்றோம்.

"எவருடைய அழுத்தம் காரணமாகவும் அஸ்பெஸ்டஸ் சீட்டிற்கான தடையை அரசாங்கம் நீக்கவில்லை. தற்காலிகமாகவே இந்தத் தடை விலக்கப்பட்டுள்ளதோடு விரைவில் இதற்கு மாற்றீடொன்றை அறிமுகம் செய்ய இருப்பதாக இணை அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன மற்றும் அமைச்சர் நவீன் திசாநாயக்க ஆகியோர் தெரிவித்தனர்.

“அஸ்பெஸ்டஸ் சீட்“ தடையின் காரணமாக இலங்கை தேயிலை ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டிருக்கலாம் என உத்தியோகபற்றற்ற தகவல்கள் தெரிவிக்கப்பட்டாலும், இது ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை என்று தெரிவித்த அவர்கள், ரஷ்யாவுடன் முறுகல் ஏற்படாதவகையில் சுமுகமாக இந்த பிரச்சினையை தீர்க்க முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார்கள்.

ரஷ்யாவுக்கான தேயிலை ஏற்றுமதி தடை தொடர்பாகவும் அஸ்பெஸ்டஸ் சீட் தடை நீக்கம் குறித்தும் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினார்கள்.

இதற்குப் பதிலளிக்கையிலே அமைச்சர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள். பெருந் தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க குறிப்பிட்டதாவது:

தேயிலைக்குள் அன்றி பக்கெட்டுக்குள் தான் இந்த கப்ரா வண்டு இருந்துள்ளது. இலங்கையில் அரிதாக இருக்கும் ஒருவகை வண்டினமே இது. அதனால், வேறு துறைமுகத்தில் வைத்து இந்த வண்டு வந்திருக்கலாம் .



இந்த பிரச்சினை தொடர்பில் ரஷ்யாவுக்கான தூதுவர் சமன் வீரரத்ன இலங்கையில் உள்ள ரஷ்ய தூதுவருடன் பேசியுள்ளதோடு தீர்வு காண்பதற்காக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினையால் ரஷ்ய சந்தையில் எமது தேயிலைக்கு நெருக்கடி ஏற்படலாம்.

**ரஸஞானி**

ஜனவரி நடுப்பகுதிக்குள் இதற்கு தீர்வு காண முடியுமென்றால் பாதிப்பு குறைவடையும். இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தியில் 11 வீதம் ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உத்தியோக பற்றற்ற தகவல்களின் பிரகாரம் இந்த தடைக்கும் அஸ்பெஸ்டஸ் சீட் தடைக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக தெரிகிறது. 2018 ஜனவரி மாதம் முதல் அஸ்பெஸ்டஸ் சீட்டிற்கு தடைவிதிக்க ஏற்கெனவே அரசாங்கம் முடிவு செய்திருந்தது. இந்த முடிவை தற்காலிகமாக இடை நிறுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த் ரஷ்யாவுக்குச் சென்று ரஷ்ய வெள்ளை அஸ்பெஸ்டஸ் சீட்டினால் மனிதர்களுக்கு பாதிப்பு இருக்கிறதா என்பது குறித்து ஆராய இருக்கிறார். எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதை தடுப்பதற்காக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ரஷ்யா தரப்பில் முன்வைக்கப்படும் மேலதிக யோசனைகளையும் செயற்படுத்த தயாராக இருக்கிறோம்.

சூழல் பிரச்சினை காரணமாகத்தான் அஸ்பெஸ்டஸ் சீட்டிற்கு 2018 ஜனவரி முதல் தடைவிதிக்க முன்னர் முடிவு செய்யப்பட்டது. இதன் துகள்களினால் புற்றுநோய் ஆபத்துள்ளது. அஸ்பெஸ்டஸ் சீட்டிற்கு மாற்றீடாக எதுவும் இன்னும் அறிமுகம் செய்யப்படவில்லை. 80 வீதமான வீட்டுக் கூரைகளுக்கு அஸ்பெஸ்டஸ் சீட் தான் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் நிரந்தரமாக அன்றி தற்காலிகமாகவே அஸ்பெஸ்டஸ் சீட் தடை நீக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியும் இதுபற்றி ஆலோசனை நடத்தியுள்ளார். அந்தச்செய்தி பின்வருமாறு:

அஸ்பெஸ்டஸ் பாவனையைத் தடைசெய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து அஸ்பெஸ்டஸ் பொருட்களுக்கான மாற்றீடுகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியது.

கட்டுப்படியான விலைகளில் தரமான மாற்றீடுகளை உருவாக்கி அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் அந்த மாற்றீடுகளைப் பயன்படுத்துவதற்கு பொதுமக்களை ஊக்குவிப்பது தொடர்பிலும் இக்கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அரசாங்க கட்டிடங்களுக்கு அஸ்பெஸ்டஸ் அல்லாத கூரைத்தகடுகள் மற்றும் நிர்மாணத்துறை பொருட்களைப் பயன்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், வாகனங்களின் பிரேக், கிளச், கெஸ்கட் மற்றும் அஸ்பெஸ்டஸ் கயிறுகள் போன்ற அஸ்பெஸ்டஸ் தொடர்புடைய சகல உற்பத்திகளையும் தடை செய்வது குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டு மக்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் 2018ஆம் ஆண்டு முதல் அஸ்பெஸ்டஸ் இறக்குமதியை முழுமையாகத் தடைசெய்யும் தீர்மானத்தை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின் ஆலோசனையின்படி அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

அஸ்பெஸ்டஸ் பாவனையின் அபாயங்கள் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, இது தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அஸ்பெஸ்டஸ் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உதய ஆர் செனவிரத்ன, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் லால் மேர்வின் தர்மசிறி, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ரோஹன கீர்த்தி திசாநாயக்க மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹீபால ஆகியோரும் இக்கலந்துரையாடலில்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

மலைகளைப் பேசவிடுங்கள்

# நாடற்றவர் ஆன கதை - சிறிமா தரும் விளக்கம்

1947 ஆம் ஆண்டில் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் இனப்பிரச்சினைக்கு நேரகாலத்தோடு தீர்வொன்றைக் காண வேண்டிய அவசியத்தை அனைவருக்கும் நினைவூட்டியது.

இந்தியர்கள் எப்போதும் ஒருமித்த ஒரு குழுமமாக வாக்களித்து வருவதால் அவர்களது இனரீதியான பிணைப்பு எவ்வளவு நெருக்கமானது என்பதை தேர்தல் முடிவுகள் காட்டின. இந்தியர்கள் பெரும்பான்மையாகக் காணப்பட்ட தொகுதிகளில் அவர்கள் தங்களது சமூக அமைப்பைச் சேர்ந்தவர்களும் ஒருவரையே தெரிவு செய்தனர். இதன் மூலம் தொகுதிகளில் கண்டியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அவர்கள் பெரும்பான்மையாகக் காணப்படாத தொகுதிகளில் ஏறத்தாழ தமது சமூக அமைப்பின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட சிங்கள வேட்பாளருக்கே வாக்களித்தனர்.





13அல்லது 14 தொகுதிகளில் இந்தியர்கள் இவ்விதமாக செயற்பட்டு பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்தனர். இந்தியர்களின் ஒருமித்த குழும வாக்களிப்பு இவ் ஒவ்வொருவரும் வெற்றிபெற காரணமாயிற்று. இவ்வாறாக இலங்கையின் ஐந்தில் ஒரு பங்கு தொகுதிகளில் ஓர் அந்நிய மக்களினம் தேர்தல் முடிவில் தாக்கத்தினை ஏற்படுத்திக் கண்டிய மாகாணங்களில் பாரதூரமான அரசியல் பிரச்சினையொன்றை ஏற்படுத்தியது.

இத்தகைய பின்புலத்தில்தான் இலங்கைப் பிரதமர் அமரர் டி. எஸ். சேனநாயக்க இந்திய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். இலங்கையில் உள்ள எல்லா இந்திய வம்சாவளி ஆட்களும் இந்திய நாட்டவர் அல்லது பிரஜைகள் என்னும் அடிப்படையில் தான் இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இலங்கையில் வசிக்கின்ற எல்லா பெருந்தொகையான இந்தியர்களை தனது பொருளாதாரத்தினுள் ஈர்த்துக் கொள்வது இலங்கைக்கு பெரும் சிரமமானதாக இருக்கும் என்று இலங்கை பிரதமர் தெரிவித்த அதேவேளை, இலங்கையினால் உள்ளீர்த்துக் கொள்வதற்கு இயலுமான எல்லோரையும் உள்ளீர்ப்பது தனது விருப்பமாகும் என கலந்துரையாடல்களின்போது குறிப்பிட்டிருந்தார்.

இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான கடிதத் தொடர்புகளின்போது விஷேட சட்டவாக்கத்தின் கீழ் இலங்கையில் வதிகின்ற இந்தியர்களை பதிவு செய்வதற்கான தகைமைகளும் நடவடிக்கை முறைகளும் விரிவாக ஆராயப்பட்டன. இரண்டு பிரதமர்களுக்குமிடையில் அதிகூடிய கலந்த ஆய்வுகள் இடம்பெற்றன. ஆனால், குறிப்பாக இலங்கைப் பிரஜாவுரிமைக்கு தேவையான வதிவிடத்தகைமைகள் பற்றிய பூரணமான உடன்பாட்டை வழங்குவதற்கு இந்த கலந்தாய்வு தவறிவிட்டது. இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான கடிதத்தொடர்புகள் இந்திய பிரதமரினால் இலங்கை பிரதமருக்கு அனுப்பப்பட்ட 1948 செப்டெம்பர் 8, ஒக்டோபர் 12 ஆம் திகதியிடப்பட்ட இரண்டு கடிதங்கள் மற்றும் இலங்கை பிரதமரால் இந்திய பிரதமருக்கு அனுப்பப்பட்ட 1948 செப் 21 திகதியிடப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் முடிவடைந்தன.

1948 ஆம் ஆண்டு செப் 8 ஆம் திகதி கடிதத்தில் உடன்பாடின்மையைக் குறிப்பிட்டு, இந்திய பிரதமர் “ இலங்கையில் வதியும் இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை அளித்து தங்கள் நாட்டில் உள்ளீர்ப்பதற்கான சட்டவாக்கத்தை மேற்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதல் வேண்டும்” என கோரியிருந்தார்.

அரசியல் மற்றும் பொருளாதார அடிப்படையில் வெளிநாட்டு மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கு எதிராக குறிப்பாக கண்டிப்பிரதேசங்களில் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் 1949 ஆகஸ்ட் மாதம் இந்திய - பாகிஸ்தான் குடியிருப்பாளர் சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

இந்திய - பாகிஸ்தான் குடியிருப்பாளர் (பிரஜாவுரிமை) சட்டம் இந்திய பிரச்சினையை முடிவாக தீர்ந்துவிட்டது என கருதப்பட்டது. எனினும், 1953 ஆம் ஆண்டு இலங்கையில் பிரஜாவுரிமைக்கு அனுமதிக்கப்பட்டிராத இந்தியர்களின் அந்தஸ்து பற்றிய பிரச்சினையை அப்போதைய இலங்கை பிரதமரான டட்லி சேனநாயக்கவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகர் சி.சி தேசாய் முதன் முறையா வினவினார்.

இலங்கையில் இருக்கின்ற எல்லா இந்தியர்களும் இந்திய பிரஜைகள் எனும் அடிப்படையில் இந்தியா - பாகிஸ்தான் குடியிருப்பாளர் (பிரஜாவுரிமை) சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரை அவர்களின் அந்தஸ்தைப்பற்றிய எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. எனினும் 1953 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மகா தேசாதிபதி சேர். ஓ.இ.குணத்திலக்க, பிரதமர் டட்லி சேனநாயக்கா ஆகியோர் சமூகமளித்த இருந்த மாநாடு ஒன்றில், இலங்கை கையில் அப்போதிருந்த சுமார் 766000

இந்திய தோட்ட மக்கள் அனைவரையும் இந்திய பிரஜைகளாக அன்றி இலங்கை பிரஜைகளாகவே இந்திய அரசாங்கம் கருதுகின்றதென்ற கொட்பாடொன்றை திரு. தேசாய் முதன் முறையாக முன்வைத்தார்.

**மல்லியப்புசந்தி திலகர்**

பின்னர், இவர்களை “நாடற்ற ஆட்கள்” என இந்த ஆட்களை திரு தேசாய் குறிப்பிட்டார். இது இந்தியாவின் வசதிக்காக உருவாக்கப்பட்ட ஒரு சொற்றொடர் ஆகும். அதற்கு அடுத்த ஆண்டில், இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்கு பிரயாணம் செய்ய முடியாதவாறு இந்திய அரசாங்கம் தடை விதித்தது.

( சிறிமாவின் அறிக்கை தொடரும்)

நினைவஞ்சலி

27ம் வருடம்
2ம் வருடம்




அமரர். சி.சம்பந்தமூர்த்தி
(1930.07.16)
(1991.09.09)

அமரர். ச.நிர்மலா
(1939.10.01)
(2016.09.02)

வாழ வைத்தவர்கள், வழிகாட்டிகள்
ஞானம் வழங்கி, ஞாலத்தைக் காட்டிய
நல்ல அப்பா அம்மா உங்களுக்கு
கண்ணீரால் அஞ்சலி

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்




# விரித்து, சுருட்டி வைத்துக்கொள்ளக்கூடிய மொபைல்

உருளை வடிவ சிறு குழாய் போன்ற வடிவத்தில் இருக்கும் அலைபேசி, கண்ணிமைக்கும் நேரத்தில் 7.5 அங்குல திரையுள்ள டேப்லெட்டாக மாறினால் எப்படி இருக்கும்? இதுவரைக்கும் கனவாக, எதிர்கால தொழில்நுட்ப வருகையாக பார்க்கப்பட்ட இதுபோன்ற தொழில்நுட்ப கருவியை உருவாக்கியுள்ளனர் கனடாவின் ஒண்டாரியோ மாகாணத்திலுள்ள குயின்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

காலங்காலமாக மக்களின் தகவல் மூலமாக இருந்துவரும் செய்தித்தாளை படித்து முடித்துவிட்டு, சுருட்டி வைத்துக்கொண்டு நகர முடியும். ஆனால், ஏன் அதுபோன்ற தொழில்நுட்ப கருவியை உருவாக்க கூடாது என்று எழுந்த கேள்வியின் பதிலாகத்தான், மடித்து, சுருட்டி வைத்துக்கொள்ளக்கூடிய மேஜிக்ஸ்க்ரோல் என்னும் இந்த கருவியை உருவாக்கியுள்ளதாக கூறுகிறார் இந்த ஆராய்ச்சியின் தலைமை விஞ்ஞானியான வெர்டேகால்.




7.5 அங்குல திரையும், 2மு ரெசல்யூஷனும் கொண்ட இந்த உருளை வடிவ கருவியை மடித்து வைத்துக்கொண்டே அதன் இருமுனைகளிலுள்ள சக்கரம் போன்ற அமைப்பை திருகுவதன் மூலமும், திரையை தொடுவதன் மூலமும் வழக்கம்போல் போன் செய்யலாம், செயலிகளை பயன்படுத்தலாம்.

அதேசமயத்தில், பயன்பாட்டாளர்கள் தங்களுக்கு வேண்டும்போது, அந்த திரையை வெளியே இழுத்து, கையடக்க கணினி (டேப்லெட்) போன்று பயன்படுத்தி கொள்ளும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் செயற்பாட்டுக்கு தேவையான அனைத்து அமைப்புகளும் உருளையின் உட்புறத்தில் வைக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

--- சாய்ராம் ஜெயராமன்
பிபிசி தமிழ்





# பொதுமக்களின் ஆதரவிலேயே மாநகரை மேம்படுத்த முடியும்’



உள்ளூராட்சி என்பது ஒரு ஜனநாயக நாட்டின் அடிப்படை ஆட்சி அலகு. மக்கள் அரசியலை பயிலும் கல்விக்கூடமும் அதுவே என்று சிலர் அதனை வர்ணிக்கிறார்கள்.

மட்டக்களப்பை பொறுத்தவரை இங்குள்ள மிகப்பெரிய உள்ளூராட்சி அலகு மட்டக்களப்பு மாநகர சபை. மாவட்டத்தின் ஏனைய உள்ளூராட்சி அலகுகளில் இருந்து சற்று வித்தியாசமானதாகவும் பெரியதாகவும் பலரையும் கவர்வதாகவும் அமைந்திருப்பதும் இதுவே. ஆனால், நீண்ட நாட்களாக அரசியல் தலைமை அற்று இருந்த இந்தச் சபை, அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் நேரடியாக செயற்பட்டு வந்திருக்கிறது. தற்போது தியாகராஜா சரவணபவனை நகரபிதாவாக தேர்ந்தெடுத்து இது செயற்படத் தொடங்கியுள்ளது.

புதிதாக அரசியல் தலைமையும், நேரடியாக உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், நகரபிதா மீதும், அதன் ஏனைய உறுப்பினர்கள் மீதும் நகரின் மக்கள் பெரும் எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

தமது பல தேவைகளை உடனடியாக புதிய அவை நிறைவேற்றிவிட வேண்டும் என்பது அவர்களது எதிர்பார்ப்பு. ஆனால், போதிய வளமற்ற நிலைமை உட்பட பல காரணிகளுக்கு மத்தியில் அவற்றை செய்திட புதிய நிர்வாகமும் பெரும் முயற்சிகளை எடுக்க முனைகிறது.தமது முதல் பெருந்தேவையாக இருந்தது நகருக்கு ஒளியூட்டுதல் நடவடிக்கையே என்கிறார் நகர பிதா சரவணபவன். நகரப் பகுதியில் 2000க்கும் அதிகமான இடங்களில் தெருவிளக்குகளை உடனடியாக ஏற்ற வேண்டிய தேவை இருந்ததாக அவர் கூறுகிறார். அடுத்த தேவை நகரத்தின் வீதி வலையமைப்புக்களை சரிப்படுத்தல்.

இப்படி பல அவசரத் தேவைகள் இருந்தாலும், அவற்றை திறம்படச் செய்ய ஒரு புறம் நிதியும், மறுபுறம் பணியாளர் திறனும் தமக்கு தேவை என்கிறார் மேயர்.

பொதுமக்களைப் பொறுத்தவரை பொறுப்பும் கடமையும் சரியாக செய்யப்படும் போதே அவர்களுக்கு உரிய உள்ளூராட்சி நலன்கள் இலகுவாக கிடைக்க வழி ஏற்படும் என்கிறார் அவர்.

அதாவது, தமது நிதித்தேவைகளை பொதுமக்கள், தமது வரிகள் மூலம் பொறுப்பாக வழங்கும் போதே தாம், மக்களுக்கான சேவைகளை சீராகச் செய்ய வழி ஏற்படும் என்பது நகர பிதாவின் கருத்து. எந்த வட்டாரத்தில் இருந்து அதிக வரி வருகிறதோ அந்த வட்டாரத்துக்கு அதிக தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில், தாம் உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி வருவதாகவும் அவர் கூறுகிறார்.

இவற்றுக்கு ஏற்ப ஏசியா பவுண்டேசன் அனுசரணையுடன், வரி அறவிடலை ஊக்கப்படுத்தும் நோக்கில் அறவிடல் மாதம் ஒன்றையும் மாநகரசபை அறிமுகம் செய்துள்ளதாகவும் சரவணபவான் கூறுகிறார். அதனை ஒட்டி, இந்த மாதத்தின் முடிவில், மக்களிடம் இருந்து வரும் முறைப்பாடுகளை செயற்திறனுடன் கையாள, எம்.சிட்டிசன் என்னும் அன்றொயிட் செயலி திட்டம் ஒன்றையும் மாநகர சபை அமல்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பல்லடுக்குமாடி வாகனத்தரிப்பிடம், பெரு நகர அங்காடி அமைத்தல், கட்டப்பட்டு பாதியில் இருக்கும் நூலகத்தை திறத்தல், அருகே உள்ள பெரிய களத்துக்கு பாலம் அமைத்து அதனை அபிவிருத்தி செய்தல் போன்ற பல பாரிய திட்டங்களையும் மாநகர சபை மனதில் வைத்திருக்கிறது. இவை அனைத்துக்கும் பொதுமக்களின் பொறுப்புணர்வுடனான ஆதரவை நகர பிதாவும், உறுப்பினர்களும் தேடி நிற்கின்றனர்.

# மட்டு மாநகரசபை

## அணுகுதல் இலகு!

அரச அலுவலகங்களை அணுகி அங்கிருந்து தமக்கு தேவையான சேவையை பெற்றுக்கொள்வது குறித்த மக்கள் விழிப்புணர்வு இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவே. அந்த விடயங்களில் ஒரு புரிதலை மக்கள் மத்தியில் ஏற்படுத்த பல நடவடிக்கைகளை பல அமைப்புக்கள் முன்னெடுத்தாலும் அதில் முன்னேற்றம் என்பது மிகவும் குறைவே.



இந்த நிலைமை சேவையைப் பெறும் மக்களுக்கு மாத்திரமல்ல, அதனை வழங்கும் அலுவலர்களுக்கும் பலவிதமான சிரமங்களை ஏற்படுத்துகின்றது.

‘ஆனால், வழிகளை தெரிந்துகொண்டால் மாநகர நிர்வாகத்தை அணுகுதல் மிக இலகுவே’ என்கிறார் மட்டக்களப்பு மாநகர ஆணையர் என். மணிவண்ணன்,

பொதுவாக மக்கள் தினமான புதன்கிழமைகளில் தமது முன்னரங்க கருமபீடங்கள் மூலம் தம்மை மக்கள் அணுகுவது சிறப்பு என்கிறார் அவர். ஏனென்றால், அன்றைய தினம் தான் உட்பட அனைத்து அதிகாரிகளும் முழு நேரத்தையும் மக்கள் தொடர்பில் செலவிடுவதாக மணிவண்ணன் கூறுகிறார். அதுமாத்திரமன்றி, தமது மாநகர சபை வளாகத்தை “ஊழல் சூனிய பிரதேசமாக” தாம் பிரகடனம் செய்துள்ளதாகவும் அவர் கூறுகிறார். இதனைவிட, கடிதம், மின்னஞ்சல், விரைவில் வரவுள்ள தமது இணையப் பக்கம் ஆகியவற்றின் ஊடகவும் மக்கள் தம்மை தொடர்புகொள்ளலாம் என்கிறார் மணிவண்ணன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தனது கைபேசி இலக்கத்தை (0777772308) பகிரங்கமாக அறிவித்து, மக்கள் தன்னை எந்த முக்கிய தேவைக்காகவும் நேரடியாக அழைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். இந்த கைபேசி தொடர்பு அவருக்கு பெரும் இடைஞ்சலை கொடுப்பதை நானே அவரை நேரடியாக சந்தித்தபோது உணரக் கூடியதாக இருந்தது. ஆனாலும், அது தனது கடமை என்கிறார் அவர்.

அண்மைக்காலமாக சமூக ஊடகங்கள் ஒரு வழியில் ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு வழி செய்தாலும், மறுபுறம் பல அரச அலுவலர்களுக்கு தொந்தரவாக மாறியிருக்கின்றன. ஆனாலும் அவற்றை தாம் பொருட்படுத்துவதில்லை என்கிறார் மணிவண்ணன். ஆனாலும், நியாயமான விமர்சனங்களை, கோரிக்கைகளை நாம் வரவேற்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விரைவில் வரவுள்ள மழைக்கால நெருக்கடிகள் உட்பட பலவிதமான இடர்காலங்களை எதிர்கொள்ள பல திட்டங்களை தாம் தீட்டி வருவதாக கூறும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர், வரி அறவீட்டுக்காகவும் பல முன்னோடித் திட்டங்களை அமல்படுத்தவுள்ளதாக கூறுகிறார்.

அரசாங்க மற்றும் ஏசியா பவுண்டேசன் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மட்டு நகரை, அதன் சந்தையை, பேருந்து நிலையங்களை, தெருக்களை, கடைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களையும் மணிவண்ணன் எமக்கு விளக்கினார். அவை குறித்து அடுத்து வாரங்களில், உரிய அதிகாரிகளின் விளக்கங்களுடன் பார்ப்போம் வாசகர்களே.

## ஏசியா பவுண்டேசன் உதவியுடன் “வரி அறவீட்டு” மாதம் பிரகடனம்

மட்டக்களப்பு மாநகரசபையானது செப்டெம்பர் மாதத்தினை “வரி அறவீட்டு” மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது. மாநகரசபைக்குட்பட்ட 20 வட்டார மக்களுக்கும் துரித அபிவிருத்திகளை மேற்கொள்ளும் நோக்கோடு, இதுவரையில் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ள ஆதனவரி, வியாபார வரி மற்றும் ஏனைய வரி நிலுவைகளை அறவிடுவதற்காகவே இப்பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெறும் இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வானது நேற்று மாநகர சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர ஆணையாளர் ந.மணிவண்ணன், பிரதி ஆணையாளர் நா.தனஞ்ஜயன், ஏசியா பவுண்டேசன் நிறுவனப் பணிப்பாளர் கோபாகுமார் தம்பி, சிரேஸ்ட ஆலோசகர் ஜெயதிஸ்ஸ, நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் சசிகரன், மாநகர ஊழியர்கள் மற்றும் வரியிறுப்பாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். மாநகர முதல்வரால் வருமானவரி அறவீட்டு மாதத்திற்கான பிரகடனம் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 20 வட்டாரங்களுக்கும் 10 குழுக்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான பணிகளும் பொறுப்பளிக்கப்பட்டன.

இந்த வருமானவரி அறவீட்டு மாதத்தில், முதலாம் வாரம் வரி அறவீட்டுக்கான விழிப்புணர்வு வாரமாகவும், இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரங்கள் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு சென்று வரி அறவீடு செய்யும் வாரமாகவும், இறுதி வாரம் வரி செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாரமாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிறைவில் சிறந்த வரி செலுத்துனர்கள், சிறந்த வரி வசூலிப்பாளர்கள், சிறந்த வரி வசூலிப்புக் குழு என்பன தெரிவு செய்யப்பட்டு கொளரவிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# விளையாட்டு

## ஜங்ஸ்டார் விளையாட்டு கழகம் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கி கொண்டது.....



மட்டக்களப்பு மட்டிக்கழி கதிரொளி விளையாட்டு கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைமுன்னிட்டு நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு ஜங்ஸ்டார் விளையாட்டு கழகம் முதலிடத்தினைப் பெற்று, வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கி கொண்டது. மட்டிக்கழி கதிரொளி விளையாட்டுக் கழகத்தில் 46ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, கழகத்தலைவர் ரஞ்சனின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த 27 கழகங்கள் பங்குபற்றின. இறுதிப்போட்டியில் ஜங்ஸ்டார் அணியினை எதிர்த்து சிறிமுருகன் அணி களமிறங்கியது. இதில் 2 - 0 என்ற கணக்கில் ஜங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளருமான பூ.பிரசாந்தன் மற்றும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர். (ஜெயா)

## ரென்ஸ்டார் அணி வெற்றி கிண்ணத்தை கைப்பற்றியது



மட்டக்களப்பு - குறுந்தையடி முன்மாரி ரென்ஸ்டார் விளையாட்டுக் கழகம் தனது 08ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்திய அணிக்கு 09 பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அந்த அணியே வெற்றி கிண்ணத்தை கைப்பற்றியது.

இவ்வுதைபந்தாட்ட போட்டிகள் 01ம், 02ம் திகதிகளில் நடைபெற்றன. இச்சுற்றுப் போட்டிக்கு 32 அணிகள் கலந்து கொண்டன. இறுதிப் போட்டியில் மண்முனை மேற்கு பிரதேசத்திலிருந்து குறுந்தயடி முன்மாரி ரென்ஸ்டார் அணியும் மண்முனை தென்மேற்கு பிரதேசத்திலிருந்து மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியும் மோதிக்கொன்டன.

2:1 என்ற கோல் கணக்கில். ரென்ஸ்டார் அணி வெற்றி பெற்று இந்த ஆண்டிற்கான மகுடத்தினை சூடிக்கொன்டது.

மூன்றாமிடத்தை விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகமும்

நான்காமிடத்தை முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. (ஜெயா)

## ஜனாதிபதி சவால் கிண்ணத்தை கைப்பற்றியது ஏறாவூர் இளந்தாரகை




அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் 67ஆவது பிறந்தினத்தை முன்னிட்டு நடைபெற்ற "ஜனாதிபதி சவால் கிண்ண சுற்றுப்போட்டியில் ஏறாவூர் இளந்தாரகை அணி வெற்றிபெற்றது.

இக்காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகள்(3.9.2019) திங்கட்கிழமை நடைபெற்றன. இறுதிப்போட்டிக்கு ஏறாவூர் இளந்தாரகை அணியும் சீலாமுனை யங்ஸ்டார் அணியும் மோதிக்கொண்டதன. இப்போட்டியில் 4:1 எனும் கோல்களை புகுத்தி ஏறாவூர் இளந்தாரகை அணி ஜனாதிபதி சவால் கிண்ணத்தை தம்வசமாக்கிக் கொண்டது. சீலாமுனை யங்ஸ்டார் அணி இரண்டாம் இடத்தையும் , மூன்றாம் இடத்தினை இக்னேசியஸ் விளையாட்டுக் கழகமும், நான்காம் இடத்தினை முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

இதன்போது சிறந்த கோல் காப்பாளர் விருது கெனி கஸ்ரல் அஸ்ராடோவுக்கும், வளர்ந்து வரும் இளம்வீரருக்கான விருது துசாந்தனுக்கும், சிறந்த வீரருக்கான விருது எம்.எம்.எம்.முஸ்ராக்கும் வழங்கி வைக்கப்பட்டன. (ஜெயா)

## மட்டுநகரின் முது பெரும் கால்பந்தாட்ட வீரன் திரு.ஜோசப் வின்சன்ற்



தற்போது மட்டக்களப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் முது பெரும் கால்பந்தாட்ட வீரர்களுள் ஒருவராக திரு ஜோசப் வின்சன்ற் அவர்கள் உள்ளார். இவர் தற்போது மட்டுநகரிலுள்ள சின்ன உப்போடை வாவிக்கரை வீதியிலுள்ள வீட்டில் ஓய்வாக வாழ்ந்து வருகிறார். அண்மைய ஆண்டுகளில் தனது தளராத வயதிலும் கால்பந்தாட்டப் போட்டிகளைப் பார்ப்பதை தவிர்க்காது வாழ்ந்த இவர் நோய்களுக்கு உட்பட்ட காரணத்தால் வெளியில் வராது வீட்டில் ஓய்வெடுத்து வருகின்றார். எனினும் கடந்த திங்கக்கிழமை மட் வெபர் மைதானத்தில் ஜனாதிபதியின் பிறந்த தினத்தை சிறப்பிக்கும் வகையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்ட இறுதி ஆட்டத்தினை இரசிக்க வந்திருந்தார்.

திரு ஜோசப் வின்சன்ற் அவர்கள் 1938.10.14 ஆந் திகதி மட்டக்களப்பு பெரிய உப்போடையில் பிறந்துள்ளார். அவருடைய தந்தையார் திருகோணமலைத் துறை முகத்தில் தொழில் புரிந்ததன் காரணத்தால் இவருடைய சிறுபராயம் திருகோணமலையிலேயே கழிந்துள்ளது. 16 வயது வரை திருகோணமலையிலேயே வாழ்ந்துள்ளார். திருகோணமலையில் வாழ்ந்த காலத்தில் கால்பந்தாட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளார். இவருடைய கால்பந்தாட்ட ஈடுபாட்டிற்கு இவருடைய தந்தையார் பக்க பலமாக விளங்கியுள்ளார்.

திருமலையிலிருந்து 1955 ஆம் ஆண்டு 16 ஆவது வயதில் மட்டக்களப்பு வந்த போது மட்டக்களப்பில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய யுனைட்டட் விளையாட்டுக் கழகம், பாடுமீன் பொழுது போக்குக் கழகம், டைனமோஸ் விளையாட்டுக் கழகம், வி.ஆர்.சி விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்களில் இணைந்து கால்பந்தாட்டத் திறனை வெளிப்படுத்தியுள்ளார். 1957 தொடக்கம் 1982 வரை மட்டக்களப்பு மாவட்டத் தெரிவு அணியில் இடம்பெற்றுள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கு திறந்து வைக்கப்பட்ட போது அங்கு விளையாடுவதற்காக தேசிய மட்டத்தில் கால்பந்து வீரர்கள் தெரியப்பட்டதில் மட்டுநகர் பாடுமீன் கழகத்திலிருந்து இவர் தெரிவாகியுள்ளார்.

இவர் பல வருடம் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட அணியின் பயிற்றுனராக கடமையாற்றியுள்ளார். இவர் பயிற்சியாளராக இருந்த போது மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணி தேசிய ரீதியில் இறுதியாட்டத்திற்கு முன்னேறி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரு ஜோசப் வின்சன்ற் அவர்கள் கால்பந்தாட்டத்தில் மட்டுமின்றி துவிச்சக்கர வண்டி ஓட்டம், வேகநடை, பாரம் தூக்குதல், கரம் ஆகிய விளையாட்டுக்களிலும் முத்திரை குத்திய விளையாட்டு வீரராகத் திகழ்ந்துள்ளார். சிறந்த நாட்டுக்கூத்து கலைஞருமாவார்.

கௌரீஸ்வரன்

சாப்பாட்டு ராமன் போட்டியிலும் இவரே முதன்மையானவராக இருந்துள்ளார்.

## மாதா கோயில் நூற்றாண்டை சிறப்பிக்கும் கரப்பந்தாட்ட போட்டிகள்



தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலய நூற்றாண்டைச் சிறப்பிற்கும் முகமாக மட்டக்களப்பு மறைகோட்டத்தின் கீழ் அமைந்துள்ள ஆலயங்களின் பங்குகளுக்கிடையிலான சிநேகபூர்வ கரப்பந்தாட்ட போட்டியொன்றினை ஆலய பங்கு சமூகம் நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் யாவும் விலகல் முறையில் நடைபெறவுள்ளதாகவும் அவ்வவ் பங்குகளை சார்ந்தவர்களே போட்டியில் பங்குபற்ற முடியும் என்றும் முதலாம் இரண்டாமிடங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் பங்குத்தந்தை அருட்பணி ரமேஸ் கிறிஸ்றி தெரிவித்துள்ளார்.

போட்டி ஒழுங்குகள் குறித்த அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்ள செ.தேவராஜன் அவர்களை தொடர்பு கொள்ளுமாறும் அவர் கூறியுள்ளார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club- Baticaloa

# மரநிழலிலும், அயலவர்களின் வீடுகளிலும் இயங்கும் பாலர் பாடசாலை



“கற்பதற்கு நிரந்தர இடமின்றி மரநிழலையும், அயலவர்களின் வீட்டையும் பாடசாலையாகக் கொண்டு மக்களடியூற்று பாலர் பாடசாலை மாணவர்கள் கற்றுவருவதாக” வாழைக்காலை சந்தியில் நின்று கணேசனும் தம்பிராசாவும் பேசிக்கொண்டனர்.

“இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்ற முதுமொழிக்கிணங்க ஆரம்பப்பிரிவில் வழங்கப்படுகின்ற கல்வியே, மாணவர்களுக்கு மிகவும் பெறுமதிமிக்கது. அக்கல்வியினை ஊட்டும் ஆரம்ப இடங்களாக பாலர் பாடசாலைகள் இருக்கின்றன. மாணவர்களது கற்றலுக்கான ஆரம்பப் படிமுறைகளை வழங்குகின்ற, மகிழ்ச்சிகரமான இடமாக பாலர் பாடசாலைகள் உள்ளன. இவ்வாறு நாட்டில் உள்ள பாலர் பாடசாலைகள் பலவும் அமைப்புக்களினாலும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினாலும், தனிநபர்களினாலும் நடாத்தப்படுகின்றன. அவ்வாறான பாடசாலைகள் பல்வேறான வசதிகளுடனும் இருக்கின்றன. ஆனால், இவ்வற்றிற்கெல்லாம் எதிர்மாறான முறையில் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள மக்களடியூற்று கிராமத்தில் அமைந்துள்ள பாலர் பாடசாலை அமைந்துள்ளது. இப்பாடசாலையின் நிலை தொடர்பில்தான், கணேசனும், தம்பிராசாவும் பேசிக்கொண்டனர்.

முப்பது வருட யுத்த சூழலுக்குள் அகப்பட்டிருந்த படுவான்கரைப் பிரதேசத்தில், மக்களடியூற்று கிராமமும் ஒன்றாகும். இக்கிராமத்தில், தற்காலத்தில் 58 குடும்பங்கள் உள்ளன. இங்குள்ள மாணவர்கள் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக நாற்பதுவட்டையில் அமைந்துள்ள விபுலானந்த வித்தியாலயத்திற்கே சென்று, கற்றுவருகின்றனர். 2011ஆம் ஆண்டிற்கு முன்னரும் நாற்பதுவட்டை பாலர் பாடசாலைக்கே இங்குள்ள பாலர்களும் சென்று கல்வி கற்றுவந்தனர். இப்பாடசாலைக்கும் மக்களின் குடியிருப்புக்குமிடையிலான



தூரம் மூன்று கிலோமீற்றருக்கும் மேற்பட்டதாக இருந்தமையினாலும், காடுகளை கடந்தே போக்குவரத்து செய்யவேண்டிய சூழலினாலும், 2011ஆம் ஆண்டு மக்களடியூற்றுக் கிராமத்தில் எட்டு மாணவர்களுடன் பாலர் பாடசாலையொன்று அமைக்கப்பட்டதாக கணேசன் குறிப்பிட்டார்.

அமைப்பொன்றினால் மக்களடியூற்று கிராமத்தில், பாலர் பாடசாலை அமைக்கப்பட்ட போதிலும், மாணவர்களின் தொடர்ச்சியான கற்றலுக்கு நிரந்தர கட்டிடம் அமைக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள மாணவர்கள் மரநிழலிலும், தற்காலிக கூடாரங்களிலும், அயலவர்களின் வீடுகளிலுமிருந்து கற்றல், கற்பித்தலை தொடர்ந்துகொண்டு வந்ததாக கணேசன் கூறினான். எட்டுப்பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலையில் தற்போது 20 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். இவர்களை கற்பிப்பதற்கென ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு, அவருக்கான போக்குவரத்து கொடுப்பனவு மாத்திரம் வழங்கப்பட்டு வருகின்றன.

நிரந்தர கட்டடமின்மை பாரிய பிரச்சினையாக இருந்துவருகின்ற அதேவேளை, குடிநீர், மின்சாரம், மலசலகூடம், சிறுவர் விளையாட்டு முற்றம், கற்றல் கற்பித்தலுக்கான உபகரணங்கள், தளபாட வசதிகள் போன்ற பல்வேறு உதவிகளுமின்றியே இப்பாலர் பாடசாலை இயங்கி வருகின்றது. பாலர்கள் விளையாடி மகிழ்ச்சிகரமாக இருப்பதற்கு, சிறுவர் முற்றம் அமைக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியமானது. ஆனால் சிறுவர் விளையாட்டு முற்றம், இங்கு அமைப்படாமை மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு எதிரானதாக அமைந்துள்ளது. அதேவேளை குடிப்பதற்கு நீரின்மையும், மலசலம் கழிப்பதற்கான கூடமின்மையும் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளதாக கணேசனும் தம்பிராசாவும் பேசிக்கொண்டனர்.

கற்பிப்பதற்கு, படங்களை வரைந்து காண்பிப்பதற்கு, மாணவர்களுக்கான அழகுபடுத்தப்பட்ட வகுப்பறைகளை காண்பிப்பதற்கென வசதிகள் ஏதும் இருக்கின்றதா? என தம்பிராசாவும் வினவ, “எழுவதற்கு கரும்பலகை அல்லது வெண்பலகை, எழுதுகருவி கூட இங்கில்லை” என கணேசனும் குறிப்பிட்டதன்

**படுவான் பாலகன்**

மூலம் ஒன்றுமே இல்லாத நிலையிலே இயங்கிவருகின்ற பெயரளவு பாடசாலையே இதுவென்பதனை தம்பிராசா உணர்ந்து கொண்டான்.
மகிழ்ச்சிகரமான கற்றலையும், மாணவர்கள் விரும்பத்தக்க சூழலையும் ஏற்படுத்தியிருக்க வேண்டிய பாலர் பாடசாலை, வீட்டிலிருக்கின்ற அதே சூழலையும், காடுகளையும், பற்றைகளையும் மாத்திரம் காண்பித்து, செயற்பாட்டளவிலின்றி, பார்வையளவில் கற்றல் செயற்பாட்டை எட்டு வருடங்கள் கொண்டு சென்றிருக்கின்றமை வேதனையானதொன்றே. புதிய உத்திகளையும், காட்சியமைப்புக்களையும் கையாண்டு கற்பிப்பதற்கு ஆசிரியர் தயாராக உள்ள நிலையிலும், மாணவர்கள் அவ்வாறான வித்தியாச, மகிழ்ச்சிகர கற்றல், கற்பித்தலை எதிர்பார்த்து காத்திருக்கின்ற தற்போதைய தருணத்தில் பாலர் கல்விக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி வழங்குவதற்கு முன்வருவார்களா? என்ற ஏக்கத்துடன் கணேசனும், தம்பிராசாவும் பேசிவிட்டு அவ்விடத்திலிருந்து அகன்றனர்.

## படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்

---

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய மகோற்சவம்



கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்றதும், கல்நந்தி புல்லுண்டு வெள்ளையரை துரத்தியடித்த அற்புதம் நிகழ்ந்த ஆலயமும், வரலாற்று சிறப்புமிக்கதுமான கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 11.09.2018ம் திகதி அதிகாலை 4.30மணிக்கு திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 2018.09.30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேரோட்டமும், அன்றிரவு முனைக்காடு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய முன்றலில் திருவேட்டையும் நடைபெற்று, மறுநாள் காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.
இந்த வருடமும் ஆலய திருவிழாவுக்கு மட்டக்களப்பிலும் இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.



# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம்

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

புறநானூற்றில் வரும் ஒரு செய்யுள். அது, ‘இனிநினைந் திரக்க மாகின்று…’ என்று தொடங்கி, ‘பெருமூதாளரே மாகிய வெமக்கே’ என்று முடிகின்றது. 14 வரிகளைக் கொண்டது. இதைப் பாடியவர் தொடித்தலை விழுத்தண்டினார். ஒவ்வொரு செய்யுளையும் ஒவ்வொரு துறைக்குரிய செய்யுள் என வகைப்படுத்தியிருப்பர். அந்த வகையில் இது, ‘கையறுநிலை’ என்னும் துறைக்குரிய செய்யுளாகும். கழிவிரக்கத்துக்குரியது. அதாவது கழிந்து போன விடயங்களை நினைத்து இரங்கிப் பாடப்பட்டதாகும். அச்செய்யுள் இங்கு தரப்படுகின்றது.

இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்யுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

இச்செய்யுளை உள்ளபடி வாசித்த பின்னர் பின்வருமாறு வகைப்படுத்தி வாசித்துப் பாருங்கள்.

1. திணிமணல் செய்யுறு பாவைக்குக் கொய்பூத் தைஇ
2. தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து
3. தழுவுவழித் தழீஇ
4. தூங்குவழித் தூங்கி
5. மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு

6. உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
7. நீர்நணிப் படிகோடு ஏறி
8. சீர்மிக
9. கரையவர் மருள
10. திரையகம் பிதிர
11. நெடுநீர்க் குட்டத்துத் ‘துடும்’ எனப் பாய்ந்து குளித்து
12. மணற் கொண்ட கல்லா இளமை அளிதோதானே
13. யாண்டு உண்டு கொல்லோ

14. தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி
15. நடுக்குற்று
16. இருமிடை மிடைந்த சிலசொல்
17. பெருமூ தாளரே மாகிய வெமக்கே
18. இனிநினைந் திரக்க மாகின்று

முதலில் 1-5 வரையுள்ள வரிகளைக் கவனத்திற்கொள்வோம்.

---

செறிந்த மணலில் செய்யப்பட்ட வண்டல் பாவைக்குப் (பொம்மைக்கு) பூவினைச் சூடி, குளிர்ச்சி நிறைந்த குளத்தில் நீராடி விளையாடும் மகளிரோடு கைகோத்து, அவர்கள் தழுவிய இடத்தில் தழுவினோம். அசைந்த இடத்து அசைந்தோம். அவை மட்டுமல்லாமல் ஒளித்துச்செய்யும் செயல்களை அறியாத வஞ்சனையற்ற கூட்டத்தினருடன் (இளைஞருடன்) சேர்ந்து, பின்வருவனவற்றையும் செய்தோம்.

அடுத்து, 6-13 வரையுள்ள வரிகளைக் கவனத்திற்கொள்வோம்.

---

உயர்ந்த கிளைகளைக் கொண்ட மருத மரம் நிற்கின்ற நீர்த்துறையில், தாழ்ந்து நீருக்கு மிக அண்மையில் உள்ள அந்த மரத்தினது கிளையினில் ஏறி, அழகு மிகும் வண்ணம் குளத்துக் கரையிடத்தே நிற்பவர்கள் வியக்க, ஆழம் நிறைந்த அந்தக் குளத்தில் நீர்த்திவலைகள் தெறித்து எழ, ‘துடும்’ என ஒலி எழும் வண்ணம் பாய்ந்து, மூழ்கி அக்குளத்தின் அடியிலிருக்கும் மண்ணைத் தொட்டு வெளியே எடுத்துவந்து காட்டிய, ‘விளைவுகளை ஆராயாது செயற்படும் பயமற்ற’ அந்த இளமைப் பருவம் இரங்கத்தக்கது. அந்த இளமைப் பருவம் இன்று எங்கு போனதோ?

இனி, 14-18 வரையுள்ள வரிகளைக் கவனத்திற்கொள்வோம்.

---

பூண் பூட்டிய தலையை உடைய ஊன்றுகோலை ஊன்றியவர்களாயும் நடுக்கமுறுபவர்களாயும் இருமலுக்கு இடையே சில சொற்களைப் பேசுபவர்களாயும் உள்ள பெரிய முதியவர்களாகிய எமக்கு, அந்த இளமை இனிது நினைந்து இரங்கத்தக்கதாகும்.

# கற்போம்

## நுண்ணறிவு 01

S.M வண்ணன்

### எண் தொடர்

பொருத்தமான எண்ணை புள்ளிக்கோட்டில் எழுதுக.

---

01) 1, 4, 7, 10, 13, …….. , …….
02) 1, 3, 6, 10, 15, ……, ……..
03) 2, 5, 7, 8, 9, 11, 14, 17, … , …….
04) 1, 2, 6, 15, 21 , 46, …….. , …….
05) 1, 3, 8, 18, 35, 71, …., …….
06) 1, 1, 4, 12, 27, 51, ……., …….
07) 3, 7, 13,27,53, …….. , …...
08) 10, 10, 9, 7, 7, ....., 4, 4, 3, 1
09) 24, 30, ...... , 60, 84, 114
10) 2 ,7, 16, ….,46, 67, 92
11) 34, 48, ...... , 79, 96
12) 3, 2, 5, 4, 8, 12, 12, 48, ……, ……
13) 0, 6, 24, 60, 120, 210, …. , …….
14) 1, 9, 25, 49, 81, …….., ……..
15) 5, 8, 13, 20, 29, ……., ……..
16) 4, 5, 7, 10, 15, 22, …… , ……..
17) 3, 4, 9, 32, 155, …… , …….
18) 1, 4, 27, 256, …….. , ……..
19) 4, 16, 64, 256, …….. , ……
20) 1, 3, 6, 8, 16, 18, 36, …… , …….
21) 4, 11, 23, 40,62,89, …….. , …….
22) 241,231,215,193, ……. , ……..
23) 3, 15, ……, 63, 99, 143,
24) 1, 2, 3, 5, 8, 13, ……, …..
25) 24, 39, 416, 525, ….. , …….

---

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

1 அதிகாரபூர்வ பெயர் : இலங்கைசனநாயகசோ‘லிசக்குடியரசு
2 தலைநகரம் : ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம்
3 பெரியநகரம் : கொழும்பு
4 அமைவிடம் : தெற்கு ஆசியா
5 சிறப்புப் பெயர் : இந்துசமுத்திரத்தின்முத்து/நித்திலம்
6 எல்லைகள் : அகலாங்கு – 50 55’– 90 50’ நெட்டாங்கு – $79^0$ 31’– $81^0$ 53’
7 நீளம் : 433Km
8 அகலம் : 226Km
9 பரப்பளவு : 65,610 Km2 (உலகில் 122 ஆவது)
-சுற்றளவு: 1340 Km -நிலம் : 62,705Km2 -நீர் : 2905 Km2
-ஆகக் கூடிய உயரம்: 2525மீற்றர்(பீதுறுதாலகால)
10 மக்கள் தொகை : 20,966,000

## பக்க அனுசரணை




இவ்வாறு செய்யுள்களைப் பொருத்தமான முறையில் வகுத்து நோக்கும் போது வினாக்களுக்கு விடையளிப்பது சுலபமாக இருக்கும். சில வினாக்களை உருவாக்குவோம்.

1. ஆடவர்களின் செயல்களைக் குறிப்பிடுக.
2. மகளிரின் செயல்களைக் குறிப்பிடுக.
3. முதுமைக் காலத்து நிலைமையை எடுத்துக்காட்டுக.
4. ‘கல்லா இளமை’ என்னும் தொடரை விளக்குக.
5. இச்செய்யுள் மூலம் நீர் கற்றுக்கொண்டதைக் கூறுக.
6. இளமைப் பருவம் - முதுமைப் பருவம் ஒப்பிடுக.
7. ‘தண்கய மாடு மகளிரொடு’ - இங்கு கயம் என்பதன் பொருள் யாது?

இளமைக் காலத்தில் தாம் செய்த செயல்களை முதுமைக் காலத்தில் நினைத்து இரங்குகிறார்கள். முதுமைக் காலத்தில் இளமைக் காலத்து நினைவுகள்தான் எமக்குரிய இலவச இணைப்புக்கள். ஆகவே, இளமைக் காலத்தில் சிறந்த செயல்களைச் செய்தல் வேண்டும்.

*இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கத்துக்கு அனுப்பிவைக்கலாம்.*

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம் - 4

*(உலகப் பொதுமறையாக விளங்குகின்ற ஒப்பற்ற அறிவு நூலும், தனித்துவம்மிக்க காதல் இலக்கியமுமான திருக்குறள் இலக்கணமிட்டுள்ள காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.)*

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

காதல் சிறப்பு உரைத்தல் என்னும் அதிகாரத்தில் பிரிந்திருக்கும் காதலர்கள் தாம் ஒன்றாகச் சேர்ந்திருந்த காலத்தில் இருவரும் சேர்ந்து அனுபவித்த இன்பத்தையும், மகிழ்ச்சியையும் எண்ணிப்பார்த்து, அந்த நினைவுகளைப்பற்றி வெளிப்படுத்தும் காட்சிகளை நாம் காணலாம். முதல் ஐந்து குறள்கள் காதலன் கூறுவதாகவும், மற்றைய ஐந்து குறள்களும் காதலி சொல்வதாகவும் உள்ளன. இந்த அமைப்பு

காதலில் ஆணும் பெண்ணும் சமமான உணர்வும், உரிமையும் உள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது.

பாலுடன் தேன்கலந்த சுவையினைச் சொல்லவா?

முத்தம் என்பது அன்பை வெளிப்படுத்தும் அற்புதமான செயல். மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் தங்கள், அன்பை வெளிப்படுத்தவும், இசைவைத் தெரிவிக்கவும் ஒன்றையொன்று முத்தமிடுவது இயல்பானது. பெற்றோர் தம் குழந்தைகளின் கன்னத்தில் முத்தமிட்டுக் களிப்படைவதும், குழந்தைகள் பெரியவர்களானதும் உச்சி முகர்ந்து, நெற்றியில் முத்தமிட்டுத் தமது அன்பை வெளிப்படுத்துவதும் இன, மத வேறுபாடின்றி உலக மக்கள் எல்லோரிடமும் உள்ள பொதுவான பழக்கமுறையாகும். பெற்றோர்கள் மட்டுமன்றி சகோதரர்கள், நண்பர்கள் கூடகன்னத்தில் முத்தமிட்டுத் தமது அன்பைத் தெரிவிக்கும் வழக்கம் மேலைநாடுகளில் சாதாரணமானதே. ஆனால், காதல் வயப்பட்டோர் மட்டுமே பரிமாறிக்கொள்வது இதழ்களும், இதழ்களும் இணையும் முத்தம். அதனை வேறு யாரும் பரிமாறிக்கொள்வதில்லை. அவ்வாறு பரிமாறிக்கொள்பவர்கள் காதலர்களாகவோ, தம்பதிகளாகவோ அல்லது அதுபோன்ற உறவுள்ளவர்களாகவோ மட்டுமே இருக்க முடியும். முத்தம் என்பது வெள்ளைக்காரன் கண்டுபிடித்த விடயம் என்பதுபோல நம்மில் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னரே முத்தத்திற்கு இலக்கணம் வகுத்த நூல்கள் தமிழ் மொழியில் ஆக்கப்பட்டுள்ளன. மனிதகுலம் தோன்றமுன்னரே தோன்றிவிட்ட அந்த உன்னதமான உணர்வு வெளிப்பாட்டின் உடல் செயற்பாடுபற்றி எண்ணற்ற இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திருக்குறளிலும் மிகவும் நளினமாகச் சொல்லப்பட்டுள்ளது.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால் எயிறு ஊறிய நீர் (1121)

மிகவும் இதமாகப் பேசும் அவளின் (எனது காதலியின்) வெண்மையான பற்களில்



ஊற்றெடுக்கும் நீர், பாலுடன் தேனைக்கலந்து பருகுவதுபோல இனிமையானது என்பது நேரடிக்கருத்து.

------ ----- -----

அவளும் நானும் உடலும், உயிரும் போல் அல்லவா?

உயிர் அழிவதில்லை என்றும், உயிருக்கு மரணமில்லை என்றும் சொல்லப்படுகின்றது. உயிர் உடலை விட்டுவிட்டால் பரமாத்மாவுடன் சேர்ந்துவிடும் என்று சைவ சித்தாந்தமும், உயிரே பரமாத்மாவாகிவிடும் என்று வேதாந்தமும் சொல்கின்ற கோட்பாடுகள் மட்டுமன்றி, ஏனைய மதங்களும் உயிர்பற்றியும், உடல் பற்றியும் தனித்தனியான நெறிகளைக் கொண்டுள்ளன. ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் உயிரும் உடலும் சேர்ந்தால்தான் வாழமுடியும் என்பதே இயற்கையின் ஏற்பாடு. ஒன்றும் ஒன்றும் சேர்ந்து ஒன்றாவதே அந்தக் கோட்பாடு. இதில் உயிர் பெரியதா, உடல் பெரியதா என்ற கருத்திற்கு இடமில்லை. அதனைப்போன்றதே எனக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பாகும். நான் உயிர் என்றால் அவள் உடல். நான் உடல் என்றால் அவள் உயிர். உயிருக்கும் உடலுக்கு உள்ள தொடர்பினைப் போன்றதே எனக்கும் அவளுக்கும் உள்ள நட்பாகும்.

இவ்வாறு, காதலன் ஒருவன் தனக்கும் தன் காதலிக்கும் இடையில் உள்ள காதலின் சிறப்பினை உணர்த்துவதாக இந்தக் குறள் அமைந்துள்ளது.

உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு (1122)

உடலுக்கும், உயிருக்கும் இடையில் உள்ள தொடர்பினைப் போன்றதே, எங்காதலிக்கும் எனக்கும் இடையில் உள்ள (நட்பு) உறவு என்பது இந்தக்குறளின் நேரடியான பொருளாகும்.

----- ----- -----

என்னவள் பிரிய என்னுயிர் பிரியுதே, இல்லையா?

அதே கருத்தினை மேலும் வலியுறுத்தும் வகையில் அமைந்திருக்கிறது இன்னும் ஒரு குறள். இந்த உலகில் உடல் இல்லாமல் உயிரினால் தனித்து வாழ முடியாது. உயிர் இன்றி உடம்பிற்கும் வாழ்வில்லை. அதேபோலவே, நான் வாழும் உடலாக இருக்கும்போது எனது காதலி உயிராக இருக்கிறாள். அதனால் நான் வாழ்கிறேன். ஆனால் அவள் பிரிந்து செல்லும்போது, என் உடலைவிட்டு உயிர்பிரிவதுபோல இருக்கிறது. அவளின் பிரிவு எனக்கு மரணத்தைத் தருவதுபோல இருக்கிறது. உயிரும் உடலும் ஒன்றையொன்று பிரியும்போது, மரணம் உண்டாவதைப்போல, என்னைவிட்டு அவள் நீங்கும்போது எனக்கு இறப்பதுபோல இருக்கிறதே என்று காதலன் சொல்கிறான். பண்டைக்காலத்தில் மட்டுமன்றி, இந்தக்காலத்திலும், எந்தக்காலத்திலும், கூடிக்களித்திருக்கும் காதலர்கள், பிரியும் நேரம் வரும்போது கண்கள் கலங்குவதும், மீண்டும் சந்திக்கலாம் என்ற நிலை இருந்தும், அந்தத் தற்காலிகப் பிரிவுக்கே உயிரே போவதுபோன்ற உணர்வினால் தவிப்பதும் காதலுக்கு மட்டுமே உள்ள தனித்துவமாகும். காதலித்தவர்களுக்கு அது தெரியும். காதலித்துப்பாருங்கள் அப்போது புரியும்.

வாழ்தல் உயிர்க்கு அன்னள் ஆயிழை
சாதல் அதற்கு அன்னள் நீங்கும் இடத்து
(1124)

அவள் என்னுடன் கூடியிருக்கும்போது, எனக்கு உயிராக இருக்கிறாள். என்னைவிட்டு அகலும்போது, எனது உயிர் பிரிவதைப்போன்ற நிலையே எனக்கு உண்டாகின்றது. என்பது இந்தக் குறளின் கருத்து

------ ----- -----

அவளை நினைப்பதே இல்லையே!

ஒருவன் சொல்கிறான் தனது காதலியை ஒருபோதும் தான் நினைத்துப் பார்ப்பதே இல்லையாம். ஏன் என்றால், அவளை மறந்தால்தானே நினைக்க வேண்டும். நான் மறப்பதும் இல்லை, அதனால் நினைப்பதும் இல்லை. அவளது அழகிய கண்கள் என்னுடன் எப்போதும் சண்டை பிடித்துக்கொண்டேயிருக்கும். பெருமை மிக்க பெண்களுக்குரிய அருமையான நற்குணங்கள் அனைத்தும் கொண்டவள் அவள். அவளது நற்குணங்களை என்னால் மறக்க முடியாது. அந்த நற்குணங்கள் காரணமாக அவள் தரும் மகிழ்ச்சியை மறக்க முடியாது. அதனால் அவளையும் என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. என் நெஞ்சில் எப்போதும் நிலை கொண்டு, என்னை மகிழ்வித்துக்கொண்டிருக்கும் அவளை நான் மறப்பேனா? மறந்தால்தானே நினைக்கவேண்டும்?

காதல் வயப்பட்டவர்கள் எப்போதும் பித்துப் பிடித்தவர்களைப்போல் இருப்பார்கள் என்பது பொதுவான அபிப்பிராயம். பித்து என்றால் என்ன? பைத்தியம்! காதலியொருத்தி ஏதாவது கேட்டுவிட்டால் அதனை நிறைவேற்றுவதற்கு, உண்மையான காதலன் தன் உயிரையும் கொடுப்பான் என்பது வெறும் கதையல்ல. கற்பனையல்ல. காப்பியங்களில் மட்டும் வெளிவந்த காட்சிகளுமல்ல. நம்மிடையே வாழும் மனிதர்களில் பலர் தமது சக்திக்கு மேலாக மிகவும் சிரமப்பட்டு, தமது காதலியின் விருப்பத்தை நிறைவேற்றுவதை அன்றாட வாழ்வில் நாம் காண்கின்றோம். அதுதான் காதல். இந்த உலகில் நிலவுகின்ற சக்திகள் எல்லாவற்றிலும் மிகவும் உயர்ந்ததும், சிறந்ததும், மகத்தானதுமான சக்தி காதலின் சக்தியே!

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பு
அறியேன்
ஒள் அமர்க் கண்ணாள் குணம் (1125)

என்னுடன் எப்போதும் சண்டைபிடித்துக் கொண்டிருக்கும் ஒளிவீசும் கண்களையுடைய எனது தலைவியின் நற்குணங்களை மறந்தால்தானே நான் அவளை நினைக்க வேண்டும்? நான் அவளை மறப்பதில்லை, அதனால் நினைப்பதுமில்லை. இவ்வாறு ஒரு காதலனின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் வள்ளுவரின் வாய்மொழி இது.

(தொடரும்)

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

# மூதாதையரின் காலடிகள்

## நிலாவெளி




பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

நிலாவேணி என்ற அரசியின் பெயரால் நிலாவெளியாயிற்று எனும் கதையோடு, திருகோணமலை குளக்கோட்டன் காலத்தில் நான்கு பெரும் அரசுகளில் ஒன்றான கட்டுக்குளப்பற்றின் முக்கிய பகுதியாக நிலாவெளி விளங்கியமையை வரலாற்று சான்றுகள் நிருபிக்கின்றன.

திருகோணமலை நகரத்திலிருந்து தென்னமரவாடி செல்லும் பிரதான வீதியில், சில மைல் தொலைவில் இரு புறமும் தோட்டங்களும் துரவுமாய் சுற்றுலா விடுதிகள் கடற்கரையை அண்டி உல்லாச புரியாக, வெளிநாட்டினரின் சொர்க்கமாக திகழும் இந்த நிலாவெளி பழமை வரலாற்றுக் கருவூலமாகவும் பண்பாட்டு விழுமியங்களை பேணும் தமிழர் நிலமாகவும் காட்சியளிக்கிறது.

நிலாவெளி என்ற பெயர் வரக்காரணமாக கர்ண பரம்பரைக் கதையொன்று நிலாவேணி எனும் பெயருடைய அரசி இப் பகுதியை ஆண்டதாகவும் அவள் இந்த இடத்திலிருந்து அரசாண்டதால் நிலாவேணியூர் என நிலைத்து பின்னர் நிலாவெளியூர் என மருவியதாகவும் நம்பப்படுகிறது.




நிலாவெளி என்பதற்கு மற்றுமொரு மரபும் பேசப் படுகிறது. கடற்கரையும் அதனையொட்டிய கரச்சை வெளிகளும் இருக்க, அந்த வெளிகளில் உப்பு காச்சி அவற்றை பரப்பி விட்டிருக்கும் வெள்ளை விரிப்பாய் நீண்ட அந்த வெளிகளில் நிலொவொளி பளிங்குபோல் ஒளிபரப்ப, அது "நிலவெள்ளி" என அழைக்கப்பட்டு, காலப் போக்கில் அதுவே மாறி நிலாவெளி ஆகியதாக சொல்லப்படுகின்றமையும் இங்கு கவனம் பெறுகிறது.

நிலாவெளியின் வரலாற்றை நாம் சிந்துவெளி நாகரிக காலத்துடன் தொடர்புபடுத்தக் கூடிய சுடு மண் சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புது டெல்லி தேசிய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு பேணப்படும் சிற்பங்கள் நிலாவெளியின் தொன்ம வரலாற்றை நிருபிக்கின்றன. கிட்டத்தட்ட மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான வரலாற்றோடு நிலாவெளி தொடர்புபடுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பண்டைக்கால கடல் வாணிபத்தின் முக்கிய கேந்திர மையமாக நிலாவெளி இருந்திருக்க வாய்ப்புகள் நிறையவே காணப்படுகின்றன.
நிலாவெளி வரலாற்றில் கோணேசர் கோயிலோடு தொடர்புபட்ட கல்வெட்டு பல முக்கிய செய்திகளை கொண்டுள்ளது.

நிலாவெளி பிள்ளையார்கோயிலின் தீர்த்தக்கிணற்றின் படிக்கல்லு ஒரு கல்வெட்டின் பாதிப்பகுதியை காட்டி நிற்க, அதனை படியெடுத்து வாசித்த பேராசிரியர் இந்திரபாலாவும், பேராசிரியர் குணசிங்கமும் அதனை வாசித்து சில வரலாற்று காரணிகளை இணைத்தனர் எனலாம்.

இக் கல்வெட்டு "திருகோணமலையில் உள்ள மத்திய கேஸ்வரம் எனும் கோயிலுக்கு அன்றாட வழிபாட்டு தேவைகளுக்காக வழங்கப்பட்ட தானம் ஒன்றை குறிக்கிறது. மத்யெஸ்வரம் என்பது திருக்கோணேஸ்வரத்தின் முன்னைய பெயர். அக்கோயிலுக்கு வழங்கப்பட்ட தானம், நில புலன்கள் பற்றி இக் கல்வெட்டு பேசுகிறது. கடற்கரையை அண்டிய பல ஊர்களும் நிலமும் கோணேஸ்வரத்துக்கு தானமாக கொடுக்கப்பட்டதாக இக் கல்வெட்டு சொல்வதுடன், கோணமாமலை, திருகோணமலை எனக் குறிப்பிடும் மிகப் பழைய ஆவணம் இதுவே"

நிலாவெளி கல்வெட்டு பற்றி விக்கி பீடியா, நீண்ட வரலாற்றுப் பதிவை தொகுத்து தருகிறது

"இச் சாசனத்தில் "கோணபர்வதம் திருகோணமலை மச்சகேஸ்வரமுடைய மஹாதேவர்க்கு" என்னும் குறிப்புக் காணப்படுகின்றது. மேலும், "உரா கிரிகாம கிரிகண்ட கிரிகாமம்" என்னும் இடத்தையும், வடக்கே சூலம் பொறிக்கப்பட்ட கல்லையும் எல்லைகளாகக் கொண்ட 250 வேலி (ஏறத்தாள 1710 ஏக்கர்) நிலம் மச்சகேஸ்வரக் கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த எல்லைகளை வைத்துப் பார்க்கும்போது, வடக்கே "திரியாய" என்னுமிடத்திலிருந்து தெற்கே ஆகக்குறைந்தது நிலாவெளி வரையுள்ள கடலுக்குச் சமீபமாக உள்ள நிலப்பரப்பு, சோழர் ஆட்சிக் காலத்தில் கோணேஸ்வரக் கோயிலுக்குச் சொந்தமாக இருந்தது எனக் கொள்ளலாம். ஏறத்தாள 1710 ஏக்கர் நிலம் அரச வம்சத்தினரைத் தவிர வேறு எவராலும் கோயிலுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்க முடியாது. இப்படியான பெருமளவு தானத்தை கோணேஸ்வரக் கோயில் பெற்றதற்கு, சமகாலத்தில் சோழமன்னர்களினால் தமிழ் நாட்டில் செய்யப்பட்ட இந்துக் கோயில்களின் அபிவிருத்தியும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஏனெனில் பல்லவர் காலம் முழுவதிலும் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் முழு விளைவுகள் சோழர் காலத்திலேயே பெருந் தாக்கத்தினை ஏற்படுத்தின. மேலும், சாசனத்திலுள்ள இச்செய்தி, "தக்ஷிண கைலாச புராணம்" மற்றும் "கோணாசல புராணம்" ஆகியவற்றில் உள்ள, கோணேஸ்வரக் கோயில் பெற்றிருந்த பெருந்தொகையான நிலத்தானங்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற செய்திகளை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளன.[6]



இச் சாசனம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர், நூல்கள் சிலவற்றில் திருகேணமலையை "கோகண்ண" எனவும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் சில தேவாரப் பாடல்களில் "கோணமாமலை" எனவும் அழைக்கப்பட்டது என்று நாம் அறிந்துள்ளோம். தற்காலத்தில் திருகோணமலை என அழைக்கப்படுவது போல், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் திருகோணமலை என்றே அழைக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள உதவியது இந்த நிலாவெளிச் சாசனமே என்ற விதத்தில் இது தனித்தன்மை கொண்டதாக விளங்குகின்றது. இலங்கையிலுள்ள ஏனைய இடப்பெயர்கள் காலத்துக்குக் காலம் திரிபடைந்து பல்வேறு வடிவங்களைப் பெற்ற போதிலும், திருகோணமலை வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த ஆட்சியாளர்களினால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆட்சி செய்யப்பட்டும், அந்தப் பெயரின் வடிவம் மாற்றமடையாமல் இருப்பது, அப்பகுதியில் தமிழ் மக்களின் இருப்பு மிக நீண்ட காலமாக இருந்துள்ளது என்பதற்கு பலமான ஆதாரமாக உள்ளது.[7]

சோழப் பேரரசின் நேரடியான ஆதிக்கத்தின் கீழ் இலங்கை இருந்தபோது, ஆட்சி நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்கும், பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் தலைநகராக பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகியவற்றை வைத்திருந்தனர். ஆனால் இவ்விரு நகரங்களிலும் சோழர்களின் எந்தக் கல்வெட்டுக்களும் காணப்படாமல் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்ட ஐந்து கிராமங்களும் திருகோணமலை மாவட்டத்திலிருந்தே வழங்கப்பட்டன. இவற்றையெல்லாம் கவனித்துப் பார்க்கும்போது, சோழர்களின் ஆட்சியின்போது இலங்கைத் தீவின் திருகோணமலையே அவர்களின் கவனத்தை மிகக் கூடுதலாக ஈர்த்துள்ளதாகத் தெரிகிறது."



நிலாவெளி ஈழத் தமிழர்களின் தொன்ம நிலம் என்பது அதன் கல்வெட்டுக்களாலும் தொல்லியல் சான்றுகளாலும் நிரூபித்து நிற்கிறது.

# காலம்தோறும் உயிர்க்கும் இராவணன் : மற்றவரை உயிர்ப்பிக்கும் இராவணன்

## இராவணனும் நானும்-1

இராவணன் எப்படி இருந்திருப்பான்?

அவன் தோற்றம் எத்தகையது? அவன் உடல் ஆகிருதி எப்படி இருந்திருக்கும். அவனுக்கு எத்தனை வயது இருந்திருக்கும்? அவன் எப்போதும் முடியணிந்தபடிதான் இருப்பானா?அவனுக்கு மீசை தாடியுண்டா? அவனுக்குப் பத்துத் தலைகள் உண்டா? உண்டாயின் இது சாத்தியமாகுமா?

இப்படியான கேள்விகள் எனக்குள் முன்னும் இருந்தன, இப்போதும் அவை உள்ளன. இக்கேள்விகள் பலருக்கும் இருந்திருக்கும். கி.மு.இருந்ததாகக் கருதப்படும் வால்மீகி முனிவர் தனது இராமாயானத்தில் தரும் தகவல்களை வைத்துக்கொண்டு நமது ஓவியர்கள், முக்கியமாக கேரள நாட்டு ஓவியரான ரவிவர்மா இராவணனின் தோற்றத்தை வரைந்துள்ளார். அதுவே முதன் முதலில் இராவணன் பற்றி வந்த ஓவியமாக இருக்க வேண்டும்



சிற்பத்திலும் இராவண உருவைக் கொணர எண்ணினர். இராவணன், கைலை மலையை எடுத்த சம்பவத்தைச் சம்பந்தர் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் “எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்”என சிவன் பெருமை பேசகையில் இராவணனின் பலம், தருக்கு பற்றிப் பேச, இராவணனின் மஹாபலம், கர்வம் எமக்குப் புலப்பட்டது. கைலாய மலை தூக்கும் சிவனைச் சிலையுருவில் வடித்தனர் தமிழ் நாட்டுச் சிற்பிகள்.

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் வால்மீகி இராமாயணத்தை தமிழ் மயமாக்கினான் கம்பன். அதில் அவன் இராவணனை அரக்கனாக அன்றி மனிதக் குணாம்சங்கள் உள்ளவனாகச் சித்தரித்தான்.

மனைவி மீது, மகன் மீது, தம்பி மீது பாசம் கொண்டவனாக தன் மானத்தை விட்டுக்கொடுக்காத வீரனாக, நால்வேதம் அறிந்தவனாக, வீணை வாசிப்பில் சிறந்தவனாக, இசையால் இறைவனையே மயக்கியவனாக சித்தரித்தார். இராவண பிம்பத்தைத் தமிழ் மக்கள் மனதில் சற்று மாற்றியவர் இந்தக் கம்பரே. இந்த இராவணனை வைத்துத்தான் நமது ஓவியர்கள் தமது கற்பனையில் தோன்றிய இராவண உருவை வரைந்தார்கள்

கி.பி.16ஆம் 17ஆம் நூற்றண்டில் தெருக்கூத்துக் கலைஞர்களின் கற்பனையில் உருவான இராவணன் வால்மீகி, கம்பன் கண்ட இராவணனே. ஆனால் அவர்கள் அவனுக்குத் தெருக்கூத்து வேடமணிந்து உள்வாங்கிக்கொண்டனர். கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் பார்சி நாடகங்களும்,அதன் தாக்கத்தால் உருவான இசை நாடகங்களும் இராவணனுக்கு வட இந்திய, தமிழ் உடைகள், ஆடை ஆபரணங்கள் அணிந்தன. பெரும்பாலும் இந்த இராவணன் கேரள ஓவியர் ரவிவர்மா தீட்டிய இராவண ஓவியத்தில் வரும் இராவணனாக உருவாகிவிட்டான். கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் இந்தியச் சினிமாப்படங்களில் முக்கியமாக ஹிந்திச் சினிமாப்படங்களில் இந்த இராவணனே வந்தான். பெரிய புருவம், பெரிய மீசை, உருட்டு விழி, பெரிய கேசம், பெரிய உருவம், நெற்றியில் உடம்பில் திருநீற்றுக்குறிகள், அட்டகாசமான சிரிப்பு என ஒரு இராவணன் உருவானான். சுருங்கச் சொன்னால் அரக்கனும் மனிதனும் இணைந்த ஓர் உருவமாக மக்கள் மனதில் அவன் பதிந்தான்

இதற்கிடையில் கேரளத்தில் கதகளி ஆட்டக்காரர் இராவணனை இன்னொருவிதமாகத் தமது கதகளி ஆட்டத்திற்குள் கொணர்ந்தனர். அவனை நாம் கதகளி இராவணன் எனலாம். கதகளி ஆட்ட உடையில், ஒப்பனையில் இராவணன் தோன்றினும் கதகளி நாடகத்தில் பத்து வித இராவணன் இருப்பதாக நான் அறிந்தேன். அவனது ஒவ்வொரு தலையும் அவனது ஒவ்வொரு குணம் என அவர்கள் கொண்டுள்ளனராம். ஒவ்வொன்றுக்கும் நாடகம் உண்டாம். ஒவ்வொரு நாடகத்திலும் ஒவ்வொரு இராவணன்

பலசாலி இராவணன், அகங்கார இராவணன், ஆசை மிகுந்த இராவணன்



இராவணன், அலங்கார இராவணன், இசைஞானி இராவணன், அறிவாளி இராவணன், பாசம் மிகுந்த இராவணன், பக்தி மிகுந்த இராவணன், ஞானி இராவணன். இராவணன் பற்றிக் கேரள மக்கள் இப்படியெல்லாம் சிந்திதிருக்கிறார்களே என்பது எனக்குப் பெரு வியப்பளித்தது.

தமிழிலே இராவணன் வரும் பல படங்கள் தயாரிக்கப்பட்டன. அவற்றில் எல்லாம் இராமனே கதாநாயகன். அவற்றுள் முக்கியமான ஒரு படம் சம்பூரண ராமாயாணம். அதில் இராவணனுக்கு பிரபல மேடை நாடக நடிகர் டி.கே பகவதி நடித்திருந்தார். அவர் பத்துத் தலையோடு வரவில்லை. மனிதனாகவே வந்தார். அந்த இராவணனை ஒரு மனிதனாக உருவாக்கியிருந்தனர். உடை ஆபரணம் யாவும் ரவிவர்மா பாணி ஓவிய முறையில் அமைத்திருந்தன.



திராவிட இயக்க இராவணன்

---

கி.பி.20 ஆம் நூற்றண்டில் திராவிட இயக்கம் இராமனை ஆரியனாகவும் இராமயாணத்தை, "திராவிட இராவணனை, ஆரிய இராமன் வென்ற கதை"யாகவும் பார்க்கத் தொடங்கியது. கம்ப இராமாயணம் திராவிடர்களை மலினப் படுத்தும் கதையாதலால் அதனை தீயிட்டு பொசுக்க வேண்டும் என்ற கருத்தும், ஏன், போராட்டமும் கூட எழுந்தது. இதனை முன்னின்று நடத்தியவர் அண்ணாதுரை. அவர்கள், இதே காலத்தில் எம் ஆர் ராதா கீமாயணம் எனும் ஓர் நாடகம் போட்டார். அதில் இராமனைக் கோழையாகவும் இராவணனைப் பெருவீரனாகவும் சித்தரித்துடன், சீதை இராவணனின் அழகிலும், வீரத்திலும் மயங்கி இராவணனுடன் இலங்கைக்கு ஓடி வந்து விட்டவளாகவும் சித்தரித்திருந்தார். புலவர் குழந்தை எனும் ஓர் கவிஞர் ஒரு காவியம் பாடியுள்ளார். அதன் பெயர் இராவண காவியம், இராமாயண காவியத்திற்கு மாற்றீடாக எழுந்த இராவண காவியம் இது. இதே ஆண்டில் திராவிட இயக்க கவிஞரான பாரதிதாசன், இராவணனை இலங்கையை ஆண்ட தமிழ் மன்னனாக்கி பாடுகிறார்.

பாடல் இதுதான்;

---

தென் திசையை பார்க்கின்றேன் என் சொல்கேன் எந்தன்

சிந்தையெல்லாம் தோழ்களெல்லாம் பூரிக்குதடடா

அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத் தமிழன்

ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோன்

குன்றெடுக்கும் பெரும்தோழான் கொடை கொடுக்கும் கையான்

குள்ள நரிக்கூட்டத்தின் கூற்றம். . . . . . . .

எந்தையர் கோன் இராவணன்

இதன்படி அவனுக்குப் பத்துத் தலையில்லை. ஆனால் பத்துத் திசைகளிலும் புகழ் பெற்றவன், இலங்கையை ஆண்டவன், மலையைத் தூக்கிய பெரு வலு பெற்ற தோழையுடைவன், கொடைகொடுக்கும் வள்ளல், எல்லாவற்றிற்கும் மேலால் அவன் ஓர் தமிழன் என்ற உருவைப் பாரதிதாசன் தருகிறார். இதனை விட இராவணன் புராதன காலக்குல குழுத் தலைவன் என்றும் ஓர் கதையுமுண்டு. இந்தியாவின் சில பழங்குடி மக்களிடையே இராவணனைக் கடவுளாக வணங்கும் வழக்கம் இன்றும் இருப்பதாக நான் வாசித்துள்ளேன். இராம லீலாவில் வடநாட்டில் இராவணன் உருவம் செய்து அவனை எரிப்பது வழமை. ஆனால் இம்மக்களோ இராவண லீலா செய்து இராமன் பொம்மையை எரிப்பார்களாம்.

என்ன பாடுபட்டுள்ளான் இந்த இராவணன்?

இந்த பின்னணியில் இன்று இலங்கை நாட்டுச் சிங்கள மக்கள் இராவணனைத் தமது முன்னோன் எனவும் கூறவும் உரிமை பாராட்டவும் தொடங்கியுள்ளனர். தீவிரமாகச் செயற்படவும் செய்கின்றனர். எத்தனை எத்தனை இராவணன்கள் எத்தனை எத்தனை வியாக்கியானங்கள்?

மட்டக்களப்பில் ஆடப்படும் ஒரு பழம்பெரும் கூத்து “இராமநாடகம்” இதனை வித்துவான்




வீ.சீ.கந்தையா 1960 களின் நடுப்பகுதியில் ஏட்டிலிருந்து பதிப்பித்தார். வடமோடிக்கூத்தில் வரும் பாத்திரங்கள் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொள்ளுவார்கள்.

இதில் வரும் இராவணன் தன்னை இவ்வாறு அறிமுகம் செய்து கொள்கிறான்; மூவுலகை ஆண்டதுரை முகுந்தனையும் வென்ற துரை முனிவர்க்கெல்லாம் நாவுலகு நான்மறை சொல் கீதம்பாடி நடித்த துரை.

நளினத்தோடும் தேவர்களும் வணங்குதுரை திக்கயத்தோ டிடித்த துரை திறையே பூண்ட பூவிலங்கை ஆண்ட துரை ராவணேஸ்வர துரையும் புறப்பட்டாரே!

இதில் நாவினால் சாமவேதம் பாடியன், தேவர்களால் வணங்கப்படுபவன், எட்டுத்திக்கு யானைகளையும் இடித்தவன், இலங்காபுரியை ஆண்டவன் என்ற பெருமைகள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இந் நாடகத்தில் இராவணன் வால்மீகி, கம்பன், அருணாசலக் கவிராயர், ஆகியோர் முறையே தமது நூல்களான வால்மீகி இராமாயணம்,கம்பராமாயணம்,இராமநாடகம் ஆகிய நூல்களில் கூறிய இராவணனாகச் சித்தரிக்கப்படுகிறான்

ஒரு கலப்பு இராவணன்

( தொடரும்)

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 28

அவர் ஒரு தளபதி!!!

------------------------------------------------------------------

"குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணினும்
நண்ணுவர்"

*(எனது இந்த கட்டுரையின் மொழிநடை மாற்றமடைகிறது அது நான் இன்றைய பதிவுக்காக எடுத்துக் கொண்டவரை கௌரவிப்பதற்காக. மன்னிக்கவும் அவரை கொச்சைத்தமிழில் குறிப்பிட முடியவில்லை)*

இந்த மொழி விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதியாகவிருந்த ஒருவரைப்பற்றியது. விடுதலைப்புலிகளின் இக்கட்டான காலங்களில் தமிழ் இளைஞர்களை மட்டக்களப்பிலிருந்து வடபகுதிக்கு நகர்த்தி பெரும் போராட்டங்களில் வெற்றியை தேடித்தந்த ஒரு தளபதி. எப்பவும் புழுதிபடிந்த உடையும் காய்ந்து போன முகமுமாக காடுகளிலேயே அலைந்த தளபதி. போரையும் போர் வியூகங்களையும் துல்லியமாக கணக்குப்பண்ணி எதிரிகளை கலங்கவைத்த தளபதி.

### தமிழ்க்கவி

யாழ்மண்ணில் அரசால் நடத்தப்பட்ட முன்னேறிப்பாச்சல் நடவடிக்கையை புலிப்பாச்சலால் முறியடிக்கவும், பதினெட்டு மாதங்களாக முன்னேறிய ஜெய சிக்குறு சமரை ஆறே நாட்களில் முறியடித்து, இராணுவத்தினரை ஓடவைக்கவும், பலதடவை முயன்று தோற்ற ஆனையிறவைக் கைப்பற்றும் நடவடிக்கையில் வெற்றிபெற்றும், ஆனையிறவை பிடிக்கவும் முக்கிய படையணியாக மட்டக்களப்பு இளைஞர் யுவதிகளை பயிற்றுவித்து வழிநடாத்தி புகழ் பெற்ற தளபதி.



வன்னிச்சமரின் கதாநாயனாக திகழ்ந்தவர். ஆயிரக்கணக்கான மக்களுக்கும் இராணுவத்துக்கும் சிம்ம(புலி) சொப்பனமாக திகழ்ந்தவர். அவரை ஒருதடவை பார்க்க வன்னிமக்கள் காத்திருந்தனர். அவர் ஒரு போதும் அறிக்கைகளை விட்டதில்லை. ஆர்ப்பாட்டமாக அலைந்ததில்லை. முக்கிய சந்திப்புகளில் தலைவரின் அருகே உப்புக்கு சப்பாணியாக உட்கார்ந்திருப்பார். எப்போதும் அவர் முகத்தில் தவழும் புன்னகை அவரை விட்டு விலகி நான் பார்த்ததில்லை.

பத்து இருபது மெய்ப்பாதுகாவலர்கள் அவரைச்சுற்றி இருப்பதும் இல்லை. ஆனால் நூற்றுக்கணக்கான போராளிகள் அவரைச் சுற்றியிருப்பார்கள். அடிப்படைப் போராளிகளா பணபட்ட போராளிகளா? அனைவரும் சமம் அவருக்கு. அவர்களுக்கு நடுவே சம்மணமிட்டு அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் அவரை நான் பலமுறை யாரோ என நினைத்திருக்கிறேன்.

மட்டக்களப்பு போராளிகளுக்கான விளையாட்டுவிழா ஆரம்பமாகவுள்ளது. நானும் போயிருக்கிறேன் முள்ளியவளையின் புறக்காடு அடர் வனத்தின் நடுவே அமைந்த விளையாட்டுத்திடல் நான் பெண்கள்பகுதியில் நின்றேன். முக்கிய விருந்தினர்களும் வந்து விட்டனர். அவரெங்கே? என்ற படி தேடினேன், விளையாட்டு வீரர்கள் மத்தியில் சம்மணமிட்டு அமர்ந்து அவர்களை ஊக்கிவித்துக் கொண்டு அங்கேயே நின்ற தளபதி அவர். மற்றவர்கள் பந்தாவாக ஆசனங்களில் அமர்ந்திருக்க இவர் விளையாட்டுத்திடலிலேயே தன் பிள்ளைகளையும் பெடியன்களையும், " டேய் விட்டுடக்கூடாது" சாப்பிட்டியா தண்ணிய கனக்கா குடிக்காத" என ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு போராளிகள் நடாத்திய எந்த நிகழ்விலும் தலைவர் கலந்து கொண்டதை நான் காணவில்லை. கவனிக்கவும் நான் காணவில்லை என்றுதான் சொல்கிறேன். தனிப்பட சில குழுக்களை அழைத்துப் பேசியதாக கேள்விப்பட்டிருக்கிறேன்.

எளிமையான மனிதர் மட்டக்களப்பு போராளிகளின் பெற்றோரை நீண்ட காலம் பிள்ளைகளை காணதவர்களை வன்னிக்கு அழைத்து வந்து பெற்றோர் காப்பகத்தில் தங்கவைத்து, அவர்களுக்கான போக்குவரவுச் செலவு உணவு எல்லாவற்றையும் பொறுப்பேற்று களமுனைகளில் நிற்கும் போராளிகளுக்கு தகவலனுப்பி, அவர்களை எடுப்பித்து, பெற்றோருக்கு காட்டுவதற்காக தனி முகாம் ஒன்றை அமைத்தார். அந்த முகாமிற்கு இரண்டு கால்களையும் இழந்த போராளி ஒருவனே பொறுப்பாக இருந்து திறம்பட நடாத்தினான்.

படிப்பறிவில்லாத போராளிகளுக்கு பாடசாலை அமைத்து வகுப்புகளை நடாத்தி அவர்களுக்கு எழுத வாசிக்க கற்றுக்கொடுத்தார். விளையாட்டைப்போலவே கலைகளிலும் திறமையுள்ளோர்களை அவர்களுக்குரிய திறமைகளை வெளியே காட்ட சந்தர்ப்பங்களை வழங்கினார். மட்டக்களப்பில் வாழ முடியாத பல போராளிக்குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டங்கள் அமைத்து குடியிருக்க வழிசெய்தார்.

மட்டக்களப்பு மக்களினதும் போராளிகளினதும் மனதில் மட்டுமன்றி வன்னி மக்களின் மனங்களையும் வென்றார். இவர் மிக அருமையான பேச்சாளராகவும் இருந்தார். சமர்கள் பொறிபறக்கும் வேளைகளில் மக்களுக்கு நம்பிக்கையூட்ட இவரை மேடைகளில் பேச வைத்திருக்கிறார்கள். களத்தின் நிலவரங்களை அவர் வாயால் சொல்லவைத்து போருக்கு புதிய போராளிகளை திரட்ட முடிந்திருக்கிறது. மொத்தத்தில் அவர் வந்தால்...பகை மாளும். என்பது விதியாக இருந்தது. தொடர்ந்தும் பார்ப்போம்.

---





# ஒரு ஆசிரியரின் நினைவில் நிழலாடும் மலையகம்

மட்டக்களப்பு கல்விக்கந்தோருக்கு பின்னால் உள்ள சிறிய தெரு, அதன் பெயர் முக்கியமல்ல. அதில் ஒரு அழகாக வடிவமைக்கப்பட்ட வீடு பொதுவாக அனைவரையும் கவரும். அந்த வீட்டில், பெரும்பாலான நேரங்களில் ஒரு வயதான உருவம் தெருவை வெறித்தபடி அமர்ந்திருக்கும், ஆனால், அவர், எவரையும் பெரிதாக கவர்திருக்க வாய்ப்பில்லை. அவர், திரு. சின்னத்தம்பி ஜோண் தங்கராஜா. இன்றய தலைமுறை பலருக்கு அவரை தெரிய வாய்ப்பில்லை. சிலருக்கு அவர் ஒரு மானசீகக் குரு.

மட்டக்களப்புக்கு கல்விதந்த ஒரு திருச்சபை மெதடிஸ்த திருச்சபை. அதன், வேர்கள் இன்னமும் ஆழமாக பதிந்திருக்கும் சூழல்தான், மட்டக்களப்பு முற்றவெளி மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசம். அந்தச் சுற்றாடலில் வாழும் இவரும், அந்த திருச்சபையால், உருவாக்கப்பட்டவர். அதற்காக, அதன் கல்வி நிறுவனங்களுக்காக உழைத்தவர்.

அவரை சென்று சந்தித்தபோது, ஒரு சாதாரண உடையில், மிகவும் சாதாரணமாகவே எங்களிடம் பேசத்தொடங்கினார். எம்மை அழைத்துச் சென்றவர், அவரது ஒரு மாணவரான த. யுவராஜன்.

மாணவருடனான பரிச்சயம் காரணமாக யதார்த்தமாக எல்லாம் பேசத்தொடங்கினார், ஆனாலும், முதுமை ஞாபகங்களுக்கு கொஞ்சம் தடைபோட்டது.

தனது இளமைக்கால அனுபவங்கள், குறிப்பாக பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் எல்லாம் மிகவும் அருமை என பகிர்ந்துகொண்டார்.

மட்டக்களப்பில் பெரும்பாலான நாட்களை கழித்த அவரது ஆசிரிய பணி ஆரம்பித்தது மலையகத்தில்.

ஹல்துமுள்ள என்ற இடத்தில் தனது முதலாவது பணியை ஒரு இனிமையான நினைவாக பகிர்ந்துகொண்டார்.

மலையக மாணவர்கள் மிகவும் இனிமையானவர்கள், ஆசிரியர்களை மிகவும் மதித்தவர்கள் என்பது அவரது கருத்து.

தாம் பணியை ஆரம்பித்த காலத்தில் அந்தப் பள்ளிக்கூடம் பிற்பகல் பள்ளிக்கூடமாக இருந்தமை, மாணவர்கள் பள்ளிமுடிந்து மலைகளில் ஏறிச்செல்லும் காட்சி போன்றவை இன்னமும் தனது மனதில் அப்படியே படிந்திருப்பதாக கூறுகிறார். மலையகம் பற்றியும், அங்கு தான் ஆசிரியராக கழித்த காலம் பற்றியும் பேசும் போது, அவரது முகமும் கண்களும் ஒளிர்ந்தன.

இருக்கும் வசதியை கொண்டு தம்மால் முடிந்தவரை அவர்களுக்கு தான் கற்றுக்கொடுத்ததாக அவர் கூறினார். தனது மாணவர்கள் இன்றும்கூட அங்கிருந்து தன்னை வந்து, பார்த்துச் செல்வதாகவும் மகிழ்வுடன் நினைவுகூர்கிறார்.

மலையக மாணவர்களைப் பொறுத்தவரை அப்போது, அவர்கள் ஆங்கிலம் கற்பதில் நிறைய ஆர்வம் காட்டியதாக குறிப்பிட்டார். அதேவேளை, அவர்கள் காட்டிய கீழ்படிவை, தன்னால் இன்றும் மறக்க முடியவில்லை என்கிறார்.

ஒவ்வொரு நாளும் அவர்கள் வந்து காலில் விழுந்து வணங்கிச் செல்வது அவருக்கு மட்டக்களப்பு சூழலில் கிடைக்காத ஒன்று. அவரை அது மிகவும் நெகிழச் செய்திருக்கிறது.

### எஸ்.பரமேஸ்வரி

வடக்கு கிழக்கு ஆசிரியர்கள் சிலர், மலையக மாணவர்களுக்கு ஒழுங்காக கல்வி கற்பிக்காது, வீட்டு வேலை வாங்குவது போன்ற துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கியதாக வரும் செய்திகள் குறித்து கேட்டதற்கு "சிலர் அப்படியிருந்திருக்கலாம். நாங்கள் அப்படியல்ல" என்றார்.

அப்படி அவர் சொன்னபோது, அவரது முகத்தில் சில கோடுகள் தோன்றி மறைந்தன. ஆண் ஆசிரியர்கள் 5 பேர் ஒரு வீடு எடுத்து தங்கியிருந்ததாக நினைவூட்டுகிறார்.

இன்றுவரை தன்னால், அந்த மலையகச் சூழலை மறக்க முடியவில்லை என்கிறார். அவருக்கு வயது 90 ஐ அண்மிக்கிறது. முன்னர் சொன்னது போல அவர் கூறியவையும், ஞாபகத்தடைகளை கடந்து வந்தவைதான். நெஞ்சின் ஆழத்தில் அழியாமல் இருக்கும் சில கோடுகளை மாத்திரம் சித்திரமாக வெளிப்படுத்த திரும்பத்திரும்ப முயன்றுகொண்டிருக்கிறார். அவரது முன்னாள் மாணவர்கள் யாராவது இதனைப் பார்த்தால், அந்தகோடுகளிடையே வர்ணம் தீட்ட முயற்சிக்கலாம்.

# கண்ணகி கலை இலக்கிய விழா – 2018



எட்டாவது கண்ணகி கலை இலக்கிய விழாவான "கண்ணகி இலக்கிய விழா-2018" மட்டக்களப்பு களுதாவளை கிராமத்தில் ஆரம்பமாகி எதிர்வரும் 09.09.2018 ஞாயிறு நிறைவடையவுள்ளது. நேற்று பி.ப 2.00 மணிக்கு ஆலய முன்றலில் "கொம்புமுறி விழா" நடைபெற்றது.

தொடர்ந்து இன்றும் நாளையும் காலை அமர்வு, மாலை அமர்வு என இரு அமர்வுகள் நடைபெறவுள்ளந. இந்த நிகழ்வுகளில் பண்பாட்டு பவனி, "கூடல்"(பரல்-7) விழா மலர் 2018 வெளியீடு, "வசந்தன் கவித்திரட்டு" மீள் பதிப்பு நூல் வெளியீடு, ஓவியக்கண்காட்சி, நூலங்காடி, கடந்த வருடம் கிரானில் நடைபெற்ற ஏழாவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் விவரண ஒளிப்படக் காட்சி, தமிழ்நாட்டுப் பேராசிரியர் தி.சு.நடராசன் அவர்களின் "கண்ணகி எனும் தொன்மம்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு, மட்டக்களப்பு கதிரவன் பட்டிமன்றக்குழு வழங்கும் "சிலப்பதிகாரம் கூறும் அறவழியில் வாழுகிறோம்! ∴ வாழவில்லை! எனும் பட்டிமன்றம், கவிஞர் அண்ணாதாசன் தலைமையில் "கண்ணகி வாழ்வியலில்......" எனும் கவியரங்கு, பேராசிரியர் சி.மௌனகுருவின் தலைமையிலான "கிழக்கிலங்கைப் பண்பாட்டில் பெண் தெய்வங்கள் எனும் பொருளில் ஆய்வரங்கு, "மரபைத் தொடர்தல் - கண்ணகியை முன்வைத்து" எனும் பல்லூடக நிகழ்த்துகை, பாடசாலை மாணவர்களிடையேயான "விவாத அரங்கு" என்பவை நடைபெறும்.

09.09.2018 ஞாயிறு மாலை 3.30 க்கு ஆரம்பமாகி இரவு 8.30 க்கு நிறைவடையுள்ள மாதவி அரங்கில் நடைபெறும் "கலை அரங்கும் நிறைவு விழாவும்" அமர்வில் கரகாட்டம், கண்ணகி வசந்தன், நடனம்(மாதவி சப்தம், மீன்மகள் பாடுகிறாள்), குளிர்த்திப் பாடல், கண்ணகி நடனம், வில்லுப்பாட்டு, "தமிழிசை யாத்திரை" ஆகிய கலை நிகழ்வுகளுடன், சட்டத்தரணி பாடும் மீன் சு.ஸ்ரீகந்தராசா(அவுஸ்திரேலியா) அவர்களின் " நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" ஒலிச்சித்திரப்பேழை(மீள்பதிப்பு) வெளியீடும் இடம்பெறவுள்ளன.

வஞ்சகமில்லாத வாழ்க்கை முறையும் - விருந்திருக்க உண்ணாத வேளான்மைத்தனத்தையும் - வந்தாரை வாஞ்சையோடு வரவேற்று வாழவைப்பதில் வற்றாத மனப்போக்கையும் - சாதிமத பேதமற்ற சமரச நோக்கையும் - சகோதரத்துவ உளப்பாங்கையும் உடைய கிழக்கிலங்கைத் தமிழ் சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் கண்ணகி கலாசாரத்தைப் பேணி வளர்த்தெடுக்கும் வகையிலும், அப்பண்பாட்டின் அடிப்படையில் எழுந்த கண்ணகி கலை இலக்கியங்களை மக்கள் மயப்படுத்திப் பரவலாக்கும் வகையிலும், கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தை ஒரு பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து அதன் மூலம் அவர்களது சமூக, பொருளாதார, பண்பாடு, கல்வி, கலை இலக்கிய சூழல் பாதுகாப்பு மற்றும் ஆன்மீக மேம்பாட்டை நோக்கி அவர்களை ஆற்றுப்படுத்தும் வகையிலுமே 2011 முதல், வருடந்தோறும் நடைபெற்றுவரும் கண்ணகி கலை இலக்கிய விழாக்கள் ஒரு சமூக அசைவியக்கமாகக் கட்டமைக்கப்பெற்று வருகின்றன.

2011இல் மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் நடைபெற்ற கன்னி விழாவான "கண்ணகி இலக்கிய விழா-2011" இல் வெளியிடப்பெற்ற பட்டயத்திற்கு அமைவாக இரண்டாவது விழா 2012 இல் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பிலும், மூன்றாவது விழா 2013இல் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றிலும், நான்காவது விழா 2014இல் தம்பிலுவிலும், ஐந்தாவது விழா 2015இல் மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமுலையிலும், ஆறாவது விழா 2016இல் கன்னன்குடாவிலும், ஏழாவது விழா கடந்த வருடம் (2017) கிரானிலும் நடைபெற்று, அதன் தொடர்ச்சியாகவே எட்டாவது விழா இவ்வருடம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 7,8,9 ஆம் திகதிகளில் களுதாவளையில் நடைபெறவுள்ளது.



**கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்**

---

தமிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும், மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழ நாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.

பின்னாளில் கண்ணகி "கண்ணகையம்மன்" என கிழக்கிலங்கையில் நிலைபெற்று விடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித்திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.


மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப் பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக்கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

கண்ணகிக்குரித்தான வைகாசி மாதத்தில் அவளை நினைவுகூரவும், அவளது இலக்கியங்களைப் பரவலாக்கவுமான நோக்குடன் கண்ணகி இலக்கிய விழா 2011.06.18 அன்று எம்மால் தொடக்கிவைக்கப்படுகின்றது. இவ்விழா எதிர்காலத்தில் வருடம் தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இப்பட்டயம் கண்ணகி இலக்கிய விழாக் குழுவினரால் 2011.06.18ஆம் திகதி நடைபெற்ற "கண்ணகி இலக்கிய விழா-2011" இன் தொடக்க விழாவில் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திருமதி கோமேதகவல்லி செல்லத்துரை அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு சுந்தரம் அருமைநாயகம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

## குறுக்கெழுத்துப்போட்டி இல:–12

அரங்கம் இரா. தவராஜா.




**இடமிருந்து வலம்:**

01. நெருப்பு....
03. நிலை பேறு என்றும் அழைப்பார்கள்
05. மாடத்தில் வசிக்கும் சமாதானப் பறவை. பறவை பறந்து விட்டது.
06. இளையோன்.
07. விளாமரம்.
09. இடம் குளம்பிக் கிடக்கிறது.
11. மெலிவு. திரும்பிக் கிடக்கிறது.
13. திகில்.
15. சூரியன் மறையும் திசை.

**மேலிருந்து கீழ்:**

01. புகலிடம்.
02. ஏறக்குறைய.
03. தைரியம்.
04. மருந்துச் சரக்குகளில் ஒன்று.
05. வருடத்தில் இது பனிரெண்டு.
08. நுளம்பின் அளமைப் பருவம். தலைகீழாய் கிடக்கிறது.
10. தோழி.
12. முறைப்பாட்டுக் காரன்.
14. திருமதி அணியும் வேலி. தலைகீழாய் கிடக்கிறது.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 27.09.2018க்கு முன்னர்

அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.





# கட்டிளமைப் பருவ உளநலம்

## கட்டிளமைப்பருவ உணவுப் பழக்கம்

வீட்டில் சமைக்கப்படும் மூவேளை உணவுக்குப் பதிலாக "விரைவுச் சாப்பாடு" (fast food) இற்கே கட்டிளமைப் பருவத்தினர் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பேக்கரி உணவுகள், சீனி தயாரிப்பு உணவுகள், பொரித்த உணவுகள், உணவு விடுதி உணவுகள், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுகள் அடங்கலாக வீட்டில் அம்மா சமைக்கும் உணவுகளிற்கான முக்கியத்துவம் மிகவும் குறைந்து வருகின்றது.

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்க வழக்கங்கள்:

------------------------------------------------------------

அதிகளவு சீனி, உப்பு, கொழுப்பு சேர்க்கப்பட்ட உணவுகளையும் பதனிடப்பட்ட மற்றும் தரமற்ற உணவு வகைகளையும், செயற்கையான இரசாயனப் பதார்த்தங்கள் இடப்பட்ட உணவுகளையும், பொருத்தமற்ற வகையில் உட்கொள்ளுதல் ஆகும். சமனிலை அற்ற உணவுகளை உட்கொள்ளுவதும் இதற்குள் அடங்கும். தினமும் ஒருவர் 5 கிராமுக்கு (1 தேக்கரண்டி) மேற்படாத வகையில் உப்பினை தனது உணவில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இவ்வுப்பானது அயடீன் ஏற்றப்பட்ட உப்பாக இருத்தல் வேண்டும். சோஸ், சொசேஜஸ், சிப்ஸ், சிலவகை பிஸ்கட்கள் என்பவை அதிகளவு உப்பைக் கொண்ட உணவுகளாகும். இவற்றை மட்டுப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். நீங்கள் தினமும் ஆகக்கூடிய அளவு 6 தேக்கரண்டி (மறைமுகமாக உள்ளடக்கப்பட்ட சீனி

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமர்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

உட்பட) சீனியை உட்கொள்ளலாம். நாம் பொதுவாக உட்கொள்ளும் இனிப்பு வகைகள், சிறு உணவுகள் மற்றும் குடிபானங்கள் பெருமளவு சீனியை தன்னகத்தே கொண்டுள்ளன. பேக்கறி மற்றும் நீண்ட நேரம் பொரிக்கப்பட்ட உணவு வகைகள் (றோல்ஸ், பற்றீஸ், பேஸ்ரிகள், பணிஸ்), பிஸ்கட் வகைகள், கேக், உருளைக்கிழங்குப் பொரியல், மாஜரின் போன்றவை ஆரோக்கியமற்ற "ரான்ஸ்" கொழுப்பை அதிகளவில் கொண்டுள்ளன. இவை ஆரோக்கியமற்ற உணவுகளாகும்.

பதனிடப்பட்ட உணவுகள். (Processed food) நீண்ட கால சேமிப்புக்காக தொழில்நுட்ப ரீதியாக உணவுகள் பதனிடப்படுகின்றன. அவை அதிகளவு கொழுப்பு, உப்பு, சீனி மற்றும் செயற்கையான இரசாயனப் பதார்த்தங்களையும் கொண்டுள்ளதோடு மட்டுமல்லாது நார்ச் சத்துக்களையும் விற்றமின், கனியுப்புக்கள் உட்பட நுண்ணூட்டச் சத்துக்களையும் மிகவும் குறைந்தளவிலேயே கொண்டுள்ளன. எனவே நாம் பதனிடப்பட்ட உணவுப் பொருட்களின் பாவனையை நன்றாகக் குறைக்க வேண்டும். உதாரணம்:- உடனடியாகத் தயாரிக்கக் கூடிய நூடில்ஸ், பதனிடப்பட்ட இறைச்சி (சொசேஜஸ், மீற் போல்ஸ்)

தரமற்ற உணவு வகைகள் (Junk food)

------------------------------------------------------------

இவை மட்டுப்படுத்தப்பட்ட போஷாக்கு பெறுமானத்தையுடையவை. அதிகளவு சீனி, கொழுப்பு, உப்பு மற்றும் கலோரி அளவைக் கொண்டவை. அவை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் செயற்கையான இரசாயணப் பதார்த்தங்களையும் கொண்டிருக்கும். இவ்வுணவுகளை உண்ணும் போது உடனடி பாதிப்புகள் ஏற்படாவிடினும் நீண்ட கால அடிப்படையில் சுகாதாரக் கேடுகளை விளைவிக்கக் கூடியவை. எனவே நாம் இவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணம் - காபனேற்றப்பட்ட குடிபானங்கள், இனிப்பான சிற்றுண்டிகள், இனிப்புகள், ரொபி வகைகள், சொக்கலேட்ஸ், உருளைக்கிழங்கு பொரியல், பெப்பமின்ட் போன்றவை.

உணவு உற்பத்தியில் விவசாய இரசாயனங்களின் பயன்பாடு

------------------------------------------------------------

உணவு உற்பத்தியில் விவசாய இரசாயனங்களின் அதீத பயன்பாடு நீர் உட்பட சூழலை மாசடையச் செய்கின்றது. இவ் உணவுகள் நச்சுத் தன்மையுடைய இரசாயனங்களை கொண்டிருப்பதோடு புற்றுநோய், சிறநீரக நோய், நரம்பு சம்பந்தமான நோய்களையும் ஏற்படுத்தும். உணவு வகைகளை வாங்கும் போது இரசாயனப் பொருள் பயன்பாடு பற்றி விசாரித்து அத்தகைய உணவுகளை இயன்றளவு தவிர்த்து விடுங்கள்.

| | | |
|---|---|---|
| குறைந்தளவு | - | பச்சை |
| நடுத்தர அளவு | - | செம்மஞ்சல் |
| அதிகளவு | - | சிவப்பு |

சீனியைக் கொண்டது சீனியைக் கொண்டது சீனியைக் கொண்டது மென் பானங்கள் அவற்றில் அடங்கியுள்ள சீனியின் அளவைக் கொண்டு வர்ணம் குறியிடப்படுகின்றன எனினும் சீனியின் அளவு எவ்வாறு இருப்பினும் செயற்கையான மென் பானங்கள் ஆரோக்கியத்துக்கு உகந்தவை அல்ல. நாம் அவற்றின் பாவனையை குறைத்துக் கொள்ளல் வேண்டும்.

ஆரோக்கிய உணவிற்கான சில குறிப்புக்கள்

------------------------------------------------------------

நாம் தினமும் மூன்று வேளை உணவு உட்கொள்கின்றோம். (காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு). நாம் உணவு வேளைகளை தவிர்ப்பதில்லை. நாம் பிரதான உணவு வேளைகளிற்கு இடையில் 2-3 ஆரோக்கியமான சிற்றுண்டிகளை உண்கின்றோம். (இவை பழங்கள், மரக்கறி, தானியங்கள், பால், யோகட், இலைக்கஞ்சி, போன்றனவாகும்). நாம் எல்லா உணவுத் தொகுதிகளிலிருந்தும் பல்வேறு வகையான போஷாக்கான உணவுகளை மகிழ்வாக உண்கின்றோம். நாம் செயற்கை நறுமணமூட்டிகளை தவிர்த்து இயற்கையான நறுமணமூட்டிகளை எமது உணவுகளுக்கு தெரிவு செய்வோம். நாம் தீங்கு விளைவிக்கக்



கூடிய இரசாயணப் பதார்த்தங்களைக் கொண்ட, விவசாய இரசாயணங்கள் கொண்ட உணவுகளை உண்பதைத் தவிர்ப்போம். தினமும் 3 வகை மரக்கறிகளையும், 2 பழ வகைகளையும் (3102) உண்ணுவோம். இயற்கையான உணவுகளையே உண்ணுவோம், பதனிடப்பட்ட மற்றும் தரமற்ற உணவுகளைத் தவிர்ப்போம். ஓரளவு கொழுப்பினை எமது உணவில் சேர்த்துக் கொள்ளுவோம். அதிகளவு உப்பினை உள்ளடக்கிய உணவுகளைத் தவிர்ப்போம். குறைந்தளவு சீனியை, இனிப்புகளை, மென்பானங்களை உபயோகிப்போம். விரைவாக உணவு உண்பதை தவிர்ப்போம். உணவுக்காக 10 - 15 நிமிடங்களை ஒதுக்கி உணவை நன்றாக மென்று உண்போம். தொலைக்காட்சி பார்த்தவாறு அல்லது கணணி உபயோகித்தவாறு உணவு உண்ணுவதைத் தவிர்ப்போம். சுறுசுறுப்பாக இருப்பதுடன் ஆரோக்கியமான உடல் நிறையைப் பேணுவோம்.

---

# மட்டக்களப்பு மாநகரில் 11 வருடங்கள் (1942 - 1953) - 03



மட்டக்களப்பானது புளியந்தீவு, கோட்டமுனை என்ற பிரிவுகளைக் கொண்ட ஒரு பெருநகராகும். நகரின் முக்கிய அலுவலகங்கள், வாசஸ்தலங்கள், கடைகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், முற்றவெளி, வைத்தியசாலை போன்றவை புளியந்தீவு பகுதியை ஆக்கிரமித்திருந்தன.

பின்னர், பொலிஸ் நிலையம் போன்ற பல முக்கிய இடங்களும், வீதிகளும், அரசாங்கக் கல்லூரி, பெரிய கடைகள், கல்லடிப்பாலம், கோட்ட முனைப்பாலம், சிவானந்த வித்தியாலயம் போன்ற முக்கிய நிறுவனங்களுடன் கோட்டமுனைப்பகுதியும் வளரத் தொடங்கியது.

சென்.மேரிஸ் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் பயின்ற அய்யாக்குட்டி ஜீவானந்தம் (இவரது சகோதரி தான் கமலா என்ற கல்விமான்), டன்ஸ்டன் பல்தசார், நான் ஆகிய மூவரும், 1947இல் சென் மைக்கல் கல்லூரியில் சேர்ந்தோம். அங்கும், மீண்டும் 5ஆம் வகுப்பில் தான் என்னைச் சேர்த்தார்கள். தமிழில் மாத்திரம் 5ஆம் வகுப்பில் படித்த நான், ஆங்கில வகுப்புக்களில் படிப்பது கஸ்டமாக இருக்கும் என்று தப்பாகக் கருதி, மீண்டும் 5ஆம் ஆங்கில வகுப்பில் சேர்ந்தனர். அவர்களுக்கு நான் ஆங்கிலத்தை துறைபோக என் தந்தையாரிடமிருந்து கற்றுக்கொண்டேன் என்பது தெரிந்திருக்கவில்லை.

நியூமெதட் ரீடர்ஸ் - ஒன்று முதல் ஆறு வரையுமான பாடநூலையும், ரேடியன்ட் வே என்ற நூலையும் எனக்கு என் தந்தையார் போதித்து வந்தனால், எழுத்துக் கூட்டல், உச்சரிப்பு, வாசிக்கும் முறை என்பவற்றை சரியாக நான் கற்றுத் தேறியிருந்தேன்.

னுஜபு ஐ.வு கனகரத்தினமும் நானும், 5ஆம் வகுப்பில் முதல் மாணவர்களாக இருந்தோம். மற்றைய மாணவர்களை விட நான் ஆங்கில பாடத்தில் விண்ணனாகக் கருதப்பட்டேன். ஐ.வு யின் தந்தையார் கனகரத்தினம் மாஸ்டர், எங்கள் வகுப்பு ஆசிரியராகவிருந்தார்.

சுயலறழுன என்ற அமெரிக்க கத்தோலிக்க பிதா எங்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார். மற்றைய பாடங்களை வகுப்பு ஆசிரியரே கற்பித்தார்.

இக்னேஷஸ் தவயோகம் கனகரத்தினம் என்ற ஐ.வு கனகரத்தினமும், நானும் ஆறாம் வகுப்பில் படிக்காமல், ஏழாம் வகுப்பு உயர்த்தப்பட்டோம். அங்கு அன்ரனி பிரான்சிஸ் என்ற செல்வராஜா எனக்கு நண்பரானார். அவர் திராவிடக் கழகத்தின் ஆதரவாளராயிருந்தார். அவர் பிறகு கொழும்பில் வர்த்தகராகச் சோபித்து மறைந்தார். அண்ணாதுரை, கருணாநிதி, சிற்பரசன், நெடுஞ்செழியன் போன்றோரின் நூல்களை எனக்கு அறிமுகப்படுத்தினார். அதனால், தமிழையும், தமிழிலக்கியத்தையும் சிறப்புறக் கற்க நான் ஆவல் கொண்டேன்.

ஐந்தாம் வகுப்பில், ஆழுசு- யுடு ஞஊஐநுஊேநு என்ற பாடத்தை குச.தியோப்லஸ் படிப்பித்தார். கத்தோலிக்க சமயத்தில், பத்துக்கட்டளைகளை விளக்கிக் கூறுவர். அதில் 6வது கட்டளையான வுாழர ளூயடட ழேவ ஊழஅஅவை யுனரடவநசல என்பதை விளக்கிக் கூறும்போது, நான் உட்பட சகல மாணவர்களும் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருப்போம். ளுநஒ என்றால் என்ன என்று விஞ்ஞானரீதியாக அவர் மூலம் அக்கால 12 வயது மாணவர்களுக்கு புதிய தகவல்கள் கிடைத்தன.

ஏழாம் வகுப்பிலிருந்து துளுஊ வகுப்புக்கு வகுப்பேற்றம் செய்யப்பட்ட

கே.எஸ். சிவகுமரன்

பின்னர் எனக்கு படிப்பில் கவனம் செலுத்த முடியாமற்போனது. அதற்கு காரணங்கள் பல. முதலாவதாக விஞ்ஞானப் பாடங்களும், கணிதமும் எனக்கு கசப்பாய் இருந்தன. பௌதிகவியலை ஜோர்ஜ், இரசாயனத்தை தோமஸ், தாவரவியலை கமலா லூட்சும் பயிற்றுவித்தனர். கணிதத்தைப் பறிற்றுவித்தவர் பாலநாதன் என்ற மாஸ்டர். இவர் பாலு மகேந்திராவின் தந்தையாவார்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

தொடர்ச்சி...

## மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 290 பயிலுனர் பட்டதாரிகள் நியமனம்!

நியமிக்கப்பட்டனர். குறிப்பாக ஆசிரியர் தட்டுப்பாடு நிலவும் கல்குடா மட்டு. மேற்கு பட்டிருப்பு போன்ற பின்தங்கிய பிரதேசங்களுக்கு 75 பேரளவில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் கடந்த 4ஆம் திகதி முதல் அனுப்பப்பட்டிருந்தனர். அவர்களில் சிலரை பாடசாலைகளுக்கும் சிலரை அலுவலகத்திலும் நியமிக்கும் பொறுப்பை வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு பொறுப்பாக்கப்பட்டிருந்தது.

இதேவேளை ஒரு வலயம் குறிப்பிட்ட சில பட்டதாரி பயிலுனர்களை வேண்டுமென்றே பந்தாடியுள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கணனி அறிவு, அலுவலக அறிவுள்ளவர்கள் சிலர் 10 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரமுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக புகார்கள் எழுந்துள்ளன. இவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு 20ஆயிரம் ரூபா மாத்திரமே.

அநேகமான பயிலுனர்களை அவர்களது ஊரிலும் ஊருக்குஅருகாமையிலும் நியமித்துவிட்டு ஒரு சில பெண்பட்டதாரிகளை தூரத்திற்கு அனுப்பியுள்ளமை தொடர்பில் அவர்கள் கேள்வியெழுப்பியபோது, நாம் அப்படித்தான் செய்வோம் நீங்கள் தேவையென்றால் அரச அதிபரிடமோ யாரிடமோ சொல்லலாம் என எடுத்தெறிந்து பதிலளிக்கப்பட்டதாகவும் முறையிடப்பட்டுள்ளது.
(காரைதீவு நிருபர் சகா)

தொடர்ச்சி...

## நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 17

பங்குபற்றினர்.

மேதகு ஜனாதிபதியும் மாண்புமிகு அமைச்சர்களும் அதிகாரிகளும் தேயிலைக்குள் நுழைந்த அந்த வண்டுக்கும் இறக்குமதியாகும் அஸ்பெஸ்டசுக்கும் ஊடகங்கள் போட்ட இறுக்கமான முடிச்சை அவிழ்த்தனர்.

வெளிநாடுகள் பலவற்றில் பொலித்தீன் பைகளுக்கும் அஸ்பெஸ்டஸ் கூரைகளுக்கும் படிப்படியாக தடை வந்துவிட்டது. பொலித்தீன் மண்ணில் உக்கிப்போவதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாகலாம்.!

அஸ்பெஸ்டஸ் துகள்கள் மனித உடல்களுக்கு புற்றுநோயை விரைந்து தந்துவிடலாம்! இவை விஞ்ஞானபூர்வமாக கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள்.

வெளிநாட்டில் புகலிடம் பெற்ற ஒரு தமிழர் இலங்கை சென்று, அங்கிருப்பவர்கள் தங்கள் வீடுகளின் கூரைகளுக்கு அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடு பாவிப்பது தொடர்பாக எச்சரித்து, அதன் பக்கவிளைவுகளை எடுத்துச்சொன்னபோது, அதனை நகைப்புக்கிடமான வாதமாக குறிப்பிட்டு வடபுலத்தில் ஒரு எழுத்தாளர் சிறுகதையொன்றும் எழுதியிருந்தார்.

இலங்கையில் யானை மார்க் அஸ்பெஸ்டஸ் பற்றிய விளக்கங்கள் மேலும் தொடரலாம்.

(தொடரும்)

## மெக்ஸிகோவில் 166 மண்டை ஓடுகள் மீட்பு



மெக்சிகோவின் வெராகிரஸ் மாகாணத்தில் ஒரே இடத்தில் குறைந்தது 166 பேரின் மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த இடம் எது என்று தெரிவிக்கப்படவில்லை.
போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தங்களால் கொல்லப்பட்டவர்களை புதைப்பதற்கான இடமாக வெராகிரஸ் மாகாணத்தை பயன்படுத்துவது வழக்கம்.

மார்ச் 2017இல் அங்கு ஓரிடத்தில் சுமார் 250 பேரின் மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 17

உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபைக்கு வெளியே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள (காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ∴ வாழைச்சேனை)24வீத முஸ்லிம்களுக்கும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள (கிண்ணியா, மூதூர், தோப்பூர், தம்பலகாமம், குச்சவெளி)29வீத முஸ்லிம்களுக்கும், மன்னார் மாவட்டத்திலுள்ள (எருக்கலம்பிட்டி,முசலி)27வீத முஸ்லிம்களுக்கும் தனியான முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படுதல் வேண்டுமெனத் தனது யோசனைகளில் தெரிவித்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை மாகாணத்தில் உள்ள 27வீத அம்பாறை மாவட்டத்தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளாகவிருந்த கல்முனைத் தமிழ்ப் பிரிவு (கரவாகு வடக்கு), சம்மாந்துறைத் தமிழ்ப் பிரிவு (மல்வத்தை-நாவிதன்வெளி), பொத்துவில் தமிழ்ப் பிரிவு (கோமாரி) ஆகிய பிரதேசங்கள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையிட்டு ஒரு வரிதானும் குறிப்பிடவில்லை. இது எதனைக் காட்டுகிறது என்றால் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு எதிரான அதன் உள்ளார்ந்த குணாம்சத்தையே ஆகும். இதனைப் புரிந்துகொள்ளும் அரசியல் நுண்ணுர்வு இல்லாத தமிழர் தம் அரசியல்
தலைமை உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை அதாவது தென்கிழக்கு அலகு யோசனைக்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்க முன்வந்தமை "அரசியல் மதியீனம்" ஆகும்.

உத்தேச தென்கிழக்கு அலகுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவளிப்பதாக ஊடகங்களில் அறிக்கைகள் வெளியாகிலதும் அதிர்ச்சியடைந்த இப்பத்தி எழுத்தாளர் அப்போது கொழும்பு-05 ஹவலக் வீதியில் அமைந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர்.மு.சிவசிதம்பரம் அவர்களை நேரில் சந்தித்து உத்தேச தென்கிழக்கு அலகு யோசனையில் உள்ள அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குப் பாதகமான விடையங்களையிட்டு அவரின் கவனத்துக்கு கொணர்ந்தார்.
--தொடரும்--

தொடர்ச்சி...

## ஆலயம் ஆழிக்குள் அமிழும் அபாயம்!

முன்னாலுள்ள கொங்கிறீட் வீதியை அவை குடைந்தெடுத்துள்ளன. ஆலயத்திற்கும் அச்சுறுத்தலாக இக்கடலரிப்பு உள்ளதாக ஆலயத்தலைவர் சு.சுரேஸ் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டும் இதேகாலப்பகுதியில் கடலரிப்பு மோசமாகவிருந்தது. அவ்வேளை கடல்நீர் சுனாமிபோல் ஆலயவளாகத்துள் சுமார் 100மீற்றர் அளவில் உட்புகுந்திருந்தது. அருகிலுள்ள தென்னந்தோப்புகளிலும் அதேநிலை. இவ்வருடம் இந்தநிலை. அடுத்தவருடம் வந்தால் கடல் ஆலயத்துள் புகும் என்பதில் ஐயமில்லை.

ஒலுவில் துறைமுக நிருமாணத்தால் இந்தநிலை இங்கு ஏற்பட்டுள்ளதாக பலரும் சந்தேகிக்கின்றனர். இது குறித்து சில வாரங்களுக்கு முன்னதாக அரங்கம் செய்திகள் பத்திரிகையிலும் ஒரு குறிப்பு வந்திருந்தது. ஆனாலும் அது குறித்த மேலதிக ஆய்வுகள் அவசரமாக தேவைப்படுகின்றன.

இருந்தபோதிலும் இம்முறை கடலரிப்பு ஏற்பட்டதும் உடனடித் தடுப்பு நடவடிக்கையாக திருக்கோவில் பிரதேசசபைத் தவிசாளர் இ.வி.கமலராஜன், பிரதேசசெயலகம், ஆலயம் மற்றும் கடலோரப்பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் விளையாட்டுக்கழகங்களின் இளைஞர்களின் உதவியோடு சுமார் 3500 மண்மூடைகளை அணையாகப் போட்டுள்ளார்.

அங்கு விஜயம்செய்த கடலோரபாதுகாப்புத் திணைக்களத்தின் கிழக்குமாகாணப் பொறியியலாளர் ரி.துளசிநாதன் மோசமான கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக ஒருவாரகாலத்துள் 300மீற்றருக்கு 20வருடகால உத்திரவாதமுடைய பாரிய மண்பொதிகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார்.

எனவே இங்கு நிரந்தரமான கல்வேலிப்பாதுகாப்பு தடை ஏற்படுத்த வேண்டுமென திருக்கோவில் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். 'அனர்த்தத்தை தணிப்பார்களா அரசியல்வாதிகள்?' என மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பு மாநகரில் 11 வருடங்கள் (1942 - 1953) - 03

அவர் சுவாரஸ்யமாக படிப்பித்த பொழுதும், அல்ஜிபெரா, எண் கணிதம் போன்றவற்றில் நல்ல புள்ளிகள் கிடைத்தாலும், ஜியோமட்ரியில் தேறமுடியாமையும் ஒரு காரணம்.

எனக்கு சித்திரமோ, முக்கோணங்களையோ கீற வராமல் போய்விட்டது. படிப்பில் அக்கறையின்மைக்கு மற்றுமொரு காரணம், எனக்கிருந்த ரேடியோ பைத்தியமாகும். கல்லூரியின் சுநஉவழச ஆக இருந்த குச.ளுழஅநசள என்னைக் கூப்பிட்டு, அவரது அறையிலிருந்து கபினட்டில், என்னைப் பற்றிய குறிப்புக்களை வாசித்துக்காட்டினார். அது என்னவெனில், சுயனழை ளுஉைமநெளள ஆகும்.

இன்னுமொரு காரணம், கிரிக்கெட், உடற்பயிற்சி விளையாட்டுக்களில் அதிக நாட்டம் இருந்தமையே. நூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் சிறந்த வீரனாக கருதப்பட்டேன். 16 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் கோஸ்டியில் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். குச. ஊசழறவாநச எங்களுக்கு பயிற்றுவித்தார். அவர் கல்வியை சென். தோமஸ் கல்லூரியில் கிரிக்கெட் கப்டனாகவும் இருந்தவர்.

ஜே.எஸ்.வி வகுப்பில் படிக்கும் பொழுது எழுத்துத் துறையிலும் பீதி ஏற்பட்டது. அந்நாட்களில், கொழும்பிலிருந்து வுஅைநள ழக ஊநலடழழ பத்திரிகை இருந்தது. அந்தப்பகுதியில் ஆல ஊழடடநபந என்ற கட்டுரையை எழுதியிருந்தேன். அதனைப் படித்த குச.ஊசழறவாநச வகுப்பிற்கு வந்து பாராட்டினார். அதுபோக வளரும் பருவத்தினருக்கு எழும் காதல், காம உணர்ச்சிகளும் ஏற்பட்டதனால் அறிவும், ஆர்வமும் ஏற்பட்டது.

அந்நாட்களில் சிரஞ்சீவி, மோகினி போன்ற சஞ்சிகைகள் வெளிவந்தன. அக்காலத்தில் சு.ஏ அகிலன் போன்றவர்களும் காதல்∴காமக்கதைகளை எழுதிவந்தனர். அந்த காலத்தில் அத்தகைய கதைகள் கெட்டவை என்ற கருத்து நிலவியது. ஆதலினால் பயந்து அந்தக் கதைகளை வாசித்து மனம் குழப்பமடைந்தது.

அதனால் கல்வியில் முழுக்கவனத்தையும் செலுத்தமுடியவில்லை. சென். மைக்கல் கல்லூரி வுாந ளுயைபெைகுளை என்ற மாதாந்த வெளியீடு ஒன்றை வெளியிட்டது. அதன் ஆசிரியர் குழுவில் என்னை சேர்த்துக்கொண்டனர். ஜே.எஸ்.சி வகுப்பில் நான் குன்டடித்தேன்.
இதற்கிடையில் கால்பந்து விளையாடிய பொழுது, ஒருவர் பந்தை உதைத்த வேகத்தில், என் வயிற்றில் அடி பட்டு நான் மயங்கி விழுந்தேன். என் உடல் பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் தங்கி ஒரு வருடம் பாடசாலைக் கல்வியில்லாமல் கழித்தது.
அதன் பின்னர், என் நுரையீரல் பாதிக்கப்பட்டதாகவும், நியூமோனியா நோய் ஏற்பட்டதாகவும், என் உடல் வீங்கி அவதிப்பட்டேன். என் பெற்றோர் துடியாய் துடித்தனர். என் அம்மா சகல விரதங்களையும் மேற்கொண்டு என் உயிர் பிழைக்க வேண்டும் என இறைவனை வேண்டிக்கொண்டார். இதன்பின் வீட்டில் இருந்து பல டொக்டர்கள் சிகிச்சை அளித்தனர். அவர்களது னுயைபெழளை பிழைத்ததனால், அக்காலத்தில் நீண்ட ஊசியைக் கொண்ட பென்சிலின் இன்செக்ஷனை ஒவ்வொரு நாளும் செலுத்தி என் உடலே புண்ணாக்கிவிட்டனர்.
இப்படி ஒருவருடம் கழிந்தது. அதற்குப் பின்னர் குருசாமி போன்ற சிரேஷ்ட வைத்தியர் மட்டக்களப்புக்கு வந்த பொழுது, எனக்கு நியூமோனியா இல்லை. ஈரலில் சிதழ்புண் இருப்பதாகக் கூறி, விளாம்பழம், வேகவைத்த கோழியீரல் போன்றவற்றை உண்ணவேண்டும் என்று பணித்தார். அதன்பின் மெதுவாக என் உடல் நலம் தேறியது.




அரங்கம் செய்திகள்

விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com

